பெரியார் திராவிடர் கழக வெளியீடு




# விடுதலைப் புலிகள்
## மீதான அவதூறுகளுக்கு மறுப்பு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விடுதலை இராசேந்திரன்

பெரியார் திராவிடர் கழகம்
வெளியீடு



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# விடுதலைப் புலிகள்

## மீதான அவதூறுகளுக்கு மறுப்பு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விடுதலை இராசேந்திரன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# விடுதலைப் புலிகள் மீதான அவதூறுகளுக்கு மறுப்பு

விடுதலை இராசேந்திரன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

@ விடுதலை இராசேந்திரன்

1983 ஆம் ஆண்டிலிருந்து விடுதலைப் புலிகளை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தி விடுதலைப் போராட்டத்தை சீர்குலைக்க இந்திய பார்ப்பனிய உளவுத்துறை நடத்திய சதிகளை 'ஈழப் பிரச்சினையில் உளவு நிறுவனங்களின் சதி' என்ற நான் எழுதிய நூல் ஓரளவு வெளிக்கொண்டு வந்தது.

ஆனால், தமிழ் ஈழத்தில் நிகழ்ந்த அரசியல் படுகொலைகள் பலவற்றுக்கும், விடுதலைப் புலிகளே காரணம் என்ற கருத்தை, உளவுத் துறையும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது காழ்ப்புணர்வு கொண்டவர்களும் பரப்பி வருகிறார்கள். ராஜிவ் சர்மா எழுதிய விடுதலைப் புலிகளுக்கு அப்பால்' என்ற நூலும், இதே அவதூறுகளையும் பழியையும் சுமத்தியது. இந்தக் குற்றச்சாட்டுகளை உரிய தரவுகளுடன் இந்த நூல் மறுத்துள்ளது. விடுதலைப் புலிகள் மீதான இத்தகைய அவதூறு பழிகளுக்கு மறுப்பாக வெளிவரும், முதல் நூல் இதுவாகவே இருக்கும் என்று கருதுகிறேன். இப்பணியை ஆற்றுவதில் பெரியார் திராவிடர் கழகம் பெருமையடைகிறது.
தமிழகத்தில் கட்சிகளைக் கடந்த, தமிழின இளைஞர்களின் பேரெழுச்சி உருவாகி வரும் சூழலில், இந்த நூல் — களங்கப்படுத்துவோருக்கும், விடுதலைப் புலிகள் மீது சேறுவாரி இறைப்போருக்கும் பதிலாக அமையும் என்றே நம்புகிறேன்; 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வார இதழில் 13 வாரங்கள் நான் எழுதிய இக் கட்டுரைத் தொடரே, இந்த நூல்; தொடர் வெளிவந்தபோது படித்து கருத்துகளைப் பகிர்ந்த கொண்ட தோழர்களுக்கும், இணைய தளங்களில், இன உடனுக்குடன் உலகம் முழுதும் ஏற்றி பரவச் செய்த கீற்று இணையதள தோழர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

உள்ளே....

முன்னுரையாக.....

கிட்டு வந்த கப்பலைக் காட்டிக் கொடுத்தவர்கள்

ராஜீவ் கொலை வழக்கில் மாத்தையாவை சேர்க்காதது ஏன்?

பிரேமதாசாவுக்கு எதிராக இந்திய உளவு நிறுவன சதிகள்

மூத்த அரசியல் தலைவர் அமிர்தலிங்கம் கொலையின் பின்னணி

இந்திய உளவுத் துறை அதிகாரி உன்னி கிருஷ்ணன்களின் கதை

1988—90 இல் இந்திய உளவுத் துறை பின்னிய சதி வலைகள்

புலிகள் இஸ்ரேலிடம் பயிற்சிப் பெற்றவர்களா?

இனப்படுகொலைக்கு வழிகாட்டிய 'இந்திய அமைதிப்படை'

கோப்புகளையே திருத்தினார், ப. சிதம்பரம்

விசாரணை ஆணையங்களை முடக்கிய காங்கிரஸ்

நிறைவுரையாக.....

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## முன்னுரையாக.....

ராஜீவ் சர்மா என்ற புதுடில்லி வழக்கறிஞர் எழுதிய "புலிகளுக்கு அப்பால்" Beyond the Tigers என்ற நூல் விடுதலைப் புலிகள் மீது சுமத்தியுள்ள அவதூறுகளுக்கு மறுப்பாக இந்த நூல் வெளிவருகிறது. ஊடகங்கள் – விடுதலைப் புலிகள் எதிர்ப்பாளர்கள் பலரும் இந்த அவதூறுகளைப் பரப்பி வருகின்றனர். தமிழ்நாட்டில் சவுக்குப் பதிப்பகம் தமிழில் சர்சைக்குரிய இந்நூலை வெளியிட்டுள்ளது; நூலை வெளியிட எனக்கு கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி அந்த நிகழ்விலேயே மறுப்புக்களை பதிவு செய்தேன்; அதனை மேலும் விரிவு படுத்தி பெரியார் திராவிடர் கழக வார ஏடான புரட்சிப் பெரியார் முழக் கத்தில் தொடர்ந்து கட்டுரைகளாக எழுதினேன்; அந்தத் தொகுப்புகளே இந்த நூலாக பல வாசகர்களின் வேண்டுகோளை ஏற்று வெளிவருகிறது.

ராஜீவ் சர்மா நூலின் மய்யமான கருத்தை இப்படிக் கூறலாம். அதாவது ராஜீவ் காந்தியை கொலை செய்தது விடுதலைப் புலிகள் தான் என்று உறுதி செய்கிறது இந்த நூல். ராஜீவ் கொலைக்குப் பின்னால், சில சர்வதேச சக்திகள் இருந்தன. அந்த சர்வதேச சக்திகளுக்காக விடுதலைப் புலிகள் இந்தக் கொலையை செய்து முடித்துவிட்டு, அதற்கு பிரதிபலன்களாக சக்தி வாய்ந்த கப்பல்களையும் ஆயுதங்க ளையும் பெற்றுக் கொண்டார்கள். ராஜிவ் காந்தி கொலைக்குப் பிறகு தான் புலிகளுக்கு கப்பல்களில் சக்தி வாய்ந்த ஆயுதங்கள் வரத் தொடங்கின. 'கூலிப் படைகள்' என்பதுபோல் விடுதலைப் புலிகள் இதில் செயல்பட்டிருக்கிறார்கள் என்பதே இந்நூலின் மய்யக் கருத்து இதுதான். எனவே தான் " விடுதலைப் புலிகளுக்கு அப்பால்...", என்று தலைப்பிடப் பட்டுள்ளது. இந்நூலுக்கு ராஜீவ் கொலை நடந்தபோது மத்திய புலனாய்வுத் துறையின் இயக்குனராக இருந்த விஜய்கரன் என்ற அதிகாரியே முன்னுரை எழுதியிருப்பதை சுட்டிக் காட்ட வேண்டும். அவர் இந்த நூல் ஒரு காவல்துறை டைரியைப் போல் இருப்பதாக குறிப்பிடுகிறார். போலீஸ் டைரியைப்போல் என்பதைவிட காவல்துறை டைரியிலிருந்தே அப்படியே பிரதி எடுக்கப் பட்டுள்ளது என்றே கூற வேண்டும். ஆக, புலனாய்வுத் துறையில் ஈடுபட்டிருந்த ஒரு அதிகாரியே இந்த நூலை உருவாக்குவதில் பெரும்பங்கு கொண்டிருப்பார் என்ற முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ராஜீவ் கொலையில் அன்னிய சக்திகளின் பங்களிப்பை நாம் மறுக்கவில்லை . அவர்களின் பங்களிப்பு மூடி மறைக்கப்பட்டுவிட்டதை நாம் 13 ஆண்டுகளுக்கு முன்பே சுட்டிக்காட்டி எழுதியுள்ளோம். 1998 ஆம் ஆண்டு நான் எழுதிய 'ராஜீவ் கொலையில் மறைக்கப்பட்ட உண்மைகள்' என்ற நூல் 26 தமிழர் உயிர்க் காப்பு வழக்கு நிதிக் குழு வால் வெளியிடப் பட்டு தமிழகம் முழுதும் பல்லாயிரக்கணக்கில் பரப்பப்பட்டது. 'தொடர்ந்து ராஜீவ் கொலையில் பதுங்கி நிற்கும் சாமிகள்' என்ற தலைப்பில் நான் எழுதி, பெரியார் திராவிடர் கழக சார்பில் வெளியிடப்பட்ட நூலில் சுப்ரமணி யசாமி, சந்திராசாமிகளுக்கு இதிலுள்ள தொடர்புகள் அம்ப லப்படுத்தப்பட்டது. அவர்கள் விசாரிக்கப்பட வேண்டி யவர்கள் என்பதில் நமக்கு கருத்து வேறுபாடு கிடையாது. அதைத் தொடர்ந்து வலியுறுத்தியும் வருகிறோம்.

ராஜீவ் கொலை தொடர்பாக மூன்று விசாரணைகள் நடந்தன. ஒன்று – கார்த்திகேயன் தலைமையிலான சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணை. இந்த விசாரணையின் அடிப்படையில் தான் 7 தமிழர்கள் 21 ஆண்டுகளாக சிறையில் வாடுகிறார்கள். அதில் 3 பேர் தூக்குத் தண்டனையை எதிர் நோக்கி இருக்கிறார்கள். மற்றொன்று – ராஜீவ் மரணமடைந்த 7 நாட்களில் ராஜீவுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருந்ததா என்பதைக் கண்டறிய உச்சநீதிமன்ற நீதிபதி ஜே.எஸ். வர்மா தலைமையில், 1991 ஆம் ஆண்டு மே 27 ம் தேதி அமைக்கப்பட்ட விசாரணை ஆணையம், ஓராண்டு காலத்தில் இந்த விசாரணை ஆணையம் தனது பணியை முடித்து 1992 ஜூன் மாதம் அரசிடம் பரிந்துரையை தாக்கல் செய்தது.

இந்த ஆணையம் நியமிக்கப்பட்டபோது பிரதமராக இருந்தவர் சந்திரசேகர் . சுப்ரமணியசாமி சட்ட அமைச்சர். அறிக்கையை தாக்கல் செய்த போது காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நரசிம்மராவ் பிரதமர். மத்திய மாநில அரசின் புலனாய்வுப் பிரிவுகளையும், தமிழகப் போலீசாரின் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் இந்த ஆணையம் கடுமையாகக் குறை கூறியது. அது மட்டுமல்ல, ராஜீவ் மரணமடைந்த திருப்பெரும்புதூர் கூட்டத்துக்கு வந்திருந்த காங்கிரசாரையும் கடுமையான வார்த்தைகளால், விமர்சனம் செய்திருந்தது. அங்கே காங்கிரசார், பொறுப்புணர்வோ, ஒழுங்கோ இல்லாதவர்களாக செயல்பட்டுள்ளனர் என்கிறது அந்த அறிக்கை. மூன்றாவதாக நியமிக்கப்பட்டது தான் உயர்நீதிமன்ற நீதிபதி

Tamileelam Archive

ஜெயின் ஆணையம். நீதிபதி சர்மா பாது காப்பு குறைபாடுகள் பற்றித்தான் தம்மால் விசாரிக்க முடியுமே தவிர, சதித் திட்டம் பற்றி தம்மால் விசாரிக்க முடியாது என்று மறுத்து விட்டார். இந்த நிலையில் ராஜீவ் கொலைக்குப் பின்னால் நடந்த சதி, பின்னணி காரணங்கள் தொடர்புள்ள தனி நபர்கள், நிறுவனங்கள் பற்றி நீதிபதி ஜெயின் ஆணையம் விசாரணை நடத்தியது. 12 முறை கால நீட்டிப்புப் பெற்று 6 ஆண்டுகாலம் விசாரணை நடத்திய இந்த ஆணையம், கடைசியில் அவசர அவசரமாக இடைக்கால அறிக்கை ஒன்றை மட்டும் சமர்ப்பித்து விட்டு ஒதுங்கிக் கொண்டது. ராஜீவ் கொலைக்கு விடுதலைப்புலிகள் மற்றும் தி.மு.க. ஆட்சியைக் குற்றம் சாட்டியதோடு, தமிழ் நாட்டு மக்களையும் குற்றவாளிகளாக அதன் அறிக்கை கூறியது – இது கடும்புயலைக் கிளப்பியது.

ராஜீவுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் படவில்லை என்று வர்மா ஆணையம் கூறிய பிறகு, அப்படி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படாததற்கு யார் காரணம்? அவர்கள் மீது, ராஜீவுக்காக கண்ணீர் வடிக்கும் காங்கிரஸ் கட்சி, நடவடிக்கை எடுத்ததா என்றால், எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை . நரசிம்மராவ் ஆட்சியில் பல முக்கிய கோப்புகள் காணாமல் போயின. சந்திராசாமி – சுப்பிரமணியசாமி வெளிநாட்டு உளவு நிறுவனங்களுடன் நடத்திய உரையாடல் பதிவுகள் அடங்கிய கோப்பும் காணாமல் விட்டது.
நரசிம்மராவின் குருவாக செயல்பட்டவர் சந்திரசாமி. பிரதமராக இருந்த சந்திரசேகரின் குருவும் சந்திரசாமிதான். அன்னியச் செலவாணி மோசடி தொடர்பாக பல வழக்குகளில் சிக்கியவர். சர்வதேசப் புள்ளிகளுடன் நெருக்கமான உறவு கொண்டவர். இவர் ஒரு பார்ப்பனர். நேர்மையான பொது வாழ்வுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த சமூக நீதிக் காவலர் வி.பி.சிங்கை களங்கப்படுத்தும் நோக்கத்தோடு, வி.பி.சிங் மகனுக்கு செயின்ட் கிட்ஸ் எனும் தீவில் ரகசிய வங்கிக் கணக்கு இருப்பதாக, ஒரு போலி ஆவணத்தைத் தயாரித்து, அன்றைய பிரதமர் நரசிம்மராவிடம் வழங்கி, வி.பி.சிங் மகனை கைது செய்ய இவர் முயற்சித்தார். இதற்கு பார்ப்பனர் நரசிம்மராவும் உடந்தை. பிறகு, அது போலி ஆவணம் என்பது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டதால், கிரிமினல் வழக்குக்கு உள்ளானார். ராஜீவ் கொலை தொடர்பாக – ஜெயின் ஆணையம், இந்த சந்திரசாமி, சுப்ரமணிய சாமிகளை விசாரணை நடத்தியது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஆனால் இவர்களின் சதிச் செயல்களுக்கு ஆதாரமான பல அரசுக் கோப்புகள், நரசிம்மராவ் ஆட்சியில் அழிக்கப்பட்டு விட்டன. இந்த செய்திகளையெல்லாம் 'அவுட்லுக்' பத்திரிகை ஆதாரங்களை முன் வைத்து எழுதியதை நான் எழுதிய "ராஜீவ் படுகொலையில் மறைக்கப்பட்ட உண்மைகள் " நூலில் 1998ம் ஆண்டில் பதிவு செய்துள்ளேன்.

ராஜீவ் சர்மாவின் இந்த நூல் பிரபாகரனை ஈழத்துக்குள் சென்று ஏன் பிடித்து வந்து விசாரிக்கவில்லை என்ற கேள்வியை எழுப்பி, "இந்தியாவின் ஒற்றுமைக்கும், ஒருமைப் பாட்டுக்கும் மிரட்டல் விடுக்கும் தீவிரவாத இயக்கத் தலைவர் பிரபாகரனைப் பிடிக்க ஏன் புதுடில்லி தைரியமான வெளிப்படையான தாக்குதலைத் தொடங்கக் கூடாது! (பக் 319) என்று கடும் கோபத்துடன் கேள்வி எழுப்புகிறது. ராஜீவ் கொலையில் நடந்த அன்னிய சதியை பிரபாகரனே மறைப்பதாகவும், எனவே செயற்கைக்கோள் வசதியைப் பயன்படுத்தி பிரபாகரனைப் பிடித்து வர வேண்டும் என்றும் இந்த நூல் வலியுறுத்துகிறது.

'எனது இந்தியா உயர்வானது' என்று முழக்கத்தைத் தந்து நாட்டுக்கே கவுரவத்தைத் தந்த தலைவர் ராஜீவ் மரணத்தால் இந்தியாவின் கவுரவமே அந்தரத்தில் ஊசலா டுவதை (பக் 318) எப்படி பொறுத்துக் கொண்டிருக்க முடியும் என்று ஆவேசமாக தேசபக்தி ' பேசுகிறது.

ராஜீவ் கொலையில் அன்னிய சக்திகளின் தலையீடு இருந்தது என்பது வேறு; அன்னிய சக்திகளின் கூலிப் படையாக விடுதலைப் புலிகள் செயல்பட்டார்கள் என்பது வேறு. இந்த நூல் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது, அப்படி ஒரு இழிவான பழியை வெளிப்படையாகவே சுமத்துகிறது. இந்திய உளவுத் துறையும், ஊடகங்களும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராக பரப்பிவரும் ஆதாரமற்ற அவதூறுகள் அத்தனையும் இந்த நூலில் இடம் பிடித்துள்ளன. இந்த அவதூறுகளையும் குற்றச்சாட்டுகளையும் உரிய ஆதாரங்களோடு இந்நூலில் மறுக்கப்பட்டுள்ளன.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## கிட்டு வந்த கப்பலைக் காட்டிக் கொடுத்தவர்கள்

ராஜீவ் சர்மாவின் 'புலிகளுக்கு அப்பால்' என்ற இந்நூல், உளவுத் துறையின் குரலை அப்படியே பிரதிபலிக்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது உளவுத் துறை பரப்பிய 'அவதூறு' பழிகளை அப்படியே நியாயப்படுத்துகிறது. அதே நேரத்தில், உளவுத்துறை மீது எந்த ஒரு 'தூசும்' விழாமல் நியாயப்படுத்துவதிலிருந்தே, இந்த நூலின் பின்னணியை புரிந்து கொள்ள முடியும்.

ஈழத் தமிழர் பிரச்சினையில் குழப்பங்கள், படு கொலைகளை உருவாக்கி திட்டமிட்டு, அரங்கேற்றிய சதிக் கும்பலே, உளவு நிறுவனங்கள் தான் என்ற உண்மையை முற்றாக ஒதுக்கிவிட்டு, உளவுத் துறையின் ஒலி குழலாகவே ஒலிக்கிறது இந்த நூல்.

1983 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவில் போராளிகளுக்குப் பயிற்சி தந்த காலத்திலிருந்தே 'ரா' உளவு நிறுவனங்களின் பிரித்தாளும் சூழ்ச்சிகள் தொடங்கி விட்டன. இந்திய உளவு நிறுவனத்தோடு நெருக்கமாக இருந்தவரும், உளவு நிறுவனங்கள் போற்றிப் பாராட்டுகிற நூலை எழுதியவருமான எம் ஆர். நாராயணசாமி, தனது இலங்கையின் புலிகள்' (Tigers of Lanka) என்ற நூலில் — அவரே, இந்த உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார். விடுதலைப்புலிகள் என்ற அமைப்பு மட்டும் உளவு நிறுவனத்தின் பிடிக்குள் சிக்குவதற்கு தயாராக இல்லை. நாட்டின் விடுதலையில் மட்டுமே அவர்கள் உறுதியாக இருந்தார்கள். அதுதான் அவர்களின் "குற்றம்"; ஆனால் ஈழத்தில் தொடங்கிய தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தின் வழியாக இலங்கை அரசுக்கு நெருக்கடி தந்து, இந்தியாவில் கட்டுப்பாட்டுக்குள் ஈழப் போராளிகளைக் கொண்டு வருவதுதான் இந்தியாவின் திட்டம். அதை செயல்படுத்துவதே உளவு நிறுவனங்களின் வேலை.

முதலில் 'டெலோ' என்ற அமைப்பை உளவு நிறுவனம் தனது 'கைப்பாவை 'யாக்கியது. அந்த அமைப்பு செயலிழந்தவுடன் ஈ.பி.ஆர்.எல்.எப். என்ற அமைப்பை தங்களது பிடிக்குள் கொண்டு வந்தார்கள். பிறகு பல்வேறு போராளிகள் குழுக்களில் ஏற்பட்ட பிளவுகளைப் பயன்படுத்தி விலகி வந்தவர்களை எல்லாம் இணைத்து 'ஈழ தேசிய ஜனநாயக விடுதலை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

முன்னணி' (ஈ.என்.எல்.எப்) என்ற அமைப்பை உளவு நிறுவனம் உருவாக்கியது. இந்திய உளவுத் துறைக்கு ஆதரவாக இந்து பார்ப்பன நாளேட்டில் எழுதி வந்த டி.பி.எஸ். ஜெயராஜ் போன்ற பத்திரிகையாளர்களே, இந்த உண்மைகளை ஒப்புக் கொண்டு எழுதியிருக்கிறார்கள். உளவுத் துறை உருவாக்கிய , இந்த குழுக்களை விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு எதிராகவும், தேவைப்படும்போது இலங்கை ஆட்சிக்கு எதிராக வும் உளவு நிறுவனங்கள் பயன்படுத்தி வந்தன.

கடைசியாக உளவு நிறுவனம் தனது ஏவல் படையாக பிடித்து வைத்த 'ஈ.என்.டி.எல்.எப்' அமைப்புக்கு தலைவராக சென்னையில் கொலை, கடத்தல் வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டு, 1989 ஆம் ஆண்டில் தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, ஓராண்டு சிறையில் அடைக்கப்பட்ட டக்ளஸ் தேவானந்தாவை தனது கைப்பிடிக்குள் உளவுத் துறையினர் கொண்டு வந்தனர். தேசியப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் சிறையிலிருந்தவரை விடுதலை செய்து வெளியே கொண்டு வர முயற்சித்தவர்களே, 'ரா' உளவுத் துறையினர் தான். பிறகு உளவுத் துறையினரே, இந்திய ராணுவ விமானத்தை ஏற்பாடு செய்து, டக்ளஸ் தேவானந்தாவை — அந்த ராணுவ விமானத்தில் ஏற்றி யாழ்ப்பாணம் கொண்டு போய் துரோகம் — குழி பறிப்பு வேலைகளுக்காக இறக்கி விட்டார்கள். இந்த உண்மையை 'டெகல்கா வார' ஏடு (ஜூலை 1, 2006) வெளிக்கொண்டு வந்தது.
ராஜீவ்காந்தி — ஜெயவர்த்தனாவுடன் ஒரு ஒப்பந்தத்தைப் போட்டுக் கொண்டு, அதை தமிழர்கள் மீது ஆயுத முனையில் திணித்தார். இந்தியாவின் கைப்பாவைக் குழுக்கள் கண்களை மூடிக் கொண்டு ஒப்பந்தத்தை ஆதரித்தன. உண்மையான விடுதலைப் போராட்டத்தை நடத்திய விடுதலைப் புலிகள் மட்டும் ஏற்க மறுத்தனர். ஆனாலும் இந்திய அதிகார வர்க்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மிரட்டி பணிய வைத்தனர். 'இந்தியாவை பகைத்துக் கொள்ள விரும்பவில்லை: தமிழ் மக்களை இந்தியா பாதுகாக்கும் என்று நம்பி, ஆயுதங்கள் ஒப்படைக்கிறோம்' என்று, விடுதலைப் புலிகள் தங்கள் ஆயுதங்களை ஒப்படைத்தனர். விடுதலை புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்துக் கொண்டிருந்த கால கட்டத்தில் சில போட்டிக் குழுக்களுக்கு உளவுத் துறை ஆயுதங்களை வழங்கி வந்தது. விடுதலைப்

Tamileelam Archive

புலிகள் தலைவர் பிரபாகரன், இதை வீடியோ படங்களுடன் ஆதாரத்தோடு அமைதிப்படை தளபதி ஹர்கிரத் சிங்கிடம் எடுத்துக் கூறினார். ஹர்கிரத் சிங்கும் உண்மையே என்று ஒப்புக் கொண்டார். இப்படி செய்வது தவறு, என்று இந்திய ராணுவத் தளபதியாக இருந்த கே.சுந்தர்ஜியிடம் சிங் புகார் கூறினார். சுந்தர்ஜியோ, 'இது உயர்மட்டத்தின் முடிவு என்ற கூறிவிட்டார். இவையெல்லாம் ஹர்கிரத்சிங்கே வெளிப்படுத்திய உண்மைகள், மறுக்க முடியாது. அப்போதெல்லாம் ஹர்கிரத் சிங்கை பிரபாகரன் நேரில் சந்தித்துப் பேசி வந்தார்.'

ஒரு கட்டத்தில் நேரில் பேசுவதற்கு பிரபாகரன் வரும்போது பிரபாகரனை சுட்டு விடுமாறு ராஜிவின் ஆலோசனைக் குழு இலங்கைத் தூதுவரக இருந்த ஜெ.என். தீட்சத் வழியாக உத்தரவிட்டது. ஆனால், நேர்மையான அதிகாரியாக இருந்த ஹர்கிரத்சிங் இந்த படுபாதகத்தை தன்னால் செய்ய முடியாது என்று மறுத்துவிட்டார். பிரபாகரன் தலைமையிலான விடுதலைப்புலிகள் என்ற அமைப்பை, அதன் போராட்டத்தைத் தொடரவிட்டால், அவர்கள் தமிழ் ஈழப் போராட்டத்தை விரைவுபடுத்தி விடுவார்கள் என்பதோடு, இந்தியாவின் ஏவல் படையாக எந்த காலத்திலும் மாறமாட்டார்கள் என்பதை உறுதியாக புரிந்து கொண்ட இராஜீவ் காந்தியும், அவரது ஆலோசனை குழுவும், உளவு நிறுவனமும், விடுதலைப்புலிகளின் தலைமையை தீர்த்துக் கட்டுவதற்கு திட்டங்கள் தீட்டின. விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்தே ஆட்களைப் பிடித்தார்கள். பிரபாகரனின் நம்பிக்கைக்கு உரிய தளபதியாக செயல்பட்ட மாத்தையா அந்த சதிவலையில் வீழ்ந்தார். விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து கொண்டே இந்திய உளவு நிறுவனத்துக்காக ரகசியமாக செயல்பட்டு வந்தார். இந்தப் பின்னணியில் தான் ஈழத்தில் நடந்த ஒவ்வொரு செயல்பாடுகளையும் பார்க்க வேண்டும். ராஜீவ் சர்மாவின் இந்த நூல் உளவு நிறுவனங்களின் இந்த சதியை சூழ்ச்சிகளைப் பற்றி எதையும் குறிப்பிடவில்லை. ஆனால் விடுதலைப் புலிகள் மீது இந்த சதிகார நிறுவனங்கள் தமிழினப் பகைவர்கள் சுமத்திய களங்கத்தையும், வீண் பழிகளையும் அப்படியே நியாயப்படுத்துகிறது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஒரு உதாரணத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ராஜீவ் மரணத்தைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவரான கிட்டு வந்த கப்பல் ஒன்றை இந்திய கப்பல் படைவழி மறித்தது. இந்த நிகழ்வை இந்த நூல் உண்மைக்கு மாறான பொய்யான தகவல்களை தந்து நியாயப்படுத்துகிறது. ராஜீவ் கொலையை நடத்தி முடித்ததற்காகவே அதன் வெகுமதியாக' விடுதலைப் புலிகள் நவீன ஆயுதங்களையும், நவீன கப்பல்களையும் வெளிநாட்டு சக்திகளிடமிருந்து பெறத் தொடங்கினர் என்று இந்த நூல் குற்றம் சாட்டுகிறது. அப்படி ராஜீவ் கொலைக்காக கிடைத்த நவீன ஆயுதங்களை வெளிநாட்டு சக்திகளிடமிருந்து பெற்று கப்பலில் கொண்டு வரும்போதுதான் கிட்டு பிடிபட்டார் என்று அபாண்டமாக பழி சுமத்துகிறது, இந்த நூல். உளவுத் துறையின் அவதூறுகளையும், பழியையும் நியாயப்படுத்துவதற்காக திட்டமிட்டு உண்மைகளையே மறைத்து எழுதியிருக்கிறார் நூலாசிரியர்.

"1993 ஜனவரி 13 ஆம் தேதி சென்னை துறைமுகத்திலிருந்து 700 கி.மீட்டர் தொலைவில் இக்கப்பல் இடைமறிக்கப்பட்டது" என்கிறார் நூலாசிரியர். இந்திய எல்லைக்கு அப்பால் சர்வதேச கடல் பகுதியில் பயணம் கொண்டிருந்த ஒரு கப்பலை, இந்திய கப்பல்படை விரோதமாக சென்று வழிமறித்ததை இந்த நூல் குறிப்பிடாமல் அப்படியே மூடி மறைக்க விரும்புகிறது. 700 மைலுக்கு அப்பால் சென்ற கப்பல்' என்ற வார்த்தையோடு நிறுத்தி விடுகிறார்கள். சர்வதேச கடற்பரப்பில் கப்பலை மடக்கி, இந்திய கடல் எல்லைக்குள் கொண்டு வரப்பட்ட உண்மையை மறைத்து விட்டு, சென்னை துறைமுகத்திலிருந்து 10 கி.மீ. தொலைவில் இருக்கும் போது, அதாவது இந்திய கடற்பரப்பில் இருக்கும்போது அக்கப்பல் கிட்டுவால் வெடிக்கச் செய்யப்பட்டது என்று குற்றம் சாட்டுகிறார்கள்.

உண்மையில் என்ன நடந்தது? கிட்டுவின் கப்பல் — சர்வதேச கடல்பரப்பில் 440 கடல் மைலுக்கு அப்பால் வந்து கொண்டிருந்தபோது, உளவுத் துறைக்கு மாத்தையா வழியாக அத்தகவல் கிடைக்கப் பெற்றது. கப்பலை வழி மறிக்க இந்திய கப்பல் படை சென்றது. கப்பலை இந்திய கடல் எல்லைக்குள் கொண்டு வருமாறு கப்பல் படையினர் மிரட்டினர். அதற்கு கிட்டு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஒத்துழைக்காத நிலையில், அதிரடிப்படையினர் ஹெலிகாப்டர் துணையுடன் கப்பலுக்குள் குதித்தனர். அப்போது கிட்டுவும், உடன் வந்த போராளிகளும் தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டு வீரச்சாவைத் தழுவினர்.

கிட்டு என்ற மாவீரன் தனது இரு கால்களையும் இழந்த பிறகும் உள்ள உறுதியோடு விடுதலைக்காக களத்தில் நின்ற போராளி. இந்தியாவின் துரோகத்தினால் தன்னைத் தானே தீயிட்டுக் கொண்டு, வீரமரணத்தை தழுவினார்.

கப்பலில் உயிருடன் பிடிபட்ட 9 போராளிகள் மீது இந்திய அரசு வழக்கு தொடர்ந்தது. அந்த வழக்கு ஆந்திர உயர்நீதிமன்றத்தில் நடந்தது. சம்பவம் நடந்த இடம் ஆந்திர மாநிலத்துக்கு உட்பட்டது. இந்திய கப்பல் படை சர்வதேச பரப்பில் அத்துமீறி நுழைந்து, மேற்கொண்ட இந்த நடவடிக்கை சட்ட விரோதமானது என்று அறிவித்த ஆந்திர உயர்நீதிமன்றம் 9 புலிகளையும் விடுதலை செய்தது மட்டுமல்ல, கப்பல் புறப்பட்ட இடமான மத்திய அமெரிக்காவுக்கு அவர்களை அரசாங்கமே சொந்த செலவில் திருப்பி அனுப்ப வேண்டும் என்று கன்னத்தில் அறைந்தது போல் தீர்ப்பளித்தது. ஈழ விடுதலையில் இந்தியாவின் சதிக்கும், கீழறுப்பு நடவடிக்கைகளுக்கும், இந்திய நீதிமன்றமே தந்த செருப்படிதான் இந்த தீர்ப்பு. இந்த உண்மைகளை எல்லாம் மறைத்துவிட்ட இந்த நூல், இந்த வழக்கு தமிழ்நாடு நீதிமன்றத்தில் நடந்ததாக ஒரு பொய்யான தகவலைத் தருவதோடு, இந்த விசாரணைக்காக அரசு 10 கோடி ரூபாய்க்கு மேல் செலவிட்டும் பலன் கிடைக்காமல் போய் விட்டதே என்று கவலைப்பட்டு வருந்துகிறது.

இந்தக் கப்பல் பிடிபட்டதற்கு, புலிகள் இயக்கத்திற்குள்ளே நடந்த துரோகம் பற்றி இந்த நூல் மவுனம் சாதிக்கிறது. பிரபாகரனின் நம்பிக்கைக்கு உரிய தளபதியாக செயல்பட்ட மாத்தையாதான். இந்த கப்பல் வரும் சேதியை 'ரா' உளவு நிறுவனத்துக்கு தந்தார் ஆதாரங்களோடுதான், கூறுகிறோம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## ராஜீவ் கொலை வழக்கில் மாத்தையாவை சேர்க்காதது ஏன்?

இந்திய உளவு நிறுவனம் விரித்த வலையில் மாத்தையா வீழ்ந்தார் என்று விடுதலைப் புலிகள் இயக்கம் உறுதி முடிவுக்கு வந்தது. அதற்கு அழுத்தமான காரணங்கள், சூழ்நிலை சந்தர்ப்பங்களின் அடிப்படையிலான சான்றுகள் ஏராளம் இருக்கின்றன. ராஜீவ் சர்மாவின் இந்த நூல் மாத்தையா மீது எந்தக் குற்றமும் இல்லாதது போலவும், பிரபாகரன், அவரை சித்திரவதை செய்து கொன்றார் என்றும் அபாண்டமாக குற்றம் சாட்டுகிறது. நூலாசிரியர் இவ்வாறு எழுதுகிறார்:

"பிரகாகரன் ஆயுதமேந்திய சகப் போராளிகளுடன் கூட இரக்கமற்ற முறையில் நடந்து கொள்வார். 1980—க்கும் 1990—க்கும் இடைப்பட்ட காலத்தில் சக தமிழ் இயக்கங்களைச் சார்ந்த 300 போராளிகளை மற்றும் எல்.டி.டி ஈ. இயக்கத்திற்குள்ளேயே அவருக்கு எதிர்ப்பு தெரிவித்த பல முக்கிய தலைவர்களைக் கொன்றார். இது சம்பந்தமாக நடந்த மிக அதிர்ச்சிகரமான சம்பவம் மாத்தையாவின் கொலையாகும். பிரபாகரன் மாத்தையாவை இரட்டை வேடம் ஆடுகிறார் என நினைத்தார். மாத்தையா கொடுத்த தகவலின் பேரிலேயே எச்.வி அகத் கப்பல் (கிட்டு வந்த கப்பல்) அழிக்கப்பட்டது என்ற தகவல் பரவியது. ஏராளமான வெடிமருந்துகள் மற்றும் ஆயுதங்களை ஏற்றி வந்த அக்கப்பல் அழிக்கப்பட்டதால் எல்.டி.டி.ஈ.க்கு கோடிக் கணக்கில் இழப்பு ஏற்பட்டது. மாத்தையா துரோகி என குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார்; தனிச் சிறையில் அடைக்கப்பட்டார்" (பக். 174) என்றெல்லாம் எழுதுகிறார் நூலாசிரியர்.

மாத்தையா மீது சந்தேகத்தின் அடிப்படையில் ஒரு வீண் பழியை சுமத்தியது போலவும், கிட்டு வந்த கப்பலை மாத்தையா காட்டிக் கொடுத்தார் என்று, ஆதாரம் ஏதுமின்றி தகவல்களைப் பரப்பினார் என்றும் இந்த நூல் பதிவு செய்கிறது. மாத்தையா ஒரு வருட காலம் விசாரணைக் கைதியாக இருந்த போதும் சரி, பிறகு அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டபோதும் சரி, மாத்தையாவை பிரபாகரன் சந்திக்கவே இல்லை என்றும் நூல் குற்றம் சாட்டுகிறது. இதையெல்லாம் விட மாத்தையாவுக்கு மரண தண்டனை

Tamileelam Archive

வழங்கியதற்கு பிரபாகரனுக்கு உள்நோக்கம்' உண்டு என்ற முடிவுக்கும் நூலாசிரியர் வருகிறார். இவ்வாறு எழுதுகிறார்:

"மாத்தையாவின் கதை முடிந்து விட்டது. ஆனால், மாத்தையா உண்மையிலேயே இரட்டை வேடம் ஆடினாரா அல்லது அவர் மிகப் பலம் பொருந்தியவராக உருவானதால் பிரபாகரன் அவரை அழித்தாரா என்பது யாருக்கும் தெரியாது" என்று 'யாருக்கும் தெரியாத' ஒரு உண்மையை தனக்கும் தெரியாத ஒன்றை, பிரபாகரனை களங்கப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு நஞ்சை கக்குகிறார், இந்நூலாசிரியர். பிரபாகரனை இழிவுபடுத்தி, அவரது மாண்பையும் கவுரவத்தையும் நேர்மையையும் களங்கப்படுத்தும் உளவுத் துறையின் எண்ணத்தை அப்படியே பிரதிபலிக்கிறார் நூலாசிரியர்.

மாத்தையாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தியா டுடே' வெளியிட்ட சிறப்புக் கட்டுரை ஒன்றை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இத்தனைக்கும் இந்தியா டுடே' புலிகளின் ஆதரவு பத்திரிகை அல்ல; மாத்தையா இந்தியாவின் வலையில் வீழ்ந்தார் என்பதை, இந்த செய்தி உறுதிப்படுத்துகிறது. 1994 ஆம் ஆண்டு இந்தியாடுடே' இதழில் (மார்ச் 16) அதன் செய்தியாளர்கள் எழுதிய விரிவான கட்டுரையிலிருந்து ஒரு முக்கிய பகுதி இது.

"1993 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் தேதி — சர்வதேசக் கடலில் சென்று கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் 'எம்.வி. அகத்' கப்பலை — இந்தியாவின் கடலோரப் பாதுகாப்புப் படை சுற்றி வளைத்தபோது, கப்பலில் இருந்த, விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதி கிட்டு, கப்பலுக்குத் தீ வைத்துக் கொண்டு, தன்னைத் தானே அழித்துக் கொண்டார். கிட்டு கப்பலில் வரும் தகவலை இந்திய உளவு நிறுவனத்துக்கு முன்கூட்டியே தந்தது மாத்தையாவும், யோகி யோக ரத்தினமும் தான் என்று பிரபாகரன் குற்றம் சாட்டினார். 1989 — 90 இலங்கை நடத்திய பேச்சு வார்த்தையில் அரசியல் தீர்வுக்கு உடன்பட வேண்டும் என்று கூறியதை, பிரபாகரன் ஏற்கவில்லை. இந்தக் கருத்து வேறுபாடு, மேலும் தீவிரமடைந்தது தொடர்ந்து 1991—ல் நடந்த ஆணையிரவு தாக்குதலில் கிடைத்த வெற்றி, கடும் பின்னடைவை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சந்தித்தது. இதற்குத் காரணம் மாத்தையாவே என்று குற்றம் சாட்டினார் பிரபாகரன். தொடர்ந்து 1992 மே மாதத்தில் மாத்தையாவுக்கு தரப்பட்ட பொறுப்புகளிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டார். தொடர்ந்து நவம்பரில் யாழ்ப்பாண மருத்துவமனைக்கு அருகே பிரபாகரன் தங்கியிருந்த மறைவிடம், குண்டு வீச்சுக்கு உள்ளானது. புலிகளின் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில், அவரது உதவியாளர் 1993 ஜன 7ல் கொல்லப்பட்டார். அடுத்த பத்து நாட்களில் ஜனவரி 16—ல் கிட்டு வந்த கப்பல் இந்திய கப்பல் படையால் சுற்றி வளைக்கப் பட்டது. மாத்தையாவும், அவரது பழைய நண்பரான என்ஜினியர் என்று அறியப்பட்ட மாணிக்கவாசகம் என்பவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். மாத்தையாவின் ஆதரவாளர்கள் 120 பேர் கைது செய்யப்பட்டனர். விடுதலைப்புலிகளின் ராணுவ நீதிமன்றம் — 1993 டிசம்பர் 19 ஆம் தேதி வழங்கிய தீர்ப்பில் கிட்டுவின் மரணத்துக்குக் காரணமானவர் மாத்தையா தான் என்றும், 'ரா' (RAW) உளவு நிறுவனத்தோடு சேர்ந்து பிரபாகரனை கொல்வதற்கு மாத்தையா சதித் திட்டம் தீட்டினார் என்றும், ரா'வின் முகவராக மாத்தையா செயல்பட்டார் என்றும் புலிகளின் நீதிமன்றம் உறுதிப்படுத்தியது".

இதிலிருந்து என்ன தெரிகிறது?

1992 ஆம் ஆண்டில் மாத்தையா புலிகள் இயக்கம் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு விடுகிறார். 1989 ஆம் ஆண்டிலிருந்தே புலிகள் இயக்கத்தில் மாத்தையாவின் தலைமையில் அவரது ஆதரவாளர்கள் குழு ஒன்று இந்தியாவின் உளவு நிறுவனத்துடன் ரகசிய தொடர்பில் செயல்படத் தொடங்கிவிட்டது.

1991 ஆம் ஆண்டு ஆனையிரவில் நடந்த முதல் தாக்குதலில் புலிகள் கடும் பின்னடைவைச் சந்திக்க நேர்ந்தது. 123 பெண் புலிகள் உட்பட 573 புலிகள் இந்தப் போரில் தான் உயிர் பலியானார்கள். இயக்கத்துக்குள்ளே மாத்தையா நடத்திய சதிதான் இதற்குக் காரணம் என்ற தகவல் புலிகளின் உளவுப் பிரிவு கண்டறிந்து பிரபாகரனுக்கு தெரிவித்தது. பொறுப்பு களிலிருந்து மாத்தையா விடுவிக்கப்பட்டவுடன், யாழ்ப்பாண மருத்துவமனைக்கு அருகே பிரபாகரன் தங்கியிருந்த ரகசியமான மறைவிடம் குண்டுவீச்சுக்கு உள்ளானதோடு பொட்டு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அம்மான் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதில் அவரது உதவியாளர் பலியாகியுள்ளார். மாத்தையாவிடம் நடத்திய விசாரணையில் பல்வேறு உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்தன. 1993 ஜனவரியில் கிட்டுவின் உயிர்த் தியாகத்தை தொடர்ந்து மாத்தையா தலைமையிலான விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி என்ற புலிகளின் அரசியல் பிரிவு கலைக்கப்படுவதோடு துணைத் தலைவர் என்ற 2ஆம் நிலையிலிருந்து மாத்தையா நீக்கப் பட்டவுடன் பிரபாகரனுக்கு எதிராக வெளிப்படையாகவே போர்க்கொடி உயர்த்தினார் மாத்தையா. அப்போது கொக்குவில் என்ற பகுதியில் விடுதலைப்புலி ஆலோசகர் பாலசிங்கம் தங்கியிருந்தார். அவரது வீட்டுக்குப் போன மாத்தையா, அங்கே தாம் பிரபாகரனை எதிர்த்து உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கப் போவதாக அறிவித்தார். இதை அடேல் பாலசிங்கம் தனது நூலில் சுட்டிக் காட்டியுளார்.

பிரபாகரனின் மெய்க்காப்பாளராக இருந்த ஒரு விடுதலைப்புலி தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்டு, வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவர் வேலூர் சிறையிலிருந்து உளவுத்துறை உதவியுடன் ரகசியமாக விடுவிக்கப்பட்டார். பிரபாகரனை கொல்வதற்கு வேலூர் சிறையிலே திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அதனடிப்படையிலே தான் விடுதலை செய்யப்பட்டார் என்ற அதிர்ச்சியான தகவல் மாத்தையாவிடம் நடத்திய விசாரணையிலிருந்து தெரிய வந்தது.
மாத்தையாவின் கொழும்புப் பயணங்களும் இந்திய உளவுத்துறை அதிகாரிகளுடன் அவருக்கிருந்த தொடர்புகளும் விசாரணையில் வெளிவந்தது.

இங்கே நான் எடுத்துக்காட்டிய 'இந்தியா டுடே' கட்டுரையில் கடைசியாக கூறப்பட்ட, இரண்டு வாக்கியங்கள் மிகவும் முக்கியமானதாகும். "பிரபாகரன் இனிமேல் தான் மிகக் கடுமையான சோதனைகளை எதிர்க்கொள்ளப் போகிறார் என்ற கருத்தில் உளவு நிறுவனம் மிகவும் திருப்தியடைந்திருந்தது" (Indian intelligent agencies are convinced, he (Prabhakaran) is facing his toughest test yet); அதாவது மாத்தையாவின் துரோக நடவடிக்கைகள் தொடங்கியதற்குப் பிறகு, அவரது கீழறுப்பு நடவடிக்கைகள் வெற்றி பெற்றுவிடும் என்ற நம்பிக்கையில் உளவுத் துறை திளைத்திருந்தது என்று எழுதியிருப்பதிலிருந்தே உளவுத் துறையுடன் மாத்தையாவுக்கு உள்ள

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தொடர்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடைசியாக, 'ரா' உளவு நிறுவனத்துக்கு "மாத்தையா சிறந்த சொத்துதான் என்றால், மாத்தையாவின் மர்மமான நடவடிக்கைகள் மேலும் அதிகமாகலாம். – (But if Mahathya was indeed a 'RAW' asset, there might be more to Mahathya mystery" – India Today) – இந்தியா டுடே கட்டுரையின் இந்த இறுதி வாசகம் மாத்தையா 'ரா' உளவு நிறுவனத்தின் வலையில் சிக்கியதை உறுதிப்படுத்துகிறது.

இவை எல்லாவற்றையும் விட மற்றொரு முக்கிய செய்தியை சுட்டிக்காட்ட வேண்டும். 1991 ஆம் ஆண்டு ராஜீவ் கொலை நடக்கிறது. அப்போது பிரபாகரனுக்கு அடுத்த இரண்டாம் நிலை தலைவர் மாத்தையா; 1992 ஆம் ஆண்டு, இந்திய உளவுத் துறை குற்றப் பத்திரிகை தாக்கல் செய்கிறது. அதில் பிரபாகரன் முதல் குற்றவாளியாக சேர்க்கப்பட்டார். உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மன் குற்றவாளியாக சேர்க்கப்பட்டார். ஆனால் இரண்டாம் நிலை தலைவராக இருந்த மாத்தையாவின் பெயர் குற்றப் பத்திரிகையில் இடம் பெறவில்லை. இந்திய உளவுத் துறை அவர் பெயரை மட்டும் விட்டு விடுகிறது; ஏன்? 1989 ஆம் ஆண்டில் மாத்தையா
பிரபாகரனை சுட்டுக் கொன்றுவிட்டார் என்ற செய்தியை உளவுத்துறை வெளியிட்டு, அதை ஊடகங்கள் பரப்பியதையும், 1994 ஆம் ஆண்டு வெளிவந்த இந்தியா டுடே' கட்டுரையையும் ராஜீவ் கொலை வழக்கில் மாத்தையாவின் பெயர் சேர்க்கப்படாததையும் இணைத்துப் பார்த்தால் மாத்தையா இந்திய உளவுத் துறையின் சதியில் வீழ்ந்து விட்டார் என்ற முடிவுக்கே வர முடியும். இவ்வளவு பின்னணிகளையும் மறைத்து ராஜீவ் சர்மாவின் இந்த நூல், மாத்தையா தன்னை விட செல்வாக்குள்ள தலைவராக வளருகிறார் என்ற காரணத்தால், பிரபாகரன் மாத்தையாவுக்கு மரண தண்டனை விதித்திருக்கலாம் என்ற சந்தேகத்தைக் கிளப்புவது, என்ன நியாயம்? என்ன நேர்மை? பிரபாகரனை தீர்த்துக் கட்டுவதற்கு இந்திய உளவுத் துறையால் உருவாக்கப்பட்டவரே மாத்தையா என்ற உண்மையை மறைத்து பிரபாகரன் மீதே குற்றம் சாட்டும் இந்த நூலாசிரியர், கண்மூடித்தனமாக ஈழத்தில் நடந்த கொலைகள் எல்லாவற்றையும் விடுதலைப்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

புலிகள் தான் செய்தனர் என்று எந்த ஆதாரமும் இன்றி குற்றக் கூண்டில் ஏற்றி விடுகிறார்.

இலங்கை அதிபர் பிரேமதாசா , தமிழ் அய்க்கிய விடுதலை கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம், புளோட் இயக்கத் தலைவர் முகுந்தன், இலங்கையின் ராணுவ அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னே என்று இவர்கள் அனைவரையும் விடுதலைப் புலிகள் கொலை செய்தார்கள் என்று இந்த நூல் திரும்ப திரும்ப குற்றம் சாட்டுகிறது. விடுதலைப் புலிகள் தான் இந்தக் கொலைகளை செய்தார்கள் என்பதற்கு எந்த ஒரு சான்றையும் முன் வைக்கவில்லை. உளவுத் துறை கட்டவிழ்த்துவிட்ட பொய்யுரைகளை அப்படியே திரும்பவும் 'கிளிப்பிள்ளை ' போல மீண்டும் மீண்டும் கூறுகிறார், நூலாசிரியர். இந்த வீண்பழிகளை நம்மால் ஆதாரங்களுடன் மறுக்க முடியும்.

முதலில் பிரேமதாசா பிரச்சினைக்கு வருவோம்; பிரேமதாசா பதவிக்கு வந்த காலம் — சூழ்நிலை எத்தகையது? இதை நாம் பார்க்க வேண்டும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## பிரேமதாசாவுக்கு எதிராக இந்திய உளவு நிறுவன சதிகள்

1988 ஆம் ஆண்டு டிசம்பர் 29 ஆம் தேதி ஜெயவர்த்தனாவைத் தொடர்ந்து, பிரேமதாசா அதிபர் பதவிக்கு வந்தார். அப்போது, வடக்கு — கிழக்கு மாநிலங்களில் இந்திய ராணுவம் நிலை கொண்டிருந்தது. ராஜீவ் — ஜெயவர்த்தனே சமரச ஒப்பந்தத்தை துப்பாக்கி முனையில் இந்திய ராணுவம் திணிக்க முயன்ற நடவடிக்கைகளால், தமிழ் மக்கள் கொதித்துப் போயிருந்தனர். யுத்த மேகம் பரவி மக்கள் அச்சத்துக் குள்ளாகியிருந்த சூழலில், வடக்கு — கிழக்கு மாகாண கவுன்சிலுக்கு இந்திய ராணுவத்தின் பார்வையில் ஒரு தேர்தல் நாடகம் அரங்கேற்றப்பட்டது. தில்லு முல்லுகள் முறை கேடுகளுடன் நடத்தப்பட்ட தேர்தலில் — 'ஈபிஆர்.எல்.எப்.' இயக்கத்தைச் சார்ந்த வரதராஜப் பெருமாள், வடக்கு — கிழக்கு மாகாண முதல்வராக திரிகோண மலையில் முடிசூட்டப்பட்டார். ஈபிஆர்.எல்.எப்., இந்திய ராணுவத்தின் 'செல்லப் பிள்ளையாக' மாறி, விடுதலைப் புலிகளை ராணுவத்திடம் காட்டிக் கொடுக்கும் வேலைகளைச் செய்து வந்தது. இதனால், விடுதலைப் புலிகள் பக்கம் நின்ற ஏராளமான தமிழர்கள், வீடுகளிலும், வீதிகளிலும், இந்திய ராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர். அதே நேரத்தில் இலங்கையின் தெற்குப் பகுதியில் ஜெவிபி' சிங்களர் அமைப்பு, வடகிழக்கில், இந்திய ராணுவம் நிலை பெற்றிருப்பதை எதிர்த்து, கலவரங்களில் இறங்கியது சிங்கள காவல் நிலையங்களும், அரசு அலுவலகங்களும் தாக்கப்பட்டன. இதில் 2500 பேர் வரை கொல்லப் பட்டனர். இத்தகைய பதட்டமான சூழலில் பதவிப் பொறுப்புக்கு வந்த பிரேம் தாசா, நிலைமையைப் புரிந்து கொண்டு, இந்திய ராணுவத்தை வெளியேற்றிட வேண்டும் என்ற உறுதியான முடிவுக்கு வந்தார்.

பிரேமதாசா சமுதாயத்தின் கீழ் மட்டத்திலிருந்து வந்த தலைவர்; புத்தமதப் பற்று அதிகம்; தனது பதவி ஏற்பையே கண்டியில் உள்ள புத்தர் பல் இருக்கும் மடாலயத்தில் தான் நடத்தினார். இலங்கை ஒரே நாடு; அது பிரிக்க முடியாது என்ற உணர்வு கொண்டவர். பதவி ஏற்றவுடன் விடுதலைப் புலிகளையும், ஜெ.வி.பி. இயக்கத்தையும் பேச்சு வார்த்தைக்கு அழைத்தார். 'இனப் பிரச்சினை எங்களின் உள்நாட்டுப் பிரச்சினை; அதில் அன்னிய

Tamileelam Archive

சக்திகளைத் தலையிட அனுமதிக்க மாட்டோம்' என்று சூசகமாக அறிவித்தார். லண்டனிலிருந்த விடுதலைப் புலிகளின் ஆலோசகர் பாலசிங்கத்திடம் தொடர்பு கொண்டு பேசினார் பிரேமதாசா. இந்திய ராணுவம் வெளியேற வேண்டும் என்று பிரேமதாசா வெளிப்படையாக அறிவிக்கவில்லை. அந்த நிலையில் விடுதலைப் புலிகளோடு இலங்கை ராணு வத்தின் போர் நிறுத்தத்தை அறிவித்தார். இந்திய ராணுவமும் புலிகளுக்கு எதிராக போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். பிரேமதாசா தானாக அறிவித்த இந்த போர் நிறுத்தத்தை விடுதலைப்புலிகள் ஏற்க தயக்கம் காட்டினார். இந்திய ராணுவம் வெளியேறாத வரை, போர் நிறுத்தம் செய்ய முடியாது; அது தங்களுக்கு ஆபத்து என்று விடுதலைப் புலிகள் அறிவித்தனர். இதைப் புரிந்து கொண்ட பிரேமதாசா, கொழும்பு புற நகரில் கோயில் விழா ஒன்றில் பேசுகையில் — இந்திய அரசு, மூன்று மாதங்களில் ராணுவத்தைத் திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும் என்று வெளிப்படையாக அறிவித்தார். அதே நாளில், இலங்கை வெளிநாட்டுத் துறை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னே விடுதலைப் புலிகளுக்கு, பேச்சு வார்த்தைக்கு வருமாறு அதிகாரபூர்வ அழைப்பு விடுத்தார். புலிகள் பேச்சு வார்த்தைக்கு சம்மதித்தனர். பிரேமதாசாவின் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த அமைச்சர்களின் குழு — பாலசிங்கம் தலைமையில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளோடு பேச்சு வார்த்தையைத் துவக்கியது. மனித உரிமைக்கு எதிரான இந்திய ராணுவத்தின் அடக்கு முறைகள் பற்றி விவாதிக்கப்பட்டன. 5000 தமிழர்கள் இந்திய ராணுவத்தால் கொல்லப்பட்டதையும், அமைதிப்படை ஆக்கிரமிப்புப் படையாக செயல்படுவது சர்வதேச சட்டங்களுக்கு எதிரானது என்பதையும் விடுதலைப் புலிகள் விளக்கினர். இந்தக் கருத்துக்கள் கூட்டறிக்கையாக வெளியிடப்பட்ட போது, பிரேமதாசா மீது இந்தியா கோபம் கொண்டது. கொழும்பிலுள்ள இந்தியத் தூதர் பேச்சு வார்த்தையில் இந்திய ராணுவ நடவடிக்கைகளை விமர்சனம் செய்வதற்குக் கண்டனம் தெரிவித்தார்.

இதற்கிடையே தெற்கு ஆசிய நாடுகளின் மாநாட்டை (சார்க்) நவம்பரில், இலங்கையில் நடத்தவிப்பதால், **ஜூலை 31 ஆம் தேதிக்குள், இந்திய ராணுவத்தை திருப்பி அழைத்துக் கொள்ளுமாறு பிரேமதாசா, பிரதமர் ராஜீவுக்குக் கடிதம் எழுதினார்** . ஆத்திரமடைந்த ராஜீவ் காந்தி, பெங்களூரில்

Tamileelam Archive

பேசும்போது, "ஈ.பி.ஆர்.எல்.எப். ஆட்சி நடத்தும் மாகாணக் கவுன்சிலுக்கு உரிய அதிகாரங்களைப் பெற்றுத் தந்த பிறகுதான், அமைதிப்படை வெளியேறும்" என்று அறிவித்தார். பிரேமதாசா, ராஜீவ்காந்தியின் இந்தப் பேச்சால் மிகவும் வருத்தமடைந்தார். இரண்டாவது சுற்று பேச்சுவார்த்தைகளில் இலங்கை — இந்திய முரண் பாடுகள் பற்றியே பெரிதும் விவாதிக்கப்பட்டன. இந்த நிலையில், வரதராஜப் பெருமாள் முதலமைச்சராக இருந்த தமிழர் பகுதியில் பள்ளி மாணவர்களைக் கட்டாயப்படுத்தி, 'தமிழ் தேசிய ராணுவம்' ஒன்றை உருவாக்கினர். சுமார் 4500 சிறுவர்களை 'ஈ.பி.ஆர்.எல்.எப்.' குழுவினர், பள்ளிகளிலிருந்து கட்டாயப்படுத்தி கடத்திப் போய் பல்வேறு இந்திய ராணுவ முகாமுக்குப் பயிற்சிக்கு அனுப்பினர். விடுதலைப் புலிகள் சிறுவர்களை ராணுவத்தில் சேர்ப்பதாக குற்றம் சாட்டியது இந்தியா. ஆனால் அந்தக் குற்றத்தைச் செய்ததே இந்தியாதான்!

சிறுவர்களின் பெற்றோர்கள், இந்திய ராணுவ முகாம்களின் முன்னால் திரண்டு, தங்கள் பிள்ளைகளை விடுவிக்குமாறு மன்றாடினார்கள். இந்த நிலையில் இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும், ராணுவ மோதலை நிறுத்துவதாக அதிகாரபூர்வமாக அறிவித்தனர். இந்திய ராணுவத்தைப் போர் நிறுத்தம் செய்ய வைப்பதற்காக, பிரேமதாசாவின் வேண்டுகோளை ஏற்று, முதலில் தயங்கிய விடுதலைப்புலிகள் பிறகு போர் நிறுத்தத்துக்கு சம்மதம் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்குமிடையே மோதல் நிறுத்தப் பட்டு, அமைதிக்கான நடவடிக்கைகள் தொடங்கப் பட்டுவிட்டதால், இந்திய ராணுவமும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை நிறுத்திவிட வேண்டும் என்று, பிரேமதாசா இந்திய பிரதமர் ராஜீவுக்கு கடிதம் எழுதினார். இதற்கு ராஜீவ் காந்தி அடுத்த நாளே பதில் கடிதம் ஒன்றை எழுதினார்.

பிரேமதாசா கடிதத்தால் ராஜீவ் ஆத்திரத்தின் உச்சிக்கே சென்று விட்டார். ஆசிய நாடுகளின் முடிசூடா மன்னராக வலம் வருவதற்கு ராஜீவ் காந்தி விரும்பினார். அதன் காரணமாகத்தான் ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழர்களின் பிரதிநிதியாக தன்னைத் தானே நியமித்துக் கொண்டு ஈழத் தமிழர் விடுதலை இயக்கத்தை ஓரம் கட்டிவிட்டு, ஜெய வர்த்தனாவுடன் ஒப்பந்தம் போட்டுக்கொண்டு அதைத் தமிழர்கள் மீது திணித்தார். வலிமை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மிக்க இந்திய ராணு வத்தின் முன் இந்த சின்னஞ்சிறு நாடுகள் எல்லாம் 'தூசு ' என்ற சர்வாதிகார மனப்போக்கில் திளைத்திருந்த ஒருவருக்கு பிரேமதாசாவின் இந்த அறிவிப்பு ஆத்திரத்தை ஏற்படுத்தாதா? பிரேமதாசாவுக்கு ராஜீவ் எழுதிய பதிலில் இந்த ஆத்திரத்தின் வெளிப்பாட்டைப் பார்க்க முடியும். இலங்கை அரசுடன் விடுதலைப் புலிகள் போர் நிறுத்தம் செய்ய முன் வந்திருந்தாலும் அந்த போர் நிறுத்தத்தை தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று ராஜீவ், பிரேமதாசாவுக்கு பதில் எழுதினார்.

அமெரிக்காக்காரன் நடத்தி வரும் நாட்டாண்மையை எல்லாம் மிஞ்சக் கூடியதாக, இது இருப்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். ராஜீவ் தனது பதில் கடிதத்தில் புலிகள் போர் நிறுத்தம் செய்தால் மட்டும் போதாது. இலங்கையின் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் ஏற்றுக் கொள்ள முன்வர வேண்டும். இலங்கை அரசிடம் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்றெல்லாம் ராஜீவ் காந்தி நிபந்தனை விதித்தார். இதற்கு அர்த்தம் பிரேமதாசாவை விட ராஜீவுக்கு இலங்கை ஒருமைப்பாட்டில் கவலை வந்துவிட்டது என்பது அல்ல. விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டும் தமது முயற்சி தோல்வியில் முடிந்ததும், பிரேமதாசா, தனது ராணுவத்தைத் திருப்பி அனுப்ப கெடு விதித்து விட்டாரே என்ற ஆத்திரமும் தான் காரணம். பிரேமதாசா , ராஜீவ் மிரட்டலுக்கு அஞ்சவில்லை.
இன்னும் ஒரு படி மேலே போய் அவர் பதிலடி தந்தார். "ஒப்பந்தப்படி இந்திய ராணுவம் எனது கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. நானே இந்திய ராணுவத்தை வெளியேற உத்தரவிடுவேன்' என்று அறிவித்தார். தெற்கு ஆசியாவின் சக்தி மிக்க தலைவராக தன்னை நிலைநிறுத்திக் கொள்ள துடித்துக் கொண்டிருந்த ராஜீவ் காந்திக்கு பிரேமதாசா விடுத்த சவாலை, ராஜீவால் செரிமானம் செய்து கொள்ள முடியவில்லை. இந்த நிலையில் ராஜீவ் மிரட்டலுக்கு பணிய மறுத்த விடுதலைப் புலிகளை ஒழிப்பதில் தீவிரம் காட்டி செயல்பட்டு வந்த உளவுத் துறையின் கவனம், பிரேமதாசாவின் பக்கம் திரும்பியது. பிரேமதாசாவுக்கு எதிரான திட்டங்களை உளவுத்துறை உருவாக்கத் தொடங்கியது. விடுதலைப் புலிகளுக்கு பச்சைக் கொடி காட்டினார்கள். தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆயுதங்கள் தரத் தயாராக இருப்பதாகவும், பிரேமதாசாவை எதிர்த்து போராட்டத்தைத் தொடங்கினால், இந்தியா விடுதலைப் புலிகள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பக்கம் நிற்கும் என்று விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனுக்கு தூது அனுப்பினார்கள். ஆனால், இந்திய சதி வலையில் சிக்கிட பிரபாகரன் தயாராக இல்லை. பிரபாகரன் இத்திட்டத்தை நிராகரித்து விட்டார். இதற்கெல்லாம் என்ன ஆதாரம் என்று நீங்கள் கேட்கலாம். இந்தக் கருத்துகளுக்கு சாட்சியாக நான் நிறுத்த விரும்புவது மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறனைத் தான்.

முரசொலி மாறன் அப்போது தி.மு.க. சார்பில் மாநிலங்களவை உறுப்பினர். பிரேமதாசா — ராஜீவ் முரண்பாடு முற்றியிருந்த நேரத்தில் ராஜீவ் முரசொலி மாறனை அழைத்துப் பேசினார். இது பற்றி முரசொலி மாறனே இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டுக்கு அளித்த பேட்டியில் விரிவாகக் கூறுகிறார். இதோ முரசொலி மாறன் பேட்டி

"இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டபோதே அதை எதிர்த்தவர் பிரேமதாசா. இவர் இலங்கை அதிபர் ஆனதும் இந்திய அமைதிப் படையை வெளியேற்றச் சொன்னார். விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுடன் ரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டு, இந்தியப் படைக்கு எதிராக புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார். **பிரேமதாசா — பிரபாகரன் நெருக்கம் அதிகமாவதைக் கண்ட இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி என்னை (முரசொலி மாறன்) அழைத்துப் பேசினார்** . பிரபாகரனுக்கு நாம் உதவிகள் செய்யலாம். புலிகள் பற்றி உண்மை நிலவரம் எனக்கு தெரியாமல் போய்விட்டது. எனவே தமிழக முதல்வர் கருணாநிதியை புலிகளுடன் பேசச் சொல்லுங்கள். சுதந்திர தமிழ் மாநிலம் அமைக்க நாம் உதவலாம் என்று கூறினார். நான் (முரசொலி மாறன்) இப்போதே அவர்கள் சுதந்திர தனி மாநிலமாகத்தான் உள்ளனர். வரி வசூல் வரை நீதிமன்றம் வரை நிர்வாகம் செய்கிறார்கள் என்றேன். உடனே ராஜீவ் காந்தி சிரித்தபடி தமிழ் ஈழத்தின் பிதாமகர் தி.மு.க. தான் என்றார்.' ('இந்தியன் எக்ஸ்பிரஸ்'16.12.1997)

முரசொலி மாறன் அளித்த இந்தப் பேட்டி, விடுதலைப்புலிகளை ஒழிப்பதைக் கூட நிறுத்திக் கொண்டு அவர்களிடம் சமரசம் பேசி ஆயுதம் வழங்கி, பிரேமதாசாவுடன் மோதவிடும் நிலைக்கு ராஜீவ் வந்தார் என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறது. ஆக, விடுதலைப் புலிகளைவிட பிரேமதாசா ராஜீவ்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

காந்தியின் முதன்மையான எதிரியாகக் கருதும் நிலைக்கு ராஜீவ் காந்தி வந்து விட்டார். அதற்கேற்ப உளவு நிறுவனமும் காய் 'களை நகர்த்தியது.

ஒரு முக்கியமான செய்தியை சுட்டி காட்ட வேண்டும். பிரேமதாசா கொழும்பு புறநகர்ப் பகுதியான பட்டாரமுல்லா என்ற இடத்தில் 1989 ஆம் ஆண்டு ஜூன் முதல் தேதி பேசும் போது இந்திய ராணுவம் இலங்கையிலிருந்து ஒரு மாத காலத்துக்குள் அதாவது ஜூலை 29 ஆம் தேதிக்குள் வெளியேறிட வேண்டும் என்று கெடு நிர்ணயித்து அறிவித்தார். (ஜூலை 29 — என்ற தேதிக்கான முக்கியத்துவம் ராஜீவ் — ஜெயவர்த்தனா ஒப்பந்தம் அமுலுக்கு வந்த தேதி என்பதாகும்). ராஜீவ் காந்தியும் இந்திய உளவு நிறுவனமும் பிரேமதாசாவின் இந்த 'கெடு' வால் அதிர்ச்சி அடைந்தார்கள். அவர்கள் இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை.

அவசர அவசரமாக இந்திய உளவு நிறுவனம் பிரேமதாசாவுக்கு எதிரான சதித் திட்டங்களை உருவாக்கியது. என்ன திட்டம்?

1. இந்திய ராணுவம் வெளியேறக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்தும், ராஜீவ் — ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை பிரேமதாசா கை விடுவதை எதிர்த்தும், தமிழர் பகுதியில் தங்களின் கைத்தடி ' அமைப்பிலிருந்து ஆட்களைப் பிடித்து பிரேமதாசாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்த இந்திய உளவு நிறுவனம் ஏற்பாடு செய்தது.

2. விடுதலைப் புலிகள் தாக்கும் நிலையில் பலமாகவே உள்ளார்கள் என்றும், இந்திய ராணுவம் இப்படிப்பட்ட நிலையில் வெளியேறக் கூடாது என்றும், விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் பிரேமதாசாவின் இலங்கை ராணு வத்துக்குக் கிடையாது என்றும் சில சம்பவங்களை உருவாக்கி உணர்த்த வேண்டும் என்று திட்டங்களை வகுத்தனர். தமிழ் ஈழத்தில் 'இந்தியாவின் தலையீடு' என்ற விரிவான நூலை (Indian intervention in Srilanka)ரோகனா குணரத்னா என்ற கொழும்பு பத்திரிகையாளர் எழுதியுள்ளார். இந்த நூலில் இந்திய உளவு நிறுவனத்தின் மேற்குறிப்பிட்ட திட்டங்களை அவர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விடுதலைப் புலிகள் வலிமை குறையாதவர்கள் என்றும், அவர்கள் தலைவர்களைக் கொலை செய்யக் கூடியவர்கள் என்றும் பிரேமதாசா இந்திய ராணுவத்தை வெளியேறச் சொல்லும் கருத்துக்கு கடும் எதிர்ப்பை உருவாக்கிவிடலாம் என்ற திட்டத்தின் கீழ் சில கொலைகளுக்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டன. விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குள்ளேயே இந்திய உளவு நிறுவனத்தின் வலையில் சிக்கியிருந்த மாத்தையாவின் அணி, இதற்காக, களமிறக்கப்பட்டது.

பிரேமதாசா இந்திய ராணுவம் வெளியேற வேண்டும் என்று ஒரு மாதம் கெடு விதித்து அறிவித்த நாள், 1989 ஜூன் 1, கெடு முடியும் நாள் ஜூலை 29. இந்த ஒரு மாத இடைவெளியில் தான் சில முக்கிய தலைவர்கள் கொலை செய்யப்பட்டு, அவர்களை கொலை செய்தவர்கள் விடுதலைப் புலிகள் தான் என்ற பழியை சுமத்தி ஊடகங்கள் வழியாக பரப்பினர். எந்தத் தேதியில், யார் யார் கொல்லப்பட்டார்கள்?

**1989 ஜூலை 12 – தமிழர் அய்க்கிய விடுதலை முன்னணி தலைவர்கள் அமிர்தலிங்கம் மற்றும் யோகேஸ்வரன்.**

**1989 ஜூலை 17 – அதாவது, அடுத்த நான்கு நாட்களில் புளோட் இயக்கத் தலைவர் உமாமகேசுவரன்.**

**1989 ஜூலை 23 – அடுத்த 10 நாட்களில் பிரபாகரன்' மாத்தையால் கொல்லப்பட்டார் என்ற அறிவிப்பு (அனைத்து இந்திய மற்றும் சர்வதேச ஊடகங்களில் உயிருடன் இருந்த பிரபாகரன் – மாத்தையாவால் கொல்லப் பட்டதாக இந்திய உளவு நிறுவனம் செய்திகளைப் பரப்பியது).**

பிரேமதாசா – இந்திய ராணுவம் வெளியேற கெடு விதித்த ஒரு மாத கால இடைவெளியில் மட்டும், இந்தக் கொலைகள் நடந்தன என்றால், அதன் நோக்கம், மூளை, பின்னாலிருந்து இயக்கிய சக்திகளைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்திய ராணுவம் ஈழப் பிரதேசத்திலிருந்து வெளியேறுவதற்கு இலங்கை அதிபர் பிரேமதாசா கெடு விதித்ததால் ஆத்திரத்தின் எல்லைக்குச் சென்ற ராஜீவ் காந்தி – பிரேமதாசாவுக்கு எதிராக உளவுத் துறை வழியாக மேற்கொண்ட முயற்சிகள் ஏராளம். விடுதலைப் புலிகள் இயக்கத்திடமே

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பிரேமதாசாவை எதிர்க்க சமரசத்தூது அனுப்பியதை முரசொலிமாறன் தந்த பேட்டியிலிருந்தே எடுத்துக் காட்டினோம். பிரேமதாசாவுக்கு எதிரான அரசியல் நெருக்கடிகளையும் உளவு நிறுவனம் உருவாக்கியது. பிரேமதாசாவின் எதிர்கட்சியான இலங்கை சுதந்திரக் கட்சியைப் பயன்படுத்தி பிரேமதாசா ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சிகளை இந்திய உளவு நிறுவனம் மேற்கொண்டது. இதை விடுதலைப் புலிகள் இயக்கமே மக்களிடம் கூறி எச்சரித்தது. மக்களுக்காக புலிகளின் குரல்' என்ற வானொலி சேவையை விடுதலைப் புலிகள் நடத்தி வந்தனர். இதைக்கூட புலிகளின் 'ரகசிய வானொலி' என்கிறார் ராஜீவ் சர்மா. அது தமிழீழ மக்களுக்காக நடத்திய வெளிப்படையான வானொலி சேவை. அந்த வானொலியில் விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவு பொறுப்பாளர் யோகரத்தினம் என்ற யோகி, இயக்க சார்பாக நாட்டு மக்களுக்கு ஒரு அறிவிப்பை வெளியிட்டார்.

"பிரேமதாசா அரசாங்கத்தை தூக்கி எறிவதற்காக, இந்திய அரசாங்கம் இலங்கை சுதந்தி ரக் கட்சியுடன் கைகோர்த்துக் கொண்டுள்ளது. காமினி திச நாயகே மற்றும் அவரது குழுவினரைப் பயன்படுத்தி, பிரேமதாசா ஆட்சியைக் கவிழ்க்க திட்டம் தீட்டினர். ஆனால், அதில் தோல்வி அடைந்து விட்டனர். இப்போது விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே நடக்கும் பேச்சு வார்த்தையை குலைக்கும் சதியில் இறங்கியுள்ளனர். இதற்கு, இந்தியாவில் விடுதலைப் புலிகள் மீது கொண்டு வந்துள்ள தடையைக் காட்டி, பேச்சு வார்த்தையை குலைக்க முயற்சிக்கிறார்கள்" — என்று 1992 ஆம் ஆண்டு மே 24 ஆம் தேதி புலிகளின் வானொலி, நாட்டு மக்களுக்கு அறிவித்தது. இந்தத் தகவலை ராஜீவ் சர்மாவும் தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

அதே வேளையில், பிரேமதாசா கட்சியிலிருந்தே அவரது ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக இந்திய உளவுத் துறை ஆட்களை தயாரித்தது ! பிரேமதாசா ஆட்சியில் ராணுவ அமைச்சராக இருந்தவர் ரஞ்சன் விஜயரத்னே. பிரேமதாசாவின் அய்க்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருந்தவர். ஆனால் பிரேமதாசாவுக்கு அரசியல் எதிரி. அதிபர் பதவிக்கு அவர் குறி வைத்துக் கொண்டிருந்தார். பிரேமதாசா அமைச்சரவையில் ராணுவ அமைச்சராக இருந்தார். எனவே, ராணுவம் விஜயரத்னே கட்டுப்பாட்டில் இருந்தது. அதைப்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பயன்படுத்தி பிரேமதாசாவுக்கு எதிராக ராணுவப் புரட்சி ஒன்றை நடத்தி, பிரேமதாசாவை வீழ்த்த உளவுத் துறை திட்டங்களை தயாரித்தது. விஜயரத்னேவுக்கு அதிபர் பதவிக்கு முடிசூட்ட வலைவிரித்தார்கள். அந்த திட்டத்தின் அடிப்படையில் அதிபர் பிரேமதாசாவுக்கு தெரியாமலேயே ரகசியமாக தரைப்படை, கப்பல் படை மற்றும் விமானப்படை என்ற முப்படை தளபதிகளின் கூட்டத்தை 1991 மார்ச் 1 இல் விஜயரத்னே கூட்டினார்.

இந்த ரகசிய சதித் திட்டம் — பிரேமதாசாவுக்கு தெரிந்து விட்டது. ரகசிய கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே முன்னறிவிப்பின்றி பிரேமதாசா, கூட்டத்துக்குள் திடீர் என்று நுழைந்தார். உள்ளே இருந்த அனைவருக்கும் அதிர்ச்சி. பிரேமதாசா எதுவும் பேசாமல் அமைதியாக, சிறிது நேரம் இருந்துவிட்டு, மவுனத்தையே எச்சரிக்கையாக தந்துவிட்டு வெளியேறினார். கூட்டம் கலைக்கப்பட்டது. அடுத்தநாள் காலையே விஜயரத்னே காரில் அலுவலகம் சென்றபோது அவரது காரில் குண்டு வெடித்தது. அது குண்டு துளைக்காத அரசாங்க கார். ஆனாலும் குண்டு வெடித்தது. விஜயரத்னா கொல்லப்பட்டார். இந்த கொலைக்கும் விடுதலைப் புலிகள் மீதே பழி போடுகிறார், ராஜீவ் சர்மா! நியாயமாக பிரேமதாசா தனக்கு எதிராக திட்டமிட்டிருந்த ராணுவப் புரட்சியை ஒடுக்க, அதற்கு சதி செய்தவரை தீர்த்துக் கட்டினார் என்பது கொழும்பு ஊடகங்களே வெளியிட்ட செய்தி. அதை ஏற்றுக் கொள்வதற்கான நியாயமான காரணங்களும் இருக்கின்றன. ஆனால் பழி, ஆதாரம் இல்லாமல் புலிகள் மீதே போடுவதில் என்ன நியாயம்? விடுதலைப் புலிகள் லண்டன் தலைமை அலுவலகத் திலிருந்து தலைமையக பொறுப்பாளர் கிட்டு, புலிகளுக்கு இதில் தொடர்பில்லை என்று மறுத்து அறிக்கையும் விட்டார்.

இலங்கையில் காவல்துறை உயர் அதிகாரி தலைமையில் அதிகாரம் கொண்ட குழு ஒன்று செயல்பட்டது. இதன் தலைவராக இருந்தவரின் பெயர் பிரேமதாசா உருகம்பொல என்பதாகும். 34 ஆண்டு அனுபவம் பெற்ற காவல் துறையின் உயர் அதிகாரி. இவர், இந்திய உளவு நிறுவனத்துக்கு ஆதரவா பிரேமதாசாவுக்கு எதிராக களமிறக்கப்பட்டார். இந்தியா லிருந்து வெளிவரும் 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேட்டை இந்திய உளவுத்துறைப் பயன்படுத்தி, பிரேமதாசாவுக்கு எதிரான பேட்டி ஒன்றை அவரிடமிருந்து பெற்று

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பிரேமதாசாவுக்கு நெருக்கடியை உருவாக்கினார்கள். 'டைம்ஸ் ஆப் இந்தியா' சார்பில் பேட்டி கண்டவர் — ஏதோ அப் பத்திரிகையின் செய்தியாளரோ, உதவி ஆசிரியரோ அல்ல. அந்த ஏட்டின் நிர்வாக இயக்குனராக இருந்த நலபம் என்பவரே பேட்டி எடுத்தார். விடுதலைப் புலிகளுடன் பிரேமதாசா பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது என்றும், ராணுவ அமைச்சர் விஜயரத்னே கொலைக்கு விசாரணை ஆணையம் நியமிக்க வேண்டும் என்றும் பிரேமதாசாவுக்கு எதிராக இந்தியாவிலிருந்து வெளிவரும் அந்த ஏட்டுக்கு அவர் பேட்டி அளித்தார்.

இந்த அதிகாரி, இந்திய உளவு நிறுவனத்தின் சதி வலையில் வீழ்ந்ததைத் தெரிந்து கொண்ட பிரேமதாசா, அவரை உடனே பதவியிலிருந்து நீக்கினார். தலைமறைவாகிவிட்ட அவர் ரகசிய இடத்திலிருந்து இந்தப் பேட்டியை தந்தார். அவர் ரகசியமாக தங்கியிருந்த இடம் இந்தியாவின் 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேட்டுக்கு எப்படி தெரிந்திருக்க முடியும்? இந்திய உளவு நிறுவனத்தின் தொடர்பின்றி அவர், ரகசிய இடத்திற்குப் போய் பேட்டி எடுத்திருக்க முடியுமா?

பிரேமதாசா விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தையை முறித்துக் கொண்டு பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று இந்திய அரசு பிரேமதாவிடம் நிர்ப்பந்தம் தந்தது. பிரேமதாசாவோ அதை ஏற்கவில்லை. ஈழத் தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற உண்மையான கவலை ராஜீவ் காந்திக்கு இருந்திருந்தால், பேச்சு வார்த்தை முயற்சிகளை நியாயமாக ஆதரித்திருக்க வேண்டாமா? இப்படி சீர்குலைப்பது நியாயம் தானா? இந்திய பார்ப்பன ஆட்சியின் யோக்கியதையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆனாலும், விடுதலைப் புலிகளுக்கும் பிரேமதாசா ஆட்சிக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தை தொடர்ந்து முன்னேற்றப் பாதையிலேயே சென்றுக்கொண்டிருந்தது. முதல் கட்டமாக இந்திய ராணுவம் இலங்கையை விட்டு வெளியேற வேண்டும் என்பதில் ஒருமித்த கருத்து உருவானது. அதனடிப்படையில் இந்திய ராணுவம் படிப்படியாக வெளியேற இந்தியா ஒப்புக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உருவானது. அதே நேரத்தில் வடக்கு கிழக்கு மாநிலத்தில் இந்தியா, மாகாண சபை' என்ற ஒரு பொம்மை ஆட்சியை உருவாக்கி, வரதராசப் பெருமாள் என்ற தனது 'எடுபிடி' யை முதல்வராக நியமித்திருந்தது. அந்த ஆட்சிக்கு அதரவாக 'தமிழ் தேசிய ராணுவம்' என்ற

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஒரு அமைப்பையும் இந்தியா உருவாக்கி வைத்திருந்தது. இந்த அமைப்பில் இடம் பெற்றிருந்த பெரும்பாலானவர்கள் சிறுவர்கள். அதேபோல் அம்பாறை மாவட்டத்தில் குடிமக்கள் தொண்டர் படைகள்' என்ற தனக்கு ஆதரவான அமைப்பை உருவாக்கி, அந்த அமைப்புக்கு ஆயுதங்களை இந்தியா வழங்கியிருந்தது. இந்திய ராணுவம் வெளி யேறினாலும் இந்தியா உருவாக்கிய விபிஷணப் படை' ஈழத்தில் நிலை கொண்டிருந்த நிலையில் அந்தப் படைகளையும் கலைக்க வேண்டும் என்ற இலக்கை நோக்கி, பிரேமதாசா விடுதலைப் புலிகளின் மூன்றாம் கட்ட பேச்சு வார்த்தை முன்னேறியது. பிரேமதாசாவுக்கும் விடுலைப்புலி களுக்குமிடையே நடந்த பேச்சுவார்த்தை வெற்றிப் பாதையில் விரைந்து செல்வதைக் கண்டு அதிர்ச்சியடைந்த இந்திய உளவுத் துறை அது பற்றி ரகசிய அறிக்கை ஒன்றை விரிவாகத் தயாரித்தது. (ectt(R&AW)UONo.1/17–A/89–SLM–346–6959)

அதே காலகட்டத்தில் இலங்கையின் முன்னாள் அமைச்சர் லலித் அதுலத் முதலி மற்றும் காமினி திச நாயகே இருவரும் விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சுவார்த்தையை நிறுத்த வேண்டும் என்று சிங்களர்களிடையே தீவிரப் பிரச்சாரத்தைத் தொடங்கினர். கடும் நெருக்கடிக்குள்ளான பிரேமதாசா, ஒரு கட்டத்தில் வெளிப்படையாகப் பேசத் தொடங்கினார். இந்தியாவை வெளிநாட்டு சக்திகள் என்று குறிப்பிட்ட அவர், "வெளிநாட்டு சக்திகள் நாட்டின் நிலையான தன்மையைக் குலைக்க (Stability) திட்டமிடுகின்றன. அவர்கள் அரசியல் கொலைகளை நடத்த முயற்சிக்கிறார்கள்' ' என் பிரேமதாசா பேசத் தொடங்கினார். 1991 அக்டோபர் 19 – தேதி இலங்கையின் கோவில் நகரமான கண்டியில் தன்னை பதவியிலிருந்து அகற்றிட மேற்கொண்ட சதித் திட்டங்களை வெற்றிகரமாக முறியடித்ததற்காக மாபெரும் பேரணி ஒன்றை பிரேமதாசா நடத்தினார். 'ஜனநாயகத்தின் வெற்றி' என்று

அந்தப் பேரணிக்கு பெயர் சூட்டப்பட்டிருந்தது.

அதில் பேசிய பிரேமதாசா, "எனக்கு எதிராக அயல்நாட்டு சக்திகள், சதித் திட்டத்தில் இறங்கியுள்ளன. என்னுடைய அரசியல் எதிரிகளுக்கு இந்த சக்திகள் ஏராளமானப் பணம் தந்து எனக்கு எதிராக அணி வகுப்புகளை நடத்தச் சொல்கின்றன. அதற்கு பெரும் பணம் வாரி இறைக்கப்படுகிறது. அவர்களுக்கு எங்கிருந்து இவ்வளவு பெரிய தொகை வருகிறது? என்னை

Tamileelam Archive

பதவியிலிருந்து நீக்க அவர்கள் போட்ட சதித்திட்டம் தோற்றுவிட்டதால், நாடாளுமன்ற அவைத் தலைவருக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதுவும் தோற்கடிக்கப்பட்டது. இந்த அயல்நாட்டு சக்திகள் மூலம் எனக்கு எந்த நேரத்திலும் ஆபத்து ஏற்படலாம். நான் அரசியல் ரீதியாகப் படுகொலை செய்யப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை" — என்று பிரேமதாசா பேசினார்.

பிரேமதாசா கொன்னதுதான் நடந்தது! 1993 ஆம் ஆண்டு பிரேமதாசா மே நாள் பேரணியில் பங்கேற்றபோது மனித வெடிகுண்டுக்கு பலியானார். பிரேமதாசா மே தின அணி வகுப்பில் வந்தபோது அவரது உதவியாளர் மிதிவண்டியை ஓட்டிக் கொண்டு வந்தார். அவர் பிரேமதாசாவின் வீட்டில் வேலை செய்யும் பணியாள். எனவே பாதுகாவலர்கள் பேரணிக்கு உள்ளே செல்ல அனுமதித்தனர். பிரேமதாசாவின் சமையல்காரர் பரிந்துரையில் இந்த பணியாள் வேலைக்கு சேர்க்கப்பட்டவர். பிரேமதாசாவை நெருங்கியவுடன் தனது இடுப்பில் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டை அவர் வெடிக்கச் செய்தார். இந்தத் தகவல்களை எல்லாம் ராஜீவ் சர்மாவே தனது நூலில் எழுதியிருக்கிறார். இவ்வளவையும் எழுதிவிட்டு, பிரேமதாசாவைக் கொன்றது விடுதலைப் புலிகள் என்று பழிபோட்டு விடுகிறார். "குண்டு வெடிக்கச் செய்த நபர் தான் ஒரு எல்.டி.டி. ஈ . உளவாளி என்பதை நிரூபித்தார்" என்கிறார் ராஜீவ் சர்மா. இறந்து போனவர் எப்படி தன்னை எல்.டி.டி.ஈ. உளவாளி என்று நிரூபிக்க முடியும்? 'பிரேமதா சாவை புலிகள் கச்சிதமாக கொலை செய்தார்கள்' என்று மீண்டும் மீண்டும் இந்த நூல் பல இடங்களில் புலிகளைக் குற்றம் சாட்டுகிறது.

விடுதலைப் புலிகள் மீது கொலைக் குற்றம் சாட்டுகிறவர்கள் எப்படி, எங்கே, எந்த முறையில் கொலை செய்தார்கள் என்று எழுதுகிறார்கள். ஆனால் ஒரு கேள்வியை மட்டும் அவர்கள் தந்திரமாக விட்டுவிடுகிறார்கள். ஏன் கொலை செய்ய வேண்டும் என்பதுதான் அந்தக் கேள்வி!

பிரேமதாசாவிடம் நெருங்கிச் சென்று வெடிகுண்டை வெடிக்கச் செய்தவன் பெயர் பாபு. பிரேமதாசாவிடம் எப்போதும் நெருக்கமாக இருந்து, அவரது உணவு உள்ளிட்ட அன்றாட பணிகளைக் கவனித்துக் கொண்டு,

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பிரேமதாசாவின் நம்பிக்கைக்குரிய உதவியாளராக இருந்தவர் ஈ.எம்.பி. மொய்தீன். இவர் மது, மங்கை போன்ற பலவீனங்களுக்கு உள்ளானவர். இந்தத் தேவைகளை நிறைவேற்றித் தந்தவன் பாபு மொய்தீனைப் பயன்படுத்தி பாபு, பிரேமதாசாவை நெருங்கி குண்டை வெடிக்க
வைத்தான். இந்த உண்மைகளை ஊடகங்களும் வெளியிட்டன. ('AFP' – செய்தி நிறுவனம். 'ஜப்பான் டைம்ஸ்', ஜூன் 5,1993)

பிரேமதாசா கொலையில் மறைந்து நிற்பது எவருடைய கரங்கள்?

## மூத்த அரசியல் தலைவர் அமிர்தலிங்கம் கொலையின் பின்னணி

பிரேமதாசாவும் விடுதலைப் புலிகளும் போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தைத் தொடங்கியதை குலைத்து பிரேமதாசாவுக்கு கடும் நெருக்கடிகளை உருவாக்க திட்டமிட்டது இந்திய உளவுத் துறை!

தமிழர் அய்க்கிய விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கம் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் இருவரும் 1989 ஜூலை 13 ஆம் தேதி கொழும்பில் அமிர்தலிங்கம் வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர். அமிர்தலிங்கம் அவர்களோ, யோகேஸ் வரனோ, ஆயுதம் தாங்கிய போராளிகள் அல்ல. காந்திய வழியைப் பின்பற்றியவர் அமிர்தலிங்கம். அவர் செய்த ஒரே தவறு, இந்திய உளவுத் துறையை முழுமையாக நம்பியதுதான். தமிழ் ஈழ விடுதலையை இந்தியா மீட்டெடுத்து, தன்னிடம் ஒப்படைக்கும் என்று அவர் மலை போன்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தார். ஆனால் நடந்ததோ வேறு.

அமிர்தலிங்கம் – யோகேஸ்வரன் ஆகிய இரு தலைவர்களையும், அவரது வீட்டில் சுட்டுவிட்டு தப்பி வெளியே ஓடி வந்த 3 பேரை அமிர்தலிங்கம் வீட்டில் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்ட காவலர்கள் சுட்டுக் கொன்றனர். இந்தக் கொலைப்படைக்கு தலைமை தாங்கி காவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டவர் விசு. அலாய்சியஸ், விக்னம் ஆகிய மூன்று பேர். இதில் விசு – யார்? மாத்தையாவின் வலதுகரமாக செயல்பட்டவர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இந்திய உளவுத் துறையின் வலையில் சிக்கியிருந்த மாத்தையா — பிரேமதாசாவுடன் புலிகள் பேச்சு வார்த்தையைக் குழப்பிட இந்திய உளவுத் துறையின் திட்டத்தை ஏற்று நடத்திய கொலைதான் இது! இதைச் செய்தது யார் என்பது பற்றி பத்திரிகைகளிலே குழப்பமான செய்திகள் வந்தன. 'வீரகேசரி' நாளேடு விடுதலைப் புலிகள், அமிர்தலிங்கத்தைக் கொலை செய்ததை ஒப்புக்கொண்டு விட்டதாக செய்தி வெளியிட்டது. அதே நாளில் கொழும்பிலிருந்து வெளிவந்த ஆங்கில நாளேடுகள், இந்தக் கொலையில் தங்களுக்கு தொடர்பில்லை என்று புலிகள் மறுப்பு தெரிவித்துள்ளனர் என்று செய்தி வெளியிட்டன. ஒரே நாளிலேயே இரண்டு செய்திகளும் வெளி வந்ததுதான் வேடிக்கை.

"விடுதலைப் புலிகள் தமிழர்களைக் கொல்லும் சக்தியுடனேயே இருக்கிறார்கள். இலங்கை அரசால் விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்த முடியாது. எனவே, இந்திய ராணுவம் வடக்கு — கிழக்குப் பகுதியிலிருந்து வெளியேறுவது ஆபத்து" என்ற கருத்தை உருவாக்குவதே உளவு நிறுவனங்களின் திட்டம். இந்தத் திட்டத்தை அப்படியே ஜே.என். தீட்சத்தும் தனது நூலில் (Assignment in Colombo) வழிமொழிந்து அமிர்தலிங்கம் கொலையை நடத்தியது விடுதலைப் புலிகளே என்று எழுதினார்.

"இலங்கைத் தமிழர்களை ஜனநாயகப் பாதைக்கு அமிர்தலிங்கம், திருப்பி விடுவார் என்ற அச்சத்தின் காரணமாகவே விடுதலைப் புலிகள் அமிர்தலிங்கத்தைக் கொலை செய்தார்கள்" என்று ஜே.என். தீட்சத் உண்மையை மறைத்து எழுதினார். கொன்றது விடுதலைப் புலிகள் அல்ல; இந்திய உளவு நிறுவனம் — மாத்தையாவைப் பயன்படுத்தி நடத்திய சதி என்பது தெரிந்திருந்தும் புலிகள் மீதே பழி போடும் நோக்கத்தையே பிரதிபலித்தார்.

அமிர்தலிங்கத்தைச் சுட்ட 3 பேரும் தப்பி வந்தபோது, அமிர்தலிங்கத்தின் பாதுகாவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார்கள் என்பதும், அவர்கள் மாத்தையாவின் ஆட்கள் என்பதும் உண்மை. இது பற்றி மற்றொரு ஆதாரத்தை நான் முன் வைக்க விரும்புகிறேன். தமிழ் ஈழத்திலே நடந்த அரசியல் படுகொலைகள் பலவற்றுக்கும் காரணமாக இருந்த இந்திய உளவுத்

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

துறை அத்தனை பழிகளையும் விடுதலைப் புலிகள் மீதே போட்டதும், இங்கே பார்ப்பன ஊடகங்கள் அதையே மீண்டும் மீண்டும் எழுதி, உண்மையாக உறுதி செய்ததும், பாமர மக்களை நம்பச் செய்ததும், எவ்வளவு மோசமான பார்ப்பன சூழ்ச்சி என்பதை, நாம் புரிந்து கொள்ள வேண்டும். ராஜீவ் சர்மாவும் கூசாமல் இந்த நூலில் அதே பழியைத்தான் போடுகிறார்!

ஒரு மகத்தான விடுதலை இயக்கத்தின் மீது , இப்படி புழுதிவாரி தூற்றி, களங்கப்படுத்திய இந்த கயமைப் பிரச்சாரங் களுக்கு பதில் கூறுவதற்கான ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்தி ருக்கிறது என்றே கருதுகிறேன். அவர்களோ விடுதலைப் புலிகள் மீது எந்த ஆதாரமும் இல்லாமல் அபாண்டமாக பழி சுமத்துகி றார்கள். அதே வழியில் எந்த ஆதாரங்களும் இல்லாமல், ஏதோ, உணர்வுகளின் அடிப்படையில் நாம் அவற்றை மறுக்கவில்லை. மாறாக, மறுப்புகளை உரிய ஆதாரங்கள் தரவுகளுடன் தான் மறுக்கிறோம். அமிர்தலிங்கத்தை விடுதலைப் புலிகள் ஏன் கொலை செய்ய வேண்டும்? தீட்சத் கூறுவதுபோல் ஈழத் தமிழர்களின் கருத்துகளை அப்படியே தன் பக்கம் திருப்பிவிடக் கூடிய செல்வாக்குள்ள தலைவராகத்தான் அமிர்தலிங்கம் இருந்தாரா? அந்தக் காலக் கட்டத்தில் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் முழுமையாக விடுதலைப் புலிகளிடமே தங்கி யிருந்தது என்ற உண்மை சிறு குழந்தைகளுக்குக்கூட தெரியுமே! அமிர்தலிங்கத்தையும், யோகேஸ்வரனையும் விடுதலைப் புலிகள் கொல்வதற்கு ஏதேனும் ஒரு காரணத்தைக் கூறியாக வேண்டிய கட்டாயம் — உளவு நிறுவனத்துக்கும், ஜெ.என். தீட்சத்துக்கும் இருந்தது. எனவே சொத்தையான எவருமே ஏற்றுக் கொள்ள முடியாத காரணத்தை ஜே.என். தீட்சத் முன் வைக்கிறார்; அவ்வளவுதான்.

அமிர்தலிங்கத்தை சுட்டுக் கொன்றவர்கள் பற்றிய விவரங்களை அமிர்தலிங்கத்தின் வரலாற்றை எழுதிய டி.சபாரத்தினம் விளக்கிக் கூறியுள்ளார். டி. சபாரத்தினம், 1996ம் ஆண்டு , அமிர்தலிங்கத்தின் வரலாற்றை எழுதி, 'The Murder of a Moderate' என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார். அதில் அமிர்தலிங்கம் கொலை பற்றி எழுதப்பட்டுள்ளது என்ன?

"அமிர்தலிங்கத்தைக் கொன்றவர்கள், எந்த அரசியல் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதில் பெரும் குழப்பமே நீடிக்கிறது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இதில் பல்வேறு கருத்துகள் கூறப்படுகின்றன. அமிர்தலிங்கத்தை சுட்ட விசு, வவுனியாவுக்கு விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுக்கு தலைவராக இருந்தவர். அதுவரை அந்தப் பதவியில் இருந்த தினேஷ் என்பவர் காணாமல் போன பிறகு நியமிக்கப்பட்ட விசு, அதன் பிறகு, விடுதலைப் புலிகள் இயக்கத்தை விட்டு வெளியேறிவிட்டதாகக் கூறுகிறார்கள். வேறு சிலர், "இல்லை , விசு, அப்போதும், விடுதலைப் புலிகள் இயக்கத்தில்தான் இருந்தார்" என்றார்கள். லண்டனில் உள்ள விடுதலைப் புலிகள் தலைமையகம் அமிர்தலிங்கம் கொலையில், விடுதலைப் புலிகளுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று அறிக்கையே வெளியிட்டது. புலிகளின் அந்த அறிக்கை அமிர்தலிங்கம், கொலையைக் கண்டித்தது. இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்து வரும் பேச்சு வார்த்தையை விரும்பாத சக்திகளே, இந்தக் கொலையை செய்து, விடுதலைப் புலிகள் மீது பழிபோட்டு, களங்கம் கற்பிக்கின்றன என்றும் அந்த அறிக்கை குற்றம் சாட்டியது. அத்துடன், "தமிழர் அய்க்கிய விடுதலை முன்னணி தலைவர் அமிர்தலிங்கம் மற்றும் யோகேஸ்வரன் ஆகியோரின் மறைவுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் ஆழ்ந்த கவலையுடன் துயரத்தை வெளிப்படுத்திக் கொள்கிறது. சில ஈவிரக்கமற்ற கொடூர சக்திகள் விடுதலைப் புலிகளை களங்கப்படுத்தி, அரசுக்கும் புலிகளுக்குமிடையே நடக்கும் பேச்சு வார்த்தையை சீர்குலைக்க திட்டமிடுவதாகவே சந்தேகிக்கிறோம்."

– "The LTTE learned with deep distress the tragic demise of the T.U.L.F. leaders, Amirthalingam and Yogeswaran. We suspect that diabolical forces are at work to discredit the organization and to disrupt the current peace talks between the LTTE and the government of Sri Lanka" – என்று அந்த அறிக்கை கூறியது.

ஆக, அமிர்தலிங்கம் வரலாற்றை எழுதியவரே புலிகள் மீதான குற்றச்சாட்டை உறுதி செய்யவில்லை. இத்தகைய ராணுவ ரீதியான நடவடிக்கைகளை புலிகள் மேற்கொண்டால் அவர்கள் அதை மறுக்கும் வழக்கமுமில்லை என்பது புலிகள் வரலாற்றை அறிந்தவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இந்திய ராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்ற விடுதலைப் புலிகள் நியாயமான கோரிக்கைக்கு இலங்கை அரசே ஆதரவு தந்து போர் நிறுத்தம் செய்து புலிகள் சம்மதத்துடன் பேச்சு வார்த்தைகளை நடத்திக் கொண்டிருந்த ஒரு நல்ல வாய்ப்புச் சூழலில் கிடைத்த நல்ல வாய்ப்பை விடுதலைப் புலிகளே குலைப்பார்களா என்பதை நடுநிலையில் சிந்திக்கும் எவருமே புரிந்து கொள்ள முடியும்.

இந்த உளவு நிறுவன சதியை அன்றைய பிரேமதாசா அரசும் நன்றாகவே புரிந்து கொண்டது. இலங்கை அரசாங்கமே நடத்தும் 'டெய்லி நியூஸ்' பத்திரிகை இது பற்றி வெளியிட்ட செய்தியே (1989 ஜூலை 14) என்ன தெரியுமா?

"அமிர்தலிங்கம் கொலையை நடத்தியதே விடுதலைப் புலிகள் தான் என்று தவறாக, புலிகள் மீது பழிபோடும் முயற்சிகள் நடக்கின்றன. இத்தகைய முயற்சிகள் பற்றி, அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள்" — இதுதான் இலங்கை அரசின் அதிகாரபூர்வ பத்திரிகை வெளியிட்ட செய்தி.

ஈழப் போராட்டத்தின் தொடக்கக் காலத்திலிருந்து உன்னிப்பாக ஆராய்ந்து ஜெயரத்தினம் வில்சன் என்ற ஆய்வாளர் 'Break—up of Srilanka' என்ற நூலை எழுதியுள்ளார். அதில் 1983—86 ஆம் ஆண்டுகளின் நிலையை இவ்வாறு குறிப்பிடுகிறார்:

"எனக்கு தெரிந்தவரை இலங்கையில் தங்களின் தலையீட்டுக்காகவே இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்கள் திட்டங்களை உருவாக்கி வெவ்வேறு கட்டங்களில் அமுல் படுத்தி வந்துள்ளனர். இந்தியாவின் இத் திட்டத்தால் தமிழர் அய்க்கிய முன்னணி தலைவர்களும், போராளி இயக்கங்களும் நம்பிக்கை பெற்றன. தமிழர் தலைவர்களை ஏமாற்றி திசை திருப்புவதுதான் இந்தியாவின் நோக்கம் என்ற கருத்து ஊகமாகக்கூட இருக்கலாம். ஆனால் — ஒன்று மட்டும் உண்மை . தமிழ் தலைவர்களுக்கும் போராளிகளுக்கும் இந்தியா இந்த உதவிகளை செய்ததன் மூலம் அவர்கள் அனைவரும் இந்தியாவின் கட்டுப்பாட்டின் கீழ் வந்து விட்டார்கள்" என்று எழுதும் ஜெயரத்தனம் வில்சன், மேலும் எழுதுகிறார்:

"இந்தியாவின் 'ரா' (RAW) உளவு நிறுவனம், இந்தக் கருத்தை உருவாக்குவதில் முனைப்புடன் செயல்பட்டது. ராவின் ஏஜெண்டுகள் தமிழ்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

போராளி குழுக்களிடையே ஊடுருவினார்கள். அவர்களிடமிருந்து பல முக்கிய ரகசிய தகவல்களை சேகரித்ததோடு, போராளிகள் குழுக்களிடையே பிளவுகளை உருவாக்கி, ஒரு குழு, மற்ற குழுவை அடக்கிடும் வலிமை பெற்று விடாமல், சமநிலையில் இருக்குமாறு பார்த்துக் கொண்டனர். இந்த முயற்சியில் முதல் கூட்டத்தில் 'ரா' உளவு நிறுவனம் வெற்றிப் பெற்றது என்பது உண்மைதான். ஆனால், கடைசியாக விடுதலைப் புலிகள், வலிமை பெற்று உயர்ந்து நின்றதைத் தடுக்க முடியாமல் 'ரா' அவர்களிடம் தோற்றுப் போய்விட்டது" — என்று எழுதுகிறார்.

ஆக —

அமிர்தலிங்கத்தை சுட்டவர்கள் — மாத்தையாவின் ஆட்கள்.

அமிர்தலிங்கம் மரணத்தைக் கண்டித்த — புலிகள் இயக்கம். அவரைக் கொன்றவர்கள் பேச்சு வார்த்தையை குலைக்க விரும்பும் சக்திகள் என்று பகிரங்க அறிக்கை விடுத்தது.

இலங்கை அரசே, அமிர்தலிங்கம் கொலையில் புலிகள் தொடர்பை மறுத்தது.

அமிர்தலிங்கம் வரலாற்றை எழுதியவரே கொலையில் உறுதியான முடிவுக்கு வரவில்லை .

அமிர்தலிங்கத்தை கொலை செய்யக் கூடிய தேவையோ, அரசியல் சூழலோ புலிகளுக்கு இல்லை — இவ்வளவுக்குப் பிறகு ராஜீவ் சர்மா, அமிர்தலிங்கத்தைக் கொன்றது புலிகள் தான் என்று பழிபோட்டு விடுகிறார்.

ஒரு காலத்தில் ஈழத்தில் தமிழர்களின் செல்வாக்கு மிக்க தலைவராக உயர்ந்து நின்ற அமிர்தலிங்கம், 1981க்குப் பிறகு இந்தியாவை நம்பினார். இந்திரா காந்தி தமிழ் ஈழத்தை வென்று, தம்மிடம் ஒப்படைப்பார் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தார். ஆனால், 1984 இல் இந்திரா, சீக்கியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டவுடன் அவரது கனவு தகர்ந்தது.
அமிர்தலிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டபோது அவர் 5 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு மீண்டும், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டிருந்தார். அந்த 5 ஆண்டுகாலமும் தற்காலிகமாக

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழ்நாட்டில் அரசு பாதுகாப்போடு தங்கியிருந்தார். இந்திய உளவு நிறுவனத்தோடு அமிர்தலிங்கம் மேற்கொண்ட ரகசிய உடன்பாடுகள் இலங்கை நாடாளுமன்றத்துக்கு வந்த அமிர்தலிங்கம் வழியாக அம்பலமாகிவிடுமோ என்ற அச்சம், 'ரா' உளவு நிறுவனத்துக்கு வந்திருக்கக்கூடும். தாங்கள் வகுத்து செயல்படுத்திக் கொண்டி ருக்கும் ரகசிய திட்டங்கள் அம்பலமாவதற்கு உளவுத் துறை எப்போதுமே வாய்ப்புகளைத் தருவதில்லை, இது உளவுத் துறையின் செயல்பாடுகளை அவதானிப்போருக்கு நன்றாகவே தெரியும் அந்த சதிக்கே அமிர்தலிங்கம் பலியானார்.

இதேபோல், 1985 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களான வி.தர்மலிங்கம், எம். ஆலால சுந்தரம் ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டபோது அந்தப் பழியும் விடுதலைப் புலிகள் மீது தான் போடப்பட்டது. அது உண்மை தானா? அதையும் தான் பார்த்து விடுவோமே!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## இந்திய உளவுத் துறை அதிகாரி உன்னி கிருஷ்ணன்களின் கதை

அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் கொலைகளை நடத்தியது புலிகள் தான் என்று பழிபோட்டது போல், அதற்கு முன்பே 1985 ஆம் ஆண்டில் இரண்டு நாடாளுமன்ற தலைவர்கள் கொல்லப்பட்டபோதும், புலிகள் மீதே வீண் பழி சுமத்தினர். கொல்லப்பட்ட வி.தர்மலிங்கம், எம். ஆலால சுந்தரம் என்ற இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும், யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்தனர். தர்மலிங்கம் 23 ஆண்டு களாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து, தமிழர்களுக்கு தொண்டு செய்தவர். அதேபோல் ஆலாலசுந்தரம் நியமன முறையில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். மிகவும் நயவஞ்சகமாக இவர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப் பட்டார்கள். ஆலால சுந்தரம் வீட்டில் இருந்தபோது நன்னடத்தை சான்றிதழ் கேட்கச் சென்ற இரண்டு பேர், அவரை வீட்டிலிருந்து இழுத்து வந்து காரில் கடத்தினர். தர்மலிங்கம் திருமண நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோது, ஆலால சுந்தரம் அவரை அவசரமாக சந்திக்க விரும்புவதாகக் கூறி வெளியே அழைத்து வந்து காரில் பலவந்தமாக ஏற்றி கடத்தினர். அடுத்த நாள் — தர்மலிங்கம் சடலம் கல்லறை ஒன்றின் அருகே நெற்றியில் குண்டுக் காயங்களோடு கிடந்தது. அருகே கிடந்த ஒரு துண்டு காகிதத்தில், "தமிழினத்துக்கு துரோகமிழைத்தவருக்கு வழங்கப்பட்ட தண்டனை இது. ஈழத்தை அடகு வைப்பவர் களுக்கு குறிப்பாக தமிழர் அய்க்கிய விடுதலை முன்னணிக்கு — இப்படிக்கு தன்மானமுள்ள தமிழர்கள்" என்று எழுதப்பட் டிருந்தது.

ஆலால சுந்தரத்தின் சடலம் மார்பில் குண்டு காயங்களோடு யாழ்ப்பாணம் நகரில் கைப்பற்றப்பட்டது. இந்த படுகொலைகள் யாழ்ப்பாணத்தில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தின. அதிலும் தர்மலிங்கம், டி.யு.எல்.எப். தலைவர் அமிர்தலிங்கம் போக்கு பிடிக்காமல் அதிலிருந்த விலகி, அதிருப்தியாளர்கள் உருவாக்கியிருந்த தமிழ் ஈழ விடுதலை முன்னணி அமைப்பில் இணைந்திருந்தார். பழகுவதற்கு மிகவும் எளிமையானவர். மற்றவர்களுக்கு உதவக் கூடியவர். பல ஏழைக் குழந்தைகளை தனது சொந்த செலவிலேயே பள்ளியில் சேர்த்து படிக்க வைத்தவர். அவரிடமிருந்த ஒரே வாகனம் சைக்கிள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தான். ஆலால சுந்தரம் — வழக்கறிஞர்; ஆனாலும் மிகவும் ஏழ்மை யாகவே வாழ்ந்தவர். தன்னுடைய மகள், ஒரு சைக்கிள் கேட்டபோது, மனைவியின் நகையை விற்றுத்தான் வாங்கித்தர வேண்டிய நிலையில் இருந்தார். இந்த இருவரின் கொடூரமான கொலையும் யாழ்ப்பான மக்களின் நெஞ்சை உலுக்கியது. விடுதலைப் புலிகள் தான் ஈவிரக்கமின்றி, இந்தக் கொலையை செய்தார்கள் என்ற பிரச்சாரம் திட்டமிட்டு பரப்பப்பட்டது. பழிகள் புலிகள் மீது விழுந்தது.

இந்த சம்பவம் நடந்த 1985 ஆம் ஆண்டு கால கட்டத்தைப் பார்க்க வேண்டும். 1984 ஆம் ஆண்டுகளில் இந்திரா பிரதமராக இருந்தபோது போராளிகளுக்கு இந்தியாவில் ஆயுதப் பயிற்சி தர முன் வந்தார். 'ரா' உளவு நிறுவனம், அதற்கான ஏற்பாடுகளை செய்தது. அப்படிப் பயிற்சி பெறுவதற்கு 'ரா முதலில் தேர்ந்தெடுத்த அமைப்பு சபாரத்தினம் தலைமையில் இயங்கிய டெலோ தான்! காரணம். இந்தியா சொல்வதை அப்படியே நிறைவேற்றும் அமைப்பாக 'டெலோ' இருந்தது. பிறகு படிப்படியாக ஏனைய அமைப்புகளுக்கும் பயிற்சி தர 'ரா' முன் வந்தது. 'விடுதலைப்புலிகள் ' மட்டும் தனித்து விடப்பட்டனர். விடுதலைப்புலிகள் இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் வர மாட்டார்கள் என்ற உறுதியான முடிவில் உளவு நிறுவனம் இருந்ததே இதற்குக் காரணம். ஏனைய குழுக்கள் இந்தியாவின் பயிற்சி மற்றும் ராணுவ உதவிகளோடு பலம் பொருந்தியவைகளாக மாறும்போது விடுதலைப் புலிகள் அழிக்கப்படக் கூடிய ஆபத்தை உணர்ந்த பிரபாகரன், இந்தியாவின் ராணுவப் பயிற்சியில் புலிகள் இயக்கத்தையும் இணைக்கவேண்டும் என்று வற்புறுத்தி இணைத்தார்.

இந்த சூழ்நிலையில் 1984 இல் இந்திரா, தனது மெய்க் காப்பாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். ராஜீவ் பிரதமரானவுடன் இந்திராவின் ஈழத் தமிழர் ஆதரவு அணுகுறையில் அதிருப்தியுற்றிருந்த பார்ப்பன அதிகார வர்க்கம், ராஜீவை தங்கள் வழிக்கு திருப்பினர். அதுவரை ஈழத் தமிழர்ப் பிரச்சினைக்கு பொறுப்பேற்றிருந்த பார்த்தசாரதி என்ற அதிகாரி மாற்றப்பட்டு பண்டாரி என்ற அதிகாரி, அந்த பொறுப்புக்கு வந்தார். ஈழ விடுதலைப் போராட்டத்தில் சமரசத்துக்கு உட்படாத இந்தியாவின் வலையில் விழ மறுத்த விடுதலைப் புலிகள் இயக்கத்தை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தி, அவர்களை பலவீனப்படுத்தும் திட்டங்களை உளவு நிறுவனம் உருவாக்கியது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தர்மலிங்கம், ஆலால சுந்தரம் படுகொலைகள் அந்த நேரத்தில் தான் நடந்தன. இந்தப் படுகொலைகளை விடுதலைப் புலிகள் மறுத்தாலும் எந்த ஆதாரமும் இன்றி புலிகள் மீது பழி போட்டே பிரச்சாரங்கள் நடந்தன.

ராஜீவ் சர்மாவும் இந்த நூலில், "1980—1990—க்கும் இடைப்பட்ட காலத்தில் சக தமிழ் இயக்கங்களைச் சார்ந்த 300 போராளிகளை மற்றும் எல்.டி.டி.ஈ. இயக்கத்திற்குள்ளேயே அவருக்கு எதிர்ப்பு தெரிவித்த பல முக்கிய தலைவர்களை பிரபாகரன் கொன்றார்'' என்று எந்த ஒரு சிறு ஆதாரமும் இன்றி புலனாய்வுத் துறை பரப்பிய அதே பொய்களை அப்படியே வாந்தி எடுத்து எழுதுகிறார். இதிலிருந்தே இந்த நூல், எந்த 'எஜமானருடைய ' குரலை எதிரொலிக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் படுகொலைகளைப் போலவே, தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் படுகொலைகளும் புலிகள் மீது வீண்பழி சுமத்தவே அரங்கேற்றப்பட்டன. இதற்கு இரண்டு ஆதாரங்களை முன் வைக்க விரும்புகிறேன். ஒன்று — உளவு நிறுவனத்தின் நம்பிக்கைக்குரிய ஆய்வாளர் நாராயணசாமி, விடுதலைப்புலிகளுக்கு எதிராக எழுதி, உளவுத் துறையால் போற்றப்படுகிற, அவரது நூலிலேயே இந்தக் கொலையில் டெலோ கண்டனத்துக்கு உள்ளானது என்று கூறுகிறார். ஆனால் உளவு நிறுவனங்கள் விடுதலைப் புலிகளையே குற்றம் சாட்டியதாக குறிப்பிடுகிறார். சுட்டுக் கொல்லப்பட்ட தர்மலிங்கத்தின் மகன் 'புளோட்' என்ற போராளிகள் குழுவில் சேர்ந்திருந்தார். அவரும் விடுதலைப் புலிகள் தான் இதைச் செய்தார்கள் என்று கூறவில்லை. அப்போது எல்.டி.டி.ஈ — டெலோ — ஈரோஸ் — ஈ.பி.ஆர்.எ.ஃப்' அமைப்புகள் ஒன்று சேர்ந்து ஈழ தேசிய விடுதலை முன்னணி என்ற அமைப்பை உருவாக்கியிருந்தன. இந்த அமைப்பில் இடம் பெற்றுள்ள ஏதோ ஓர் அமைப்பே தனது தந்தையை கொலை செய்ததாகவே கூறினார். ஆனால் உண்மையில் இந்தக் கொலையை செய்ய உத்தரவிட்டவர், இந்திய உளவு நிறுவனத்தின் உத்தரவுகளை ஏற்று செயல்பட்டு வந்த டெலோ' அமைப்பின் தலைவர் சிறீசபாரத்தினம் தான். இதற்கு சான்று விடுதலைப் புலிகளை கடுமையாக எதிர்த்து எழுதப்பட்ட நூலான முறிந்த பனை' என்பதாகும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ராஜன் ஹூல் உள்ளிட்ட 4 பேராசிரியர்கள் எழுதிய இந்த நூல் விடுதலைப் புலிகளுக்கு எதிராக எழுதப்பட்ட நூலாகும். அந்த நூலே தர்மலிங்கம், ஆலால சுந்தரம் படுகொலைகளைச் செய்தவர்களை பற்றி இவ்வாறு எழுதியுள்ளது:

"தமிழர் அய்க்கிய விடுதலைக் கூட்டணி, நாடாளுமன்ற உறுப்பினர்களுள் திருவாளர்கள் தர்மலிங்கமும், ஆலால சுந்தரமும், யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து வசித்து வந்தவர்கள். இந்தியாவில் வாழ்ந்து வந்த டெலோ, இயக்கத்தினருடன் பேசிய அநேகரின் சான்றாதா ரங்களின்படி, இக்கொலைகள் பின் வருமாறு நடந்தனவென்று தெரியவந்தது. விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரான பிரபாகரன், தமிழர் அய்க்கிய விடுதலைக் கூட்டணியைக் கடுமையாக மிரட்டி உரையாற்றிய பின், பிரபாகரன் இக்கொலைகள் தொடர்பாக குற்றஞ்சாட்டப் பட்டு, மதிப்பிழக்கப்படுவார் என எதிர்பார்த்த டெலோ தலைவர் சிறீசபாரத்தினம், இந்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கொலை செய்யுமாறு தனது ஆட்களுக்கு இரகசியமாக ஆணையிட்டார். எதிர் பார்த்தது போல், விடுதலைப் புலிகளே பெரும்பாலும் இக் கொலைகளுக்கு குற்றஞ்சாட்டப்பட்டனர். தர்மலிங்கத்தின் வீட்டுக்கு அண்மையில் காவல் நின்ற ஒரு வோட் உறுப்பினர் கொலையாளிகள் வந்த வாகனம் 'டெலோ' வுக்குச் சொந்தமானதென இனங்கண்டார்."

— "முறிந்த பனை'', பக்.82

இதுதான் புலிகள் எதிர்ப்பாளர்களே தங்களது நூலில் எழுதியுள்ள உண்மை .

இந்தியாவின் போராளிகளுக்கு பயிற்சி தரப்பட்ட காலகட்டங்களிலும் சரி, அதைத் தொடர்ந்து, ஈழத்தில் கொலைகள் நடந்த காலத்திலும், அவற்றில் இந்திய உளவு நிறுவனங்களின் பங்கு உண்டு என்பதற்கு, மற்றொரு முக்கிய தகவலை நாம் மக்கள் மன்றத்தில் சொல்லியாக வேண்டும். தமிழ்நாட்டில் பல்வேறு போராளிகள் குழுக்களோடு தொடர்பு கொண்டு அவர்களுக்கு ராணுவப் பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்த தரவேண்டிய பொறுப்பு 'ரா' உளவு நிறுவனத்தின் கள அதிகாரியாக டி.அய்.ஜி. நிலையில் பணியாற்றிய உன்னிகிருஷ்ணன் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த உன்னி கிருஷ்ணன்

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

தான் பயிற்சிக்கு முதல் அணியாக 'டெலோ' வை தேர்ந்தெடுத்தார். இந்த உன்னி கிருஷ்ணனின் பின்னணி என்ன என்பதையும் நாம் சொல்லியாக வேண்டும்.

1981 இல் உன்னிகிருஷ்ணன் கொழும்பில் 'ரா'வுக்காக வேலை செய்த போது — அமெரிக்க தூதரக அதிகாரி ஒருவருடன் நட்பு கொண்டார். இருவரும் நெருக்கமாகி, பல 'ஒழுக்கக் கேடான' செயல்களில் ஈடுபட்டனர். பல பெண்களுடன், பாலியல் உறவுகளை வைத்திருந்தனர். அப்போது — அமெரிக்க தூதரக அதிகாரி வழியாக — இந்திய உளவுத் துறையின் செய்திகளை அமெரிக்க உளவு நிறுவனமான 'சி.அய்.ஏ.க்கு அனுப்பி வந்தார். 1983 களில் தமிழ்ப் போராளிக் குழுக்களுடன் — நேரடி தொடர்பு கொண்டிருந்த காலத்தில், உன்னிகிருஷ்ணன், ராவின் அதிகாரி மட்டுமல்ல; 'சி.அய்.ஏ.'வுக்கும் உளவாளி! தமிழ்ப் போராளிக் குழுக்களின் செயல்பாடுகளுக்கு பொறுப்பு ஏற்ற பிறகு, அவர் — சிறீலங்கா உளவுத்துறைக்கும் நெருக்கமானார். கொழும்பில் — அவருக்கு பல பெண்களுடன் இருந்த உறவை சிறீலங்கா உளவுத் துறைப் பயன்படுத்திக் கொண்டு, மிரட்டி, உன்னிகிருஷ்ணனை தனது வலையில் சிக்கு வைத்தது. ஒரே கட்டத்தில் 'ரா' — சி.அய்.ஏ.' — சிறீலங்கா உளவக் துறைகளுடன், ரகசியமாக செயல்பட்டுக் கொண்டும், அதே காலத்தில் ஈழத் தமிழ்ப் போராளிக் குழுக்களுடனும் நேரடி தொடர்பு கொண்டும் உன்னிகிருஷ்ணன் செயல்பட்டுள்ளார். 1985 இல் சென்னையில். இவர் தமிழ் ஈழப் போராளிக் குழுக்களுடன் தொடர்பு கொண்டிருந்தபோது — பம்பாயில் — அமெரிக்காவின் 'பான் விமான சேவை யில் வேலை செய்த ஒரு அமெரிக்கப் பெண்ணுடன் தொடர்பு ஏற்பட்டது. இந்தத் தொடர்பை ஏற்படுத்தித் தந்தவரும் உன்னி கிருஷ்ணனின் நண்பரான கொழும்பில் இருந்த அமெரிக்க தூதரக அதே அதிகாரிதான். சென்னையிலிருந்து — பம்பாய்க்குப் பறந்து கொண்டு, விமானப் பணிப் பெண்ணுடன், அடிக்கடி சிங்கப்பூருக்குப் போய், உல்லாசமாக இருந்தார், உன்னி கிருஷ்ணன். ஆனால் எப்படியோ இவர்கள் இருவரும் இணைந்த நிலையில் ' இருந்த படங்கள் ரகசியமாக எடுக்கப்பட்டன. ஈழத் தமிழர்ப் பிரச்சினையில் இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகள்; இந்தியாவின் வெளியுறவுத் துறை முடிவுகள் ; 'ரா'வின் திட்டங்கள் பற்றிய அனைத்துத்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தகவல்களும் — உன்னி கிருஷ்ணன் வழியாக — சிறீலங்கா அரசுக்குக் கிடைத்து வந்தன.

கொழும்பில் இந்திய தூதராகவிருந்த ஜே.என். தீட்சித் இதை ஒப்புக் கொண்டு தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

"1986 ஆம் ஆண்டுகளில் — முதல் 6 மாதங்களில் — நான் லலித் அதுலத் முதலியுடன் (இவர் இலங்கையில் செல்வாக்குள்ள அமைச்சர்) நடத்திய உரையாடல்களில் — அவர் தெரிவித்த கருத்துக்கள் — என்னை வியப்பில் ஆழ்த்தின. இந்தியாவின் வெளிநாட்டுத் துறை அதிகாரிகள், உளவு நிறுவன அதிகாரிகள்; இவர்களின் செயல்பாடுகள் பற்றி, ஏராளமான தகவல்களை அவர் பகிர்ந்து கொண்டது. என்னை வியப்பில் ஆழ்த்தி விட்டது. உடனே நான், இதுபற்றி டெல்லிக்கு தகவல் கொடுத்தேன்"

— என்று எழுதியுள்ளார். (நூல்: Assignment Colombo ) இப்படி — இந்திய உளவுத்து றை ரகசியங்களை சிறிலங்காவுக்கு கொடுத்தது யார் என்பதையும் — ஜே.என் தீட்சித் குறிப்பிடுகிறார்.

சிறீலங்காவுக்கு, இந்தத் தகவல்களைத் தந்தது எங்களது உளவு அமைப்பில் பணிபுரிந்த அதிகாரி உன்னிகிருஷ்ணன் தான். அவர் அமெரிக்க விமானப் பணிப்பெண் ஒருவர் மூலமாக, அமெரிக்கர் வலையில் வீழ்ந்து விட்டார். அவரது எதிர்மறையான நடவடிக்கைகள் 1986 மத்தியில் தெரிய வந்தது. தொடர்ந்து — அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. உன்னிகிருஷ்ணன் "அமைதியாக்கப்பட்ட" பிறகு, சிறீலங்காவுக்கு இந்தியா பற்றி கிடைத்து வந்த தகவல்கள் கடுமையாகக் குறைந்துவிட்டன. சிறீலங்கா வுக்கு உன்னி கிருஷ்ணன்தான் ரகசியத் தகவல்களைத் தந்தார் என்பது இதன் மூலம் உறுதியானது"

— என்று மேலோட்டமாக — விரிவாக உண்மைகளை வெளியிடாமல், ஆனால் உண்மைகளை ஒப்புக் கொண்டு எழுதியுள்ளார், ஜே.என். தீட்சித்

“The Sri Lanka source of information was a senior operative of our own intelligence agency, Unnikrishnan, who had been subverted most probably by the Americans through a foreign lady working for Pan American Airlines. His negative activities

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

were discovered sometime towards the middle of 1986, which was followed by appropriate procedural action against him. The fact that the Sri Lankan Government's advance knowledge about Indian policies and intentions clearly diminished after Unnikrishnan was neutralized proved that he was a major source of information to the Sri Lankans. (Assignment Colombo– (1998)pg. 61)"

உண்மைகளை மறைக்க முடியாமல் – மென்மையான வடிவில் ஜே.என். தீட்சித் தந்துள்ளார் என்றாலும், கே.வி.உன்னி கிருஷ்ணனின் நடவடிக்கைகளை அவரால் மறைக்க முடியவில்லை ."

–ஆக அமெரிக்கா, இந்தியா, இலங்கை என்று மூன்று நாடுகளுக்கும் ஒரே நேரத்தில் உளவு வேலை பார்த்த ஒரு ஒழுக்கசீலரிடம்' தான், போராளி குழுக்களுக்கு பயிற்சி தரும் பொறுப்புகள் தரப்பட்டன. இந்த 'தர்மபுத்திரர்களுக்கு தலைமையேற்று சென்னையில் செயல்பட்டவர் பார்த்தசாரதி என்ற வெளியுறவுத் துறையைச் சார்ந்த இளம் பார்ப்பன அதிகாரி! (இவர் இந்திரா காந்தி காலத்தில் செயல்பட்ட மூத்த அதிகாரி பார்த்தசாரதி என்பவர் அல்ல) இந்திய ராணுவம் ஈழத்தில் தமிழ் மக்களைக் கொன்று குவித்த காலத்தில், இவர். உளவுத் துறையினருடன் இணைந்து ஒவ்வொரு நாளும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பொய்யான தகவல்களை ஊடகங்களுக்கு தந்து வந்தார். அரசு கட்டுப்பாட்டிலிருந்த தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒவ்வொரு நாளும் புலிகளுக்கு எதிரான செய்திகளைப் பரப்பி வந்தன.

இப்படிப்பட்ட 'உன்னிகிருஷ்ணன்களைக்' கொண்ட நயவஞ்சக இந்திய உளவு நிறுவனத்தின் பார்ப்பன முகத்தை ராஜீவ் சர்மா தனது நூலில் எழுதாமல் எல்லா கொலைகளுக்குமான பழியையும் விடுதலைப் புலிகள் மீதே போடுவது என்ன நியாயம்? எது எவரின் குரல்?

தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் என்ற மக்கள் செல்வாக்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை வஞ்சகமாகக் கொன்று பழியை புலிகள் மீது போட்டது –

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

டெலோ' என்ற அமைப்பு.

புலிகளை எதிர்ப்பவர்களே இந்த உண்மைகளை பதிவு செய்து விட்டனர்.

அந்த 'டெலோ' உளவுத் துறையின் முழுமையான கட்டுப்பாட்டில் இயங்கிய அமைப்பு.

இந்தியா, இலங்கை அமெரிக்கா என்று ஒரே நேரத்தில் 3 நாடுகளின் உளவாளியாகவும், அதே நேரத்தில் பல்வேறு போராளி குழுக்களுடனும் நெருக்கமாக உறவாடி விடுதலைப் புலிகளுக்கு எதிராக திட்டங்களை வகுத்த உன்னி கிருஷ்ணன் தான் கொலைகளின் பின்னணியாக செயல்பட்டிருக்கிறார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## 1988—90 இல் இந்திய உளவுத் துறை பின்னிய சதி வலைகள்

ரா' உளவு நிறுவனத்தின் செயல்பாடுகளை கவனிப்போருக்கு பிரேமதாசா கொலையில், இந்திய உளவு நிறுவனத்தின் சதி இருப்பதை புரிந்து கொள்ள முடியும். 'ரா' உளவு நிறுவனத்தின் திட்டங்கள், செயல்பாடுகள் குறித்து பாகிஸ்தான் நாட்டைச் சார்ந்த ஆய்வாளர் எஸ்.எச். அலி, 'inside Raw' ('ரா'வின் உள்ளே ...) என்ற நூலை எழுதி 1981 இல் வெளியிட்டார். 'ரா' தனது உளவு நிறுவனத்தில் ஆட்களை இணைத்துக் கொள்ள பின்பற்றும் வழிமுறைகளை அதில் விளக்குகிறார். அதில், "அந்தந்த நாடுகளில் 'ரா' நிறுவனம் தங்களின் நோக்கத்தை நிறைவேற்ற உள்ளூரிலேயே ஆட்களைப் பிடித்து விடும். சாணக்கியன் தந்த வழிமுறைகளைப் பின்பற்றி, மனிதர்களின் பலவீனங்களான 'மது, மங்கை, பணம்' என்ற ஆசைகளைக் காட்டியும் தங்கள் திட்டத்தை செய்து முடித்து விடுவார்கள். சில நேரங்களில் மிரட்டலிலும் இறங்குவார்கள். பிரிவினைப் பற்று, இனப்பற்று, பிராந்தியப் பற்று போன்ற உணர்வுகளையும் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள்" — என்று குறிப்பிட்டுள்ளார். அதே 'மது— மங்கை' பலவீனங்கள் தான் பிரேமதாசா கொலையிலும் பின்பற்றப் பட்டிருக்கிறது. " தென் கிழக்கு ஆசியாவில், இந்தியா பின்பற்றும் கொள்கைகளை (அதாவது ராஜீவ் காந்தியை தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கதாநாயகனாக்கும் கொள்கை) நான் கடுமையாக எதிர்ப்பதால், 'ரா' உளவு நிறுவனம், என்னைக் கொல்ல சதி செய்கிறது" என்று, பிரேமதாசா கூறி வந்திருக்கிறார். இது தொடர்பாக மற்றொரு முக்கிய செய்தியை சுட்டிக்காட்ட வேண்டும்.

பிரேமதாசா குண்டு வெடித்துக் கொல்லப்பட்டவுடன், கொழும்பு நகராட்சி அதிகாரத்தின் கீழ் செயல்பட்ட தீயணைப்புத் துறை உடனே அந்த இடத்துக்கு விரைந்து சம்பவம் நடந்த இடத்தில் கைரேகை, ரத்தம் போன்ற தடயம் களை தண்ணீரைப் பீற்றி அழித்து முற்றிலுமாக அகற்றி விட்டது. இதனால் கொலைக்கான தடயங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டன. கொழும்பு ஊடகங்கள் இந்த செய்திகளை வெளியிடாமல் தடுக்கப்பட்டன; தீயணைப்புப்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

படையை அனுப்பும் உத்தரவை பிறப்பித்தது யார்? தடயங்களை அழிக்கச் சொன்னது யார்?

இந்தக் கேள்விக்கான விடைகள் மர்மமாகவே உள்ளன. பிரேமதாசாவின் கொலையில் அடங்கி யுள்ள இத்தனை மர்மங்களையும் மூடி மறைத்து விட்டு, " விடுதலைப் புலிகள் பிரேமதாசாவை கச்சிதமாக கொலை செய்தார்கள்" என்றும், குண்டு வெடித்து இறந்தவரே விடுதலைப் புலிகளின் உளவாளி என்று நிரூபித்து விட்டான் என்றும் எழுதுவதும், நியாயம் தானா?

பிரேமதாசா படுகொலையைப் போல் புளோட் இயக்கத் தலைவர் முகுந்தன் கொலைப் பழியையும், ராஜீவ் சர்மா விடுதலைப் புலிகள் மீதே போடுகிறார். அதற்கான ஆதாரம் — சான்று எதையுமே முன்வைக்க அவர் தயாராக இல்லை.

புளோட் இயக்கத்தின் தலைவர் முகுந்தன் பின்னணி என்ன?'ரா'வுக்கும் அவருக்கும் உள்ள உறவு என்ன?

தென் கிழக்கு ஆசியாவில் காஷ்மீர், சிக்கிம், நேபாளம், பூட்டான் நாடுகள் இந்திய ராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த நிலையில், மாலத்தீவு மட்டும் வரவில்லை . மாலத்தீவிலே தொடர்ந்து அதிபராக இருந்த அப்துல் ஹ்யூம், பாகிஸ்தானுடன் நெருக்கமாக இருந்தார். அவரை பணிய வைக்க 'ரா' உளவு நிறுவனம் ஒரு கவிழ்ப்பு வேலையை நடத்த திட்டமிட்டது. அதற்கு முகுந்தனிடம் 'ரா' நிறுவனம் பேரம் பேசியது. இது 1987 ஆம் ஆண்டு நடந்தது. அப்போது விடுதலைப் புலிகளுக்கும், புளோட் இயக்கத்துக்குமிடையே மோதல்கள் நடந்த காலகட்டம். மாலத் தீவில் தாக்குதல் ஒன்றை நடத்த, புளோட் முகுந்தனிடம் பெரும் தொகையும், ஆயுதங்களும் 'உளவு நிறுவனம் வழங்கியது. 1987 ஆம் ஆண்டு அவர் தேதி, இந்திய ராணுவத்தின் விசேட விமானத்தில் ரா அதிகாரிகள் வவுனியா வந்து, உமாமகேசுவரனை சென்னைக்கு அழைத்து வந்து பேரம் பேசினர். மாலத் தீவில் அதிபருக்கு எதிராக தாக்குதல் திட்டத்தை வகுத்துக் கொடுத்து விட்டு, தாக்குதல் முயற்சி தோல்வி அடைந்த நிலையில், பிறகு இந்தியாவே தனது படைகளை அனுப்பி, தாக்குதல் நடத்திய புளோட் இயக்கத்தினரை கைது செய்து, மாலத் தீவு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அதிபருக்கு உதவியது போல் நாடகம் நடத்தி, மாலத் தீவு அதிபரை இந்தியாவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

உளவுத் துறை விரித்த வலையில் வீழ்ந்தார் முகுந்தன். (குறிப்பு: மாலத்தீவு ஆட்சிக் கவிழ்ப்பு பற்றி விரிவான செய்திகளை நான் எழுதிய ஈழப் பிரச்சினையில் இந்திய உளவு நிறுவனங்களின் சதி' நூலில் படிக்கலாம்) பிறகு, கொழும்பு நகரில் முகுந்தன் கொல்லப்பட்டார்.

இந்தியா சதி செய்த ரகசியங்கள், முகுந்தன் வழியாக வெளியே தெரிந்து விடாமல் தடுக்க வேண்டிய அவசியம் உளவுத் துறைக்கு இருந்தது. 1989 ஜூலையில் உமாமகேசுவரன் கொழும்பில் ரயில் நிலையத்தில் சுடப்பட்டு, பிணமாகக் கிடந்தார். அப்போது புளோட் அமைப்பு இரண்டாகப் பிரிந்து நின்று, தங்களுக்குள் சகோதர யுத்தத்தை நடத்திக் கொண்டிருந்தன. முகுந்தனின் எதிரணி குழுவைச் சார்ந்தவர்களையே — முகுந்தனை " அமைதியாக்குவதற்கு " உளவு நிறுவனம் பயன்படுத்தியது. கொழும்பு ஊடகங்கள் முகுந்தனின் போட்டிக் குழுவைச் சார்ந்தவர்களே இதை செய்திருக்கக்கூடும் என்று எழுதின.

முகுந்தன் கொலைக்குக் காரணமானவர்கள் யார் என்பது இதுவரை உறுதி செய்யப்படவில்லை. புலிகளுக்கு எதிராக ஏராளமான குற்றச்சாட்டுகளை அடுக்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர்கள் எழுதிய 'முறிந்த பனை நூலும், முகுந்தன் கொலையை புலிகள் மீது போடவில்லை. முகுந்தன் கொல்லப்பட்டார்' என்ற ஒற்றை வரியோடு முடித்துக் கொண்டுவிட்டனர். ஆனால், ராஜீவ் சர்மா, எம் ஆதாரமுமின்றி புலிகள் மீதே பழி போட்டுவிடுகிறார். 1988—90 காலகட்டங்களில் நடந்த பல்வேறு நிகழ்வுகளுக்கு விடுதலை புலிகளை மட்டுமே குற்றவாளியாக்கி இந்திய உளவுத் துறையில் 'பிரச்சாரகர்களாக' நூல்களை எழுதிய ராஜீவ் சர்மாவும் நாராயணசாமியும் 'ரா' உளவு நிறுவனம் அக்கால கட்டத்தில் நடத்திய திரைமறைவு சதிகளை திட்டமிட்டே மறைக்கிறார்கள். இந்த காலகட்டத்தில் —
விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பை உயர்த்திப் பிடித்து, அதை வடகிழக்கு மாகாணத்தில் தங்களின் 'எடுபிடி ' ஆட்சியாக உட்கார வைத்தது யார்?

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

1990 இல் சிறுவர்களைக் கொண்டு 'தமிழ் தேசிய ராணுவம்' என்ற அமைப்பை உருவாக்கி அதற்கு இந்திய ராணுவ முகாம்களில் பயிற்சி தந்து ஆயுதங்களையும்
வழங்கியது யார்?
மீண்டும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான 'முறிந்த பனை நூலிலிருந்தே எடுத்துக் காட்டுகிறோம் :

"1989 ஜூன் மாதத்தில் — இந்தியா கட்டாய ஆள் சேர்ப்பு மூலம் இளம் பையன்களைக் கொண்டு (சிறுவர்கள்) தமிழ் தேசிய ராணுவத்தை உருவாக்கியது. இவர்கள் போர் புரிய விருப்பமில்லாதவர்கள் என்பதோடு, சண்டையிடுவதற்கான தார்மீகக் காரணங்களையும் நம்புவதற்குத் தயாராக இல்லை. இவ்வாறு மிகப் பெரும் சமூக நாசத்திற்கான தயாரிப்பிற்கு அரசாங்கம் தயாராக இருந்தது. இவர்களுக்கு இந்திய அதிகாரிகளால் பயிற்சி வழங்கப்பட்டது.'

— (நூல் முறிந்த பனை ' — பக் 538)

இப்படி இந்திய ராணுவத்தால் பயிற்றுவிக்கப்பட்டு, உளவு நிறுவனத்தால் விடுதலைப் புலிகளுக்கு எதிராக உருவாக்கப்பட்ட இந்த தமிழ் தேசிய ராணுவம் தான் அம்பாறையில் 40 முஸ்லீம்களைக் கொன்று குவித்தது. முறிந்த பனை நூல் இதை உறுதி செய்கிறது.
"1989 அக்டோபர் மாதத்தின் பிற்பகுதியில் பாறையில் ஒரு கூட்டத்தில் இருந்த தமிழர்களை தமிழ் தேசிய இராணுவப் படையினர் அங்கிருந்து வெளியேறுமாறு கூறிவிட்டு, அங்கிருந்த 40 முஸ்லீம் மக்களை அங்கேயே கொன்று குவித்தனர். தமிழ் ராணுவப்படையின் சில உறுப்பினர்கள் சரணடைய முயற்சி செய்தபோது, சக ஆட்களாலேயே, அவர்கள் சுடப்பட்டனர்.'

— ('முறிந்த பனை' நூல் பக் 539)

— இப்படி இந்திய உளவு நிறுவனம் நடத்திய சதிராட்டங்களை ஏன் இவர்கள் மறைக்கிறார்கள்?

விடுதலைப்புலிகளுக்கு எதிராக மாத்தையாவை உருவாக்கி, பிரபாகரனையே தீர்த்துக் கட்ட சதி செய்தது யார் ?

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ராஜீவ் கொலை வழக்கில் பிரபாகரன், பொட்டு அம்மான் பெயரை மட்டும் குற்றப் பத்திரிகையில் சேர்த்து விட்டு, இயக்கத்தில் இரண்டாம் இடத்திலிருந்த மாத்தையாபெயரை மட்டும் சேர்க்காமல் விட்டது யார்?

— மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை திரைமறைவில் அரங்கேற்றிய உளவு நிறுவனம் பற்றி, இந்த நூல்கள் கள்ள மவுனம் சாதிப்பது ஏன்?

அடுத்தப் பிரச்னைக்கு வருவோம். விடுதலைப் புலிகள் சில அன்னிய உளவு நிறுவனங்களுக்காக ராஜீவ் கொலையை நடத்தி முடித்து, அதற்காக ஆயுத உதவிகளையும், கப்பல் வசதிகளையும் பெற்றுக் கொண்டனர் என்பதுதான் ராஜீவ் சர்மாவின் புலிகளுக்கு அப்பால்' நூலின் மய்யமான கருத்து. விடுதலைப் புலிகள் இஸ்ரேல் நாட்டின் உளவு அமைப்பான மொசாட்' அமைப்பிடம் பயிற்சிப் பெற்றார்கள் என்று ராஜீவ் சர்மா குற்றம் சாட்டுகிறார்.

ராஜீவ் சர்மாவின் குற்றச்சாட்டு உண்மைதானா?

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## புலிகள் இஸ்ரேலிடம் பயிற்சிப் பெற்றவர்களா?

ராஜீவ் கொலையில் அன்னிய சக்திகள் சதிப் பின்னணி உண்டு என்பதே நமது உறுதியான கருத்து. குறிப்பாக இஸ்ரேல் உளவு நிறுவனமான மொசாத் துக்கு இதில் பங்கு உண்டு என்று ஒரு வலிமையான கருத்து முன் வைக்கப்படுகிறது. 1984 ஆம் ஆண்டு தொடக்கம் — இஸ்ரேல் உளவு நிறுவனமான மொசாத்' இலங்கை அரசோடும், இந்திய உளவு நிறுவனத்தோடும் தனது தொடர்புகளை நெருக்கமாக்கிக் கொண்டு செயல்பட்டிருக்கிறது என்பது உண்மை . ஆனால், விடுதலைப் புலிகள் 'மொசாத்' உளவு நிறுவனத்தோடு நெருக்கம் கொண்டு, அந்த உளவு நிறுவனத்தின் கூலிப்படையாக மாறி, ராஜீவ் கொலையை செய்து முடித்தனர் என்று ராஜீவ்சர்மா தனது நூலில் குற்றம் சாட்டுவது அபாண்டம்; அபத்தம். அதற்கான வலிமையான ஆதாரம், சான்றுகளை ராஜீவ் சர்மா முன் வைக்கவில்லை.

ராஜீவ் கொலையில் அன்னிய சதி பற்றி விசாரணை நடத்திய நீதிபதி ஜெயின், தமது அறிக்கையிலும் விடுதலைப் புலிகள் மொசாத் சி.அய்.ஏ. (அமெரிக்க உளவு நிறுவனம் ) இடையிலான தொடர்புகளை புலன் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளார். இப்படி ஒரு முடிவுக்கு நீதிபதி ஜெயின் வருவதற்கு காரணம் என்ன?

இஸ்ரேல் உளவு நிறுவனத்தில் அதிகாரியாகப் பணியாற்றி, அதிலிருந்து வெளியேறிய விக்டர் ஓஸ்ட்ரோஸ்கி (Victor Ostrovsky) மொசாத் ரகசிய செயல்பாடுகளைப் பற்றிய நூல் ஒன்றை எழுதியுள்ளார். நூலின் பெயர் By way of deception' என்பதாகும். அதில் "மொசாத் நிறுவனம், ஒரே நேரத்தில் சிங்கள ராணுவத்துக்கும் தமிழ் கொரில்லா குழுவுக்கும் பயிற்சிகளை அளித்தது" என்று எழுதியுள்ளார். அப்படி பயிற்சி பெற்றது விடுதலைப் புலிகள் தான் என்று வழக்கம் போலவே எல்லா பழிகளையும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது போட்டது போல், இந்தப் பழியையும் தூக்கிப் போட்டு விட்டார்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

உண்மையில் அந்த நூலில் இது தொடர்பாக இடம் பெற்றுள்ளது ஒரே ஒரு வாக்கியம் மட்டும் தான் :

Around 1983. a group of Tamil gurilla factions, collectively known as the Tamil Tigers, began an armed struggle to create a Tamil home land in the north called Elam – an on going battle that has claimed thousand of lives on both sides."

(1983 ஆம் ஆண்டுகளில் ஒட்டு மொத்தமாக விடுதலைப் புலிகள் என்று அழைக்கப்பட்ட தமிழ் கொரில்லாக்கள் குழு, இலங்கையின் வடக்குப் பகுதியில் 'ஈழம்' என்ற தமிழர்களுக்கான தேசத்தை உருவாக்கு வதற்காக ஆயுதம் தாங்கிய போராட் டத்தைத் தொடங்கினர். தொடர்ச்சியாக நடந்த அந்தப் போராட்டத்தினால் இரு தரப்பிலும் உயிர்ப் பலிகள் நேர்ந்தன )

– இந்த ஒரு வாக்கியத்தில் தமிழ்ப்புலிகள்' என்ற சொல் மேலோட்டமாகவே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நூலாசிரியர் குறிப்பிடும் அந்த 1984 ஆம் ஆண்டின் காலகட்டத்தில் ஈழ விடுதலைக்காகப் போராடப் புறப்பட்ட எல்.டி.டி.ஈ. மட்டுமல்ல, 'டெலோ ', 'ஈ.பி.ஆர்.எல்.எல்.', 'ஈரோஸ்', 'புளோட்' என்ற எல்லா அமைப்புகளுமே புலிகள் என்ற பெயரிலேயே அடையாளப் படுத்தப்பட்டன. இது எல்லோருக்குமே தெரியும். அதே காலகட்டத்தில் தமிழ்நாட்டிலும் பத்திரிகைகளானாலும், மக்களானாலும் எல்லா அமைப்புகளுமே 'புலிகள்' என்றே அழைக்கப்பட்டன. பல நேரங்களில் விடுதலைப் புலிகள் அல்லாத பிற குழுக்களின் முறைகேடான நடவடிக்கைகளும் புலிகளின் செயல்பாடுகளாகவே கூறப்பட்டதால், விடுதலைப் புலிகள் இயக்கமே, அவற்றையெல்லாம் மறுக்க வேண்டியிருந்தது. "தமிழ் மக்கள் இப்போட்டிக் குழுக்களை எவ்வகையிலும் வேறுபடுத்தி நோக்கவில்லை. அவர்கள் எல்லோரும் எமது பொடியன்கள்' என்றும், புலிகள்' என்றும் கூட அழைக்கப்பட்டனர்" – என்று யாழ் பல்கலை பேராசிரியர்கள் எழுதிய 'முறிந்த பனை' நூலும் (பக்.78) குறிப்பிடுகிறது. எனவே தமிழ்ப் புலிகள், இஸ்ரேல் உளவு நிறுவனத்திடம் பயிற்சிப் பெற்றதாக அந்த நூலில் மேலோட்டமாக எழுதப்பட்டதை – விடுதலைப் புலிகள் தான் என்று உறுதியாகக் கூற முடியாது. மாறாக விடுதலைப் புலிகள் இனவெறி இஸ்ரேலின் மொசாத்துக்கு எதிரான பாலஸ்தீன விடுதலை இயக்கத்திடம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பயிற்சி எடுத்தார்கள் என்று சர்வதேச புகழ்பெற்ற எக்னாமிஸ்ட்' ஏடு (22.3.1985) எழுதியது.

எல்லாவற்றுக்கும் மேலாக ஈழத்தில் நடந்த போராட்டத்தை ஆய்வு செய்து கட்டுரைகள் எழுதிய சிங்களரான ரோகன் குணரத்தினா சிங்கள ராணுவக் குழு இஸ்ரேல் சென்று பயிற்சி பெற்றது என்றும், இப்படிப் பயிற்சி பெற்ற குழுவுக்கு இஸ்ரேல் சூட்டியிருந்த ரகசிய பெயர் 'குரங்குகள்' என்றும் எழுதியுள்ளார். அதுமட்டுமல்ல, ரோகன் குணரத்னா, தனது நூலில் விக்டர் ஒஸ்ட்ரோவ்ஸ்கி' என்ற முன்னாள் மொசாத் அதிகாரி, தனது நூலில் விடுதலைப் புலிகளுக்கு இஸ்ரேலுடன் உறவு இருப்பதாக எழுதி, பரபரப்பை உருவாக்கி இருந்தாலும், உண்மை என்னவெனில், இஸ்ரேலுடன் விடுதலைப் புலிகளுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்பதே. Even though Victor Ostrovsky, a former Mossad agent sensationalized LTTE relatios with Israel, there was virtually no relationship இது சிங்கள ஆய்வாளரே தரும் தகவல். இஸ்ரேலிய உளவுப் பிரிவைச் சார்ந்த 50 பேர் இலங்கை ராணுவத்தினருக்குத்தான் ரகசியமாக பயிற்சி அளித்தனர்.

இது பற்றி கொழும்பு ஏடுகளில் செய்திகள் வந்தன. அப்போது அதிபர் ஜூலியஸ் ஜெயவர்த்தனே, அதை மறுக்கவில்லை. மாறாக, 'பயங்கரவாதிகளை ஒழிப்பதற்கு பேய்களின் உதவியைப் பெறவும் தயாராக இருக்கிறேன்" என்று கூறினார். இஸ்ரேல், வெளியுறவுத் துறை அமைச்சக அதிகாரி ஒருவர், "இலங்கை அரசு விரும்பினால், எங்கள் நாடு ராணுவப் பயிற்சி அளிக்கத் தயார்" என்று ஆசியன் மானிட்டர்' என்ற ஏட்டுக்கு பேட்டியும் அளித்தார். இந்த நிலையில், தமிழர் அய்க்கிய விடுதலை முன்னணி தலைவர் அமிர்தலிங்கம், தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார், பொன்னம்பலம் ஆகியோர் விடுத்த அறிக்கையில், இஸ்ரேல் ராணு வம் இலங்கை ராணுவத்துக்கு பயிற்சி தரும் செய்திகளுக்கு தங்களது அதிர்ச்சியையும் கண்டனத்தையும் தெரிவித்தனர்.

ராணுவப் பயிற்சி ஏற்கனவே தொடங்கி நடந்து கொண்டிருப்பதாகவும், வடக்கு, கிழக்கு தமிழர் பகுதிகளில் அவர்கள் ஊடுருவி நிற்பதாகவும், இது ஆபத்தான போக்கு என்றும், அவர்கள் எச்சரிக்கை செய்திருந்தனர். இவை யெல்லாம் 1984 ஆம் ஆண்டில் நடந்த நிகழ்வுகள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

2000 ஆம் ஆண்டில் ஏப்ரல் – மே மாதங்களில் இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த மோதலில் இலங்கை இராணுவம் கடும் பின்னடைவுகளை சந்தித்தது. அப்போது இராணுவத்தின் தோல்விகளை பத்திரிகைகள் வெளியிடாமல், மக்களிடமிருந்து மறைக்க இலங்கை அரசு, கடும் தணிக்கைகளை செய்து வந்தது. அப்போது 'அய்லேண்ட்' பத்திரிகை கடும் தணிக்கைக் கிடையிலும் ஒரு உண்மையை வெளிப்படுத்தியது. அதாவது, மொசாத் உளவுப்படையின் முன்னாள் அதிகாரி ஒரே நேரத்தில் புலிகளுக்கும் இலங்கை ராணுவத்துக்கும் இஸ்ரேல் பயிற்சி வழங்குவதாக எழுதியதைத் தொடர்ந்து, அந்த செய்தி உண்மைதானா என்பதை விசாரிக்க அதிபர் பிரேமதாசா, ராணுவ அதிகாரிகளைக் கொண்ட விசாரணை ஆணையம் ஒன்றை அமைத்து விசாரிக்க உத்தரவிட்டார். புலன் விசாரணை நடத்திய ராணுவ அதிகாரிகள், புலிகளுக்கு இஸ்ரேல் பயிற்சி எதுவும் தரவில்லை என்றும், மாறாக, பாலஸ்தீன விடுதலை இயக்கம் தான், விடுதலைப் புலிகளுக்கு பயிற்சி தந்திருக்கிறது என்றும், தங்கள் விசாரணையில் கண்டறிந்து கூறினர்.

(During the Premadasa regime an ex–officer of the Mossad telligence agency accused the Israelis of helping LTTE too and Premadasa appointed a Commission to investigate that allegation. The
in service commanders testified to say that it was the PLO which helped the LTTE and not the Israelis.) (Island, May 7, 2000)

ஆக

முன்னாள் 'மொசாத்' அதிகாரி எழுதிய நூலில் விடுதலைப் புலிகள் தான் பயிற்சிப் பெற்றனர் என்று திட்டவட்டமாகக் குறிப்பிடப்படவில்லை.

சிங்கள ஆய்வாளர்களே புலிகள், இஸ்ரேலிடம் பயிற்சிப் பெற்றதாக கூறுவது தவறு என்று எழுதிவிட்டனர்.

பிரேமதாசா நியமித்த ராணுவ அதிகாரிகள் விசாரணைக் குழுவும் இதை மறுத்து, புலிகள் பயிற்சிப் பெற்றது பாலஸ்தீன விடுதலை இயக்கத்திடம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

என்று கூறிவிட்டது.

இவ்வளவு உண்மைகளையும் மறைத்து விட்டு, விடுதலைப்புலிகள் இஸ்ரேல் உளவு நிறுவனத்திடம் பயிற்சிப் பெற்றவர்கள் என்று ராஜீவ் சர்மா, தமது நூலில் கூறுகிறார் என்றால், உளவு நிறுவனம் கட்டமைக்கும் புலிகளுக்கு எதிரான பிரச்சாரத்தில், தன்னையும் இணைத்துக் கொள்கிறார் என்பதைத் தவிர வேறு என்ன முடிவுக்கு வர முடியும்?
ராஜீவ் சர்மாவின் இந்த நூல் சிறையிலிருக்கும் தமிழர்கள் விடுதலைக்கு வலிமை சேர்ப்பதாக நூலை வெளியிட்ட சவுக்கு பதிப்பகம் முன்னுரையில் கூறுகிறது. ஆனால் இந்த நூல் உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டவர்களையே கூட குற்றவாளிகளாக சித்தரிக்கிறது. உதாரணமாக சிலவற்றை மட்டும் சுட்டிக்காட்டலாம்.

உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பத்மா பாக்கியநாதன் மற்றும் இறந்து போன அரிபாபு ஆகியோர் ராஜீவ் கொலைக்கு முதல் நாள் நடந்த சதி ஆலோசனையில் பங்கேற்றவர்கள் என்கிறது, இந்த நூல். இப்படி ஒரு சம்பவம் நடப்பது முன் கூட்டியே தெரிந்திருந்தால் அரிபாபு, சம்பவ இடத்திலேயே தன்னை பலி கொடுக்க காமிரா சாட்சியுடன் நின்றிருப்பாரா?
உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட ஆதிரையை கரும்புலி என்று எழுதுகிறது, இந்த நூல்.
தாணு இடுப்பில் கட்டி வெடிக்கச் செய்த 'பெல்ட்டை உருவாக்கியது யார் என்ற கேள்விக்கு விசாரணை தாக்கிய சிறப்புப் புலனாய்வுக் குழுவினராலேயே இறுதி வரை விடை கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறுகிறார் புலனாய்வுக் குழுவில் முக்கிய இடம் பெற்றிருந்த ரகோத்தமன் என்ற அதிகாரி. தற்போது சிறையில் அடைக்கப்பட்டு, நீதி கேட்டு போராடி வரும் பேரறிவாளன், ரகோத்தமன் வெளியிட்ட கருத்தின் அடிப்படையிலேயே தனக்கு நியாயம் கேட்கிறார். ' பெல்ட்பாம்' செய்தது யார் என்பதைக் கண்டுப் பிடிக்காத புலனாய்வுத் துறை அதற்கு பேட்டரி வாங்கச் செய்த குற்றத்தை தம் மீது சுமத்தி, தண்டனை பெற்றுத் தந்துள்ளதே. இது என்ன நியாயம்? இது என்ன நீதி? என்பதுதான் பேரறிவாளன் எழுப்பும் கேள்வி. ஆனால், புலனாய்வுத் துறையாலே கண்டுபிடிக்க முடியாத உண்மையை ராஜீவ் சர்மா கண்டுபிடித்து

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இந்த நூலில் எழுதியுள்ளது தான் வேடிக்கை. ஜெர்மன் நாட்டில் பிராங்க்பர்ட் நகரத்தில் வாழ்ந்த தம்பி ஜெயபாலன் என்பவர் தான், சென்னைக்கு வந்து வெடிகுண்டு பெல்ட்டை தயாரித்தார் என்கிறார் ராஜீவ் சர்மா — இதற்கு என்ன ஆதாரம்? இதுதான் சிறையில் வாழும் 7 தமிழர்களைக் காப்பாற்றக் கூடிய கருத்தா?

சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணையில் இருந்த கோடியக்கரை சண்முகம், மர்மமான முறையில் வேதாரண்யத்தில் தூக்கில் தொங்கினார். கடுமையான பாதுகாப்பு களுடன் விசாரணையில் இருந்த ஒருவர், எப்படி தூக்கில் தொங்க முடியும்? சிறப்புப் புலனாய்வுக் குழு அதிகாரிகள் அது தற்கொலை தான் என்று கூறி, சண்முகத்தின் வழக்கை முடித்து விட்டனர். சண்முகத்தின் மனைவி பவானியம்மாள், தன்னுடைய கணவரை சி.பி.அய். தான் விசாரணையில் சாகடித்து விட்டது என்று குடியரசுத் தலைவருக்கும், பிரதமருக்கும் தந்தி அ னுப்பினார். ஆனால் எந்த ஆதாரமோ, சூழ்நிலைச் சான்றுகளோ இல்லாமல் விடுதலைப் புலிகள் மீது கொலைப் பழிகளை சுமத்தும் ராஜீவ் சர்மா, சண்முகத்தின் மரணத்தில் சி.பி.அய்.யை காப்பாற்றவே விரும்புகிறார். சண்முகத்தின் மாமாவான சீதாராமன் 'புலிகளை காட்டிக் கொடுத்து துரோகியாகி விட்டாய்' என்று ஆத்திரத்தில் அவரது உறவினர்களோடு சேர்ந்து சண்முகத்தைக் கொன்று விட்டதாக எழுதுகிறார்.

ராஜீவ் சர்மா, ஏன் வலிந்து சென்று, சி.பி.அய். அதிகாரிகளைக் காப்பாற்ற துடிக்கிறார்? உத்தம புத்திரர்களாக சித்தரிக்க விரும்புகிறார்; ஆதாரம் ஏதுமற்ற தகவல்களை சி.பி. அய். விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் ஏன் எழுத வேண்டும்?

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## இனப்படுகொலைக்கு வழிகாட்டிய 'இந்திய அமைதிப்படை'

"ஒரு முறை இந்தியப் படை, தளம் 14—ஐ முற்றுகையிட்டு பிரபாகரனை சுற்றி வளைத்தது. அப்பொழுது அவருடைய மெய்க்காப்பாளர்கள் பிரபாகரனுக்கும் இந்திய அமைதிப் படைக்கும் இடையே வலிமையான ஒரு சுவரைப் போல நின்றார்கள். இறுதியில் அந்த முகாமை இந்தியத் துருப்புகள் கைப்பற்றின. ஆனால் தளம் 14—ன் 17 மெய்க்காப்பாளர்கள் தங்கள் உயிரைத் துறந்து, பிரபாகரன் வன்னிக் காட்டிற்குள் தப்பிச் செல்ல போதுமான நேரத்தை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அதுவே இந்திய அமைதிப்படை முதலும் கடைசியுமாக தளம் 14—ஐ கைப்பற்றிய சம்பவமாகும்.

பிரபாகரனை ஒரு மாபெரும் வாழும் சகாப்தமாக உருவாக்கிய அவரின் சுயநலம், இரக்கமின்மை , ராணுவ செயல் திட்டங்கள், மற்றும் புத்திசாலித்தனமான காய்நகர்த்தல்கள் போன்றவை இந்தி ய அமைதிப் படைக்கு நிகழ்ந்த சோக முடிவில் தெளிவாக வெளிப்பட்டன " என்று "இந்திய அமைதிப் படை" பற்றி எழுதுகிறார் ராஜிவ் சர்மா!

- பிரபாகரன் சுயநலம்
- இரக்கமற்ற குணம்
- ராணுவ செயல் திட்டங்கள்

இவைகளால் இந்திய அமைதிப்படை மோசமான முடிவை சந்தித்து விட்டதாக, நூலாசிரியர் மிகவும் கவலைப்பட்டு, தனது தேசபக்தியை வெளிப்படுத்தியிருக்கிறார். தளம் 14—அய் இந்தியப் படை சுற்றி வளைத்த நிலையில் பிரபாகரன் தப்பி விட்டாரே என்ற கவலையின் ஆதங்கம், அவரது எழுத்தில் பளிச்சென வெளிப்படுகிறது.

'இந்திய அமைதிப்படை' ஈழத்தில் நடத்திய அத்துமீறல்கள், பாலியல் வன்முறைகள், மக்கள் மீது திணித்த படுகொலைகள் சர்வதேச அரங்கில் ஏராளமான ஆதாரங்களுடன் அம்பலமானது பற்றி எல்லாம் நூலாசிரியருக்கு கவலை இல்லை . ஏதோ, ஈழத் தமிழர்களின் 'பாதுகாவலர்களாக' முகமூடி தரித்துக் கொண்டு, இலங்கைக்குப் போய் வடக்கு — கிழக்கு மாநிலத்தை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து தனக்கு 'தலையாட்டக் கூடிய' ஒரு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பொம்மை ஆட்சியை துப்பாக்கி முனையில் நடத்திய தேர்தல் வழியாகத் திணித்து, தனது அதிகாரத்துக்குக் கட்டுப்பட மறுத்து, மக்கள் விடுதலையை மட்டுமே முன்னிறுத்திய விடுதலைப் புலிகள் இயக்கத்தை கூண்டோடு ஒழிக்க சபதமேற்று செயல்பட்டது தான் இந்திய ராணுவம்! இது அமைதிப்படை அல்ல; கொலைக்காரப்படை

இப்போது ஈழத் தமிழர்கள் மீது இழைத்த போர்க் குற்றங்கள் இனப்படுகொலைகளுக்காக உலக அரங்கில் கண்டனத்துக்கு உள்ளாகி வரும் இலங்கை அரசுக்கு இந்த "பாடங்களை நடைமுறையாக கற்றுத் தந்ததே, இந்திய "அமைதிப்படை" தான் என்று நம்மால் உறுதியாகச் சொல்ல முடியும். ராஜபக்சேயின் 'முள்ளி வாய்க்கால் இனப்படு கொலைகளுக்கு முன்னோடி வழிகாட்டி இந்திய அரசும் அதன் "அமைதிப்படையும் தான் !

இந்திய அமைதிப்படை" ஈழத்தில் நடத்திய வெறியாட்டங்களை எழுதப் போனால் அது பல்லாயிரக்கணக்கான பக்கங்களுக்கு நீண்டு கொண்டே போகும். அவற்றை இந்தப் பகுதியில் விரித்து எழுத இயலாது. ஆனாலும், இன்று ராஜபக்சே, நடத்திய இனப் படுகொலைகளுக்கு முன்னோடி' இந்திய ராணுவம் தான் என்பதை ஒப்பிட்டுக் காட்டுவதற்காக சில நிகழ்வுகளை மட்டும் முன்வைக்கிறோம்.

- 'சாட்சிகளற்ற இனப் படுகொலைகளை' நடத்தியது சிறீலங்கா அரசு. அதற்காக முதலில் ஆட்சிக்கு எதிராக எழுதிய ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். போர் நடக்கும் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இதைத் தான் இந்திய ராணுவமும் ஈழத்தில் நடத்தியது.

1987 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் நாள் அதிகாலை பாம்ப்பாணம் நகரத்துக்குள் நுழைந்த இந்திய ராணுவம், தமிழர்களின் குரலாக ஒலித்து வந்த 'ஈழ முரசு', 'முரசொலி' என்ற இரண்டு நாளேட்டின் அலுவலகர்களை துப்பாக்கி முனையில் கைது செய்தது, அது மட்டுமல்ல அச்சு எந்திரத்தையும், அலுவலகத்தையும் வெடி வைத்து தகர்த்தனர். அதே நாளில் கொக்குவில் என்ற இடத்திலிருந்த விடுதலைப் பலிகள் தொலைக்காட்சி சேவையான நிதர்சனம் தொலைக்காட்சி நிலையத்தில் இந்திய ராணுவம் புகுந்து, ஒளிபரப்புக் கருவிகளை பறித்துச் சென்று விட்டது ஈழ முரசு', முரசொலி'

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நாளேடுகள் இலங்கை அரசு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தமிழ் நாளேடுகள்; நிதர்சனம் தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சிகளை இந்தியாவின் 'தூர்தர்ஷன்' அதிகாரிகள் கேட்டுப் பெற்று ஒளி பரப்பிய சம்பவங்களும் உண்டு. முதலில் மக்களுக்கு செய்திகளை அறிவிக்கும் ஊடகங்களை முற்றாக நசுக்கிய பிறகு, இந்திய ராணுவம் மக்களுக்கு எதிரான ராணுவ வேட்டையில் இறங்கியது. இதைத்தான் ராஜபக்சேவும், இறுதி கட்டப் போரில் செய்தார்.

மருத்துவமனைகளை ராஜபக்சேயின் ராணுவம் குண்டு வீசித் தாக்கி, பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு அடிப்படை மருத்துவ வசதிகளையும் மறுத்த ரத்தக் கண்ணீர் வரவழைக்கும் அதிர்ச்சித் தகவல்களை இப்போது அய்.நா. பொதுச்செயலாளர் பான்கி மூன் நியமித்த குழுவின் அறிக்கை கூறுகிறது. அதைத் தான் இந்திய ராணுவமும் செய்தது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற பல்வேறு ராணுவ நடவடிக்கைகளில் இறங்கிய இந்திய ராணுவம் 1987 அக்டோபர் 21 அன்று யாழ்ப்பாணம் மருத்துவமனையைக் குறி வைத்தது. இதுபற்றி 'நியூ சேட்டர் டே ரெவியூ ' என்ற கொழும்பு ஏடு வெளியிட்ட விரிவான செய்தி இது. (1987, நவம்பர் 7)

அக் 21 ஆம் தேதி மாலை 4 மணியளவில் யாழ்ப்பாண மருத்துவமனையை இந்திய ராணுவம் கைப்பற்றியது. அன்று தீபாவளி நாள். ராணுவத்தினர் உடனடியாக 50 நோயாளிகளை சுட்டுக் கொன்றனர். அவரது உடல்கள் அங்கேயே ஏரிக்கப்பட்டு மருத்துவமனை வளாகத்துக்குள்ளேயே தரையில் வீசப்பட்டன. அடுத்த இரண்டு நாளில் அக்.23 ஆம் தேதி 83 நோயாளிகள் ஊழியர்கள் கொல்லப்பட்டு, அவர்களின் உடல்கள் எரிக்கப்பட்டன. இதற்கான உத்தரவுகளை பிறப்பித்தார் இந்திய ராணுவ அதிகாரி பிரிகேடியர் பிரார். எல்லா நடவடிக்கைகளையும் யாழப்பாண கோட்டை தலைமை ராணுவ முகாமிலிருந்து கண்காணித்தவர் கேப்டன் பிஸ்ட். அவருக்கு (இந்தப் படுகொலைகளில்) உதவியாக செயல்பட்டவர்கள் டாக்டர் கனகராஜா, டாக்டர் பன்சாரி. இவர்களும் இந்திய " அமைதிப்படை' அதிகாரிகள் தான். கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட இந்த உடல்களுக்கு பிரேத பரிசோதனைகள் செய்யப்படவில்லை; விசாரணைகளும் நடத்தப்படவில்லை.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இறந்தவர்களில் 20 பேர் மருத்துவமனை நிர்வாகம் மற்றும் எக்ஸ்ரே பிரிவில் பணியாற்றிய ஊழியர்கள். மருத்துவமனையில் நோயாளிகளாக சிகிச்சைப் பெற்றவர்கள், அவர்களை பார்க்க வந்த உறவினர்கள் உட்பட 30 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 12 பேர் உடல் அழுகிய நிலையில் சவக்கிடங்கில் கிடந்தது. 12 பேர் உடல், அடையாளங்களை காண முடியில்லை. மருத்துவமனை ஊழியர்கள் 20 பேரின் சடலங்கள் ஏனைய ஊழியர்களால் அடையாளம் காணப்பட்டன. 11 போ உடல்கள், அவர்களின் அடையாள அட்டைகளை வைத்து அடையாளம் காணப்பட்டன. மருத்துவமனையில் மின்சாரத்தை ராணுவத்தினர் துண்டித்ததால், மூச்சு சுவாசத்துக்கா 'வெண்டிலேட்டர்' பொருத்தப்பட்ட நோயாளிகளும் தீவிர மருத்துவ கண்காணிப்புப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த ஒரு குழந்தை உட்பட 3 நோயாளிகளும் இறந்தனர் . யாழப்பான மருத்துவமனை முற்றிலும் நாசமடைந்தது. மின்சாரமோ தண்ணீரோ இல்லை. சவக்கிடங்கு நிரம்பி வழிந்தது. ஒரு வயதிலிருந்து 85 வயது வரையுள்ள 85 சடலங்கள் 3 நாட்களில் குவிந்து கிடந்தன. நர்சு'களின் குடியிருப்புகள் ஷெல் வீச்சுக்கு உள்ளாயின. நெல்லிப்பாளையில் செயல்பட்டுக் கொண்டிருந்த அரசு மருத்துவமனையும் மூடப்பட்டது. மணிப்பாய் என்ற இடத்தில் இருந்த 'கிரீன் மெமோரியன்' என்ற தனியார் மருத்துவமனையையும், ராணுவம் மிரட்டி மூடச் சொல்லி விட்டது" அன்று செய்தி வெளியிட்ட அந்த ஏடு, இறந்தவர்களின் நீண்ட பெயர்ப் பட்டியலையும் வெளியிட்டது. எந்த ஒரு யுத்தத்திலும் மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்துவதை 'போர்க் குற்றம்' என்று சர்வதேச சட்டங்கள் கூறுகின்றன. மருத்துவமனையில் — ஷெல் வீசியது மட்டுமல்ல; எவரும் சிகிச்சை பெறவும் கூடாது என்று செயல்பட்ட வேறு மருத்துவமனைகளையும் மிரட்டி மூடி விட்டார்கள். காந்தி தேசமான இந்தியாவிலிருந்து ராஜீவ் காந்தியால் அனுப்பி வைக்கப்பட்ட 'அமைதிப்படை' இந்தப் போர்க் குற்றங்களைத் தான் செய்தது.

சர்வதேச உதவி அமைப்புகளை போர்ப் பகுதியிலிருந்து ராஜபக்சே வெளியேற்றியது கூட இந்தியா காட்டிய வழியில் தான் ! இந்திய ராணுவம் சர்வதேச மனித உரிமை அமைப்புகளான ஆம்னஸ்டி இன்டர்நேஷனல், சர்வதேச செஞ்சிலுவை சங்கம், சர்வதேச சட்டவியலாளர்கள் குழு போன்ற

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அமைப்புகள் தமிழ் ஈழப் பகுதிக்குள் நுழைவதற்கு 'இந்திய அமைதிப் படை' அனுமதி மறுத்தது. ஆஸ்திரேலியா உட்பட பல்வேறு நாடுகள், இதைக் கண்டித்தன. ராணுவத் தாக்குதல் நடக்கும் போது மக்களுக்கு அடிப்படைத் தேவைகளான உணவு, தண்ணீர், மின்சாரம் போன்றவை கிடைக்காமல் செய்துவிட வேண்டும் என்ற 'போர்க் குற்றத்தை' இலங்கை ராணுவத்துக்கு கற்றுக் கொடுத்ததும் இந்திய ராணுவம்தான்.

"வடக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு, உணவு, மருந்து, பற்றாக்குறை கடுமையாகிவிட்டது. கடைகளில் உணவுப் பொருட்கள் விற்பனைக்கு கிடைக்காமல் போய்விட்டது. செஞ்சிலுவை சங்கம் உடனே தலையிட்டு தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும்; தமிழ் மக்கள் மீது இந்திய ராணுவம் ஷெல் வீசிக் கொல்வதை உடன் நிறுத்த வேண்டும்" என்று தொலைபேசி வழியாக அவசர வேண்டுகோள் விடுத்தார் வடக்கு மாவட்ட ஆட்சித்தலைவர். (தி ஏஜ்ஏடு 16.10.87)

மனித உரிமை மீறல்கள் போர்க் குற்றங்கள் என்றெல்லாம் அய்.நா. குற்றச்சாட்டுகளைக் கூறினாலும் அது பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்ற அணுகு முறையை இலங்கைக்கு கற்றுக் கொடுத்ததும் இந்தியாதான்! இந்திய ராணுவம் நடத்திய மனித உரிமை மீறல்கள் பற்றி அய்.நா.வில் மனித உரிமை குழுவில் கடும் புகார்கள் தெரிவிக்கப்பட்டன. 1987, பிப் மதல் மார்ச் 11 வரை ஜெனிவாவில் நடந்த அய்.நா.வின் மனித உரிமைக் குழுவில் பேசிய பல பிரதிநிதிகள் இந்திய ராணுவத்தின் மனித உரிமை மீறல்களை சுட்டிக்காட்டிக் கண்டித்தனர். அந்தக் கண்டனங்களை 'தமிழ் இன்டர் நேஷனல்' விரிவாகப் பதிவு செய்தது; அதுபற்றி கிஞ்சித்தும் கவலைப்படவில்லை இந்திய அமைதிப்படை

விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவு பொறுப்பாளர் நடேசன், காவல் துறை பொறுப்பாளர் இளங்கோ, சமாதானப் பிரிவு பொறுப்பாளர் புலித்தேவன், மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களுடன் வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்தபோது சிங்கள ராணுவம் சர்வதேச நெறிமுறைகளுக்கு மாறாக சுட்டுக்கொன்றது நமக்குத் தெரியும். "வெள்ளைக் கொடியுடன் வந்தாலும் கவலைப்படாதே; சுட்டுத் தள்ளலாம்" என்று இலங்கை ராணுவத்துக்கு வழிகாட்டியதும் இந்திய அமைதிப் படைதான். வெள்ளைக்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கொடிகளை ரத்தச் சிவப்பாக்கிய பலப்படுகொலைகளை இந்திய ராணுவம் செய்தது. உதாரணமாக 9.11.1987 அன்று சண்டிலிப்பாய் எனுமிடத்தில் இந்திய ராணுவம் நடத்திய ஷெல் தாக்குதலில் காயமடைந்த நான்கு பொது மக்களை காரில் யாழ்ப்பாண மருத்துவமனைக்கு அவசர சிகிச்சைக்காகக் கொண்டு சென்றனர். காரில் வெள்ளைக் கொடி கட்டப்பட்டிருந்தது. ஆனாலும் இந்திய ராணுவம் நாவலாய் என்ற இடத்தில் காரை நோக்கி சுட்டது. காரில் பாதிக்கப்பட்டவர்களை அழைத்து வந்த இரண்டு பேர் கொல்லப்பட்டனர். நான்கு பேர் காயமடைந்தனர் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன், அய்.நா. பொதுச் செயலாளருக்கு 1987 நவம்பரில் எழுதிய கடிதத்தில் இந்த சம்பவத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

அதே போல் போர் நிறுத்தம் அமுலில் இருந்த போது இந்திய அமைதிப்படையின் தளபதியாக இருந்த ஹர்கிரத் திங்கை விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் நேரில் சந்தித்துப் பேசி வந்தார். அப்படி 'வெள்ளைக் கொடி'யுடன் பிரபாகரன் பேசவரும்போது அவரை சுட்டுக் கொன்று விடுமாறு இலங்கைக்கான இந்தியத் தூதராக இருந்த சூட்சத் என்பவர் ஹர்கிரந்த் சிங்கிடம் கூற, அதற்கு அந்த நேர்மையான அதிகாரி மறுத்து விட்டார். இது டெல்லியிலிருந்து மேலிடத்திலிருந்து வந்த உத்தரவு என்று தீட்சத் கூறினார். அப்போதும் அந்த நேர்மையான அதிகாரி மறுத்து விட்டார். இதை ஹர்சிரத் சிங் அவர்களே பணி ஓய்வு பெற்ற பிறகு தான் எழுதிய நூலிலும் இணையதளம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலும் கூறியுள்ளார்.

கேள்வி : விடுதலைப் புலிகளுடன் அமைதியை ஏற்படுத்துவதற்கு நீங்கள் மேற்கொண்ட முயற்சியில், தீட்சித் அணுகுமுறை எப்படி இருந்தது?

பதில் : தீட்சித் ஒரு முறை என்னிடம், பிரபாகரனை சுட்டுவிடு என்றார். மன்னிக்கவும், என்னால் முடியாது என்று நான் கூறி விட்டேன். இது அவரது உத்தரவாகவே இருந்தது. சில பணிகளுக்காக, என்னை சந்திக்க 12 மணிக்குக்கூட, பிரபாகரன் வந்தார். அதைப் பயன்படுத்தி, சுட்டுவிடுமாறு சொன்னார். தனக்கு, மேலிடத்திலிருந்து கிடைத்த உத்தரவைத்தான் கூறுகிறேன் என்றார். 'உங்களுடைய உத்தரவை நான் செயல்படுத்த முடியாது. நாங்கள் வெள்ளைக் கொடியின் கீழ் சந்தித்துப் பேசுகிறோம்; வெள்ளைக்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கொடியின் கீழ் பேசும்போது, யாரையும் சுட முடியாது' என்று பதில் சொன்னேன்.

Question : What was Dixit's approach to your attempts to buy peace with LTTE.

Harkirat Singh : Once he (Dixit) said, shoot Prabaharan. I said, Sorry i don't do that. When he came to meet me at 120 Clock at night for some work, he said "shoot him. General, I have told you what I have (been) ordered". I said, I don't take your orders. And we are meeting under a white flag, you don't shoot people under white flag" (Rediff.com).

'போரில்லாத பகுதி' என்று அறிவிக்கப்பட்ட பகுதியிலும் சுடலாம். 'போர் நிறுத்தம்' செய்யப்பட்ட காலத்திலும் மக்களை சுடலாம் என்று இலங்கை ராணுவத்துக்கு வழிகாட்டியதும் இந்திய ராணுவம் தான்.

• 21.11.1987 அன்று இந்திய ராணுவம் 48 மணி நேர போர் நிறுத்தத்தை அறிவித்தது. அந்த 48 மணி நேரத்தில் திரிகோண மலையில் 7 அப்பாவித் தமிழர்களை இந்திய ராணுவம் சுட்டது. இதில் இரண்டு பேர் பிணமானார்கள்.

ராஜபக்சே – ராணுவத்தைப் போலவே ராஜீவ் அனுப்பி வைத்த அமைதிப் படையும்' விடுதலைப் புலிகள் தலைவர், உலகத் தமிழினத்தின் தலைவர் பிரபாகரனுக்குத் தான் குறி வைத்தது. விடுதலைப் புலிகளின் படைப் பிரிவான 14 ஆம் தளத்தில் ராஜீவ் காந்தியின் படை பிரபாகரனை சுற்றி வளைத்த போது அவர் தனது மெய்க்காப்பாளர்களால் காப்பாற்றப் பட்டுவிட்டார் என்று ராஜிவ் சர்மா எழுதுகிறார். ராஜீவ் காந்தியும் பிரபாகரன் தலைக்குக் குறி வைத்தார். பிரபாகரன் தலையைக் கொண்டு வராதவரை, தான் அனுப்பி வைத்த படையின் தாக்குதல் நிற்காது என்று சபதம் போட்டார். தன்னுடைய இந்த 'கொலை வெறி'யை வெளிப்படையாகக் கூறவும், ராஜீவ் காந்தி தயங்கிடவில்லை . தி.மு.க.வின் மாநிலங்களவைக் குழுத் தலைவர் முரசொலி மாறனிடம் ராஜீவ் காந்தி, இதை நேரில் தெரிவித்தார். இந்த செய்தியை பல ஏடுகள் பதிவு செய்துள்ளன. ஜார்ஜ் பெர்னான்டஸ் வெளியிட்ட 'தி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அதர்ஸைடு ' ஆங்கில மாத இதழ் இது பற்றி வெளியிட்ட செய்தி:

"And that Prime Joker who is the Prime Minister had temerity to tell the D.M.K. Member of Parliament, Murasoli Maran, that the Srilankan operation will go on till he has the head of the LTTE Chief Prabakaran."

"Maran was shocked at the way the Prime Minister ticulated and pointed to the floor at his feet where he wanted to see the severed head of Prabakaran."

"தலைமை 'காமடியனான ' நமது தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தி ) தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினரான முரசொலி மாறனிடம், என்னிடம், பிரபாகரன் தலை கொண்டுவரப்படும் வரை ராணுவத்தின் இலங்கை தாக்குதல் தொடரும் என்று திமிருடன் கூறினார்."

"ராஜீவ் காந்தி இதை வெளிப்படுத்திய முறை முரசொலி மாறனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. தரையை நோக்கி தனது காலைக் காட்டி, இதில், பிரபாகரன் தலையைக் கொண்டு வருவதே எனது விருப்பம் என்று ராஜீவ் கூறினார்." ("The Other Side" – மாத ஏடு, ஏப் 1988)

இனப் படுகொலை – போர்க் குற்றங்களை நடத்திய ராஜபக்சே, போரை நிறுத்த வேண்டும் என்று எத்தனையோ கோரிக்கைகள் வந்தும் கேட்கவில்லை. போரைத் தொடர்ந்தார். போரை நிறுத்த வேண்டாம் என்று சோனியாவின் ஆலோசனைக் குழு அறிவுறுத்தி போரை நடத்தவே உதவியது. இது எல்லோருக்கும் தெரியும். இதுவும் கூட ராஜீவ் காந்தியின் 'அமைதிப் படை' கற்றுத்தந்த பாடம் தான்.

விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைப் பறிப்பதாகக் கூறி, பொது மக்கள் மீது ஷெல்களை விமானங்கள் மூலம் குண்டுகளை ராஜீவ் காந்தி யின் அமைதிப்படை வீசியபோது, " வேண்டாம்; போரை நிறுத்துங்கள்; பொதுமக்களைக் கொல்லாதீர்கள்" என்று பல வேண்டுகோள்கள் முன் வைக்கப்பட்டன. அத்தனை வேண்டு கோள்களையும் ராஜீவ்காந்தி புறந்தள்ளினார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளின் தலைவர் பிரபாகரன் பிரதமர் ராஜீவுக்கு — போரை நிறுத்துமாறு வேண்டுகோ விடுத்து 1987 அக் 14ம் தேதி ஒரு கடிதம் எழுதினார். " இந்திய ராணுவத்தின் கண்மூடித்தனமான ஷெல் வீச்சு, விழா குண்டு வீச்சு காரணமாக, யாழ்ப்பாணத்தில் இதுவரை 150 அப்பாவி மக்கள் பலியாகி விட்டனர். 500 . படுகாயமடைந்துள்ளனர். சர்வதேச ஊடகவியலாளர், மனித உரிமை அமைப்புகளை யாழ்ப்பாணத்துக்குள் அனுப்புங்கள், நிலைமை மிக மோசமாகி வருகிறது 'ஜனநாயக நாடு' என்று கூறிக் கொள்ளும் இந்தியா தனது முடிவுகளை எங்கள் மீது துப்பாக்கி முனையில் திணிப்பது நியாயமல்ல. இந்த ஒப்பந்தத்தில் எங்களுக்கு முழுமையான உடன்பாடு இல்லை என்றாலும்கூட ஏற்றுக் கொண்டோம். நாங்கள், பேச்சு வார்த்தைக்கு தயாராகவே இருக்கிறோம். உடனடியாக ராணுவத் தாக்குதலை நிறுத்துங்கள்" என்று, உருக்கமான வேண்டுகோளை பிரபாகரன் விடுத்திருந்தார்; ராஜீவ் புறக்கணித்தார்.

தமிழ்நாட்டில் போர் நிறுத்தம் கோரி அனைத்துக் கட்சி ஆர்ப்பாட்டங்கள், கடை அடைப்புகள் நடந்தன. ராஜீவ் கவலைப்படவில்லை.

பொது நிலையில் இருந்த கிறிஸ்தவ பாதிரியார்கள், சர்வதேச மனித உரிமை அமைப்புகள் போரை நிறுத்த ராஜீவ் காந்திக்கு வேண்டுகோள் விடுத்தார்கள்; ராஜீவ் காந்தி நிராகரித்தார்.

பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குவது, உலகம் முழுதும் ஆக்கிரமிப்பு, ராணுவத்தினர் செயல்பாடுகளாகவே உள்ளன. இலங்கை ராணுவமும் அதை செய்தது; ராஜீவ் காந்தியின் 'அமைதிப் படையும் அதை செய்தது.

1988 ஜூலை வரை ராஜீவ் காந்தி ராணுவத்தால் கொல்லப்பட்ட அப்பாவி பொது மக்கள் — 5700.

பாலியல் வன்கொடுமைக்கு உள்ளடாக்கப்பட்ட பெண்கள் — 780.(ஆதாரம் : தமிழ் வாய்ஸ் இன்டர் நேஷனல், ஜூலை 1988)

ராஜபக்சே ராணுவம், ரசாயனக் குண்டுகளை வீசி, மக்களைக் கொலை செய்தது அல்லவா? இதற்கு வழிகாட்டியதும் ராஜீவ் காந்தியின் அமைதிப்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

படை தான்! முல்லைத் தீவு மாவட்டத்தில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளான அலப்பில், நாயாறு, செம்மலை குமுலமுனை பகுதிகளில் சர்வதேச அளவில் தடை செய்யப்பட்ட 250 கிலோ 'நாபாம்' குண்டுகளை இந்திய அமைதிப் படை வீசியது. (ஆதாரம்: தமிழ் வாய்ஸ் இன்டர் நேஷனல், ஜூலை 1988)

— சாட்சிகளற்ற போர்

— சர்வதேச தொண்டு நிறுவனங்கள், மனித உரிமை அமைப்புகள் வெளியேற்றம்.

— மருத்துவமனைகள் மீது குண்டு வீச்சு

— நேபாம் — குண்டு வீச்சு

— ஊடகங்கள் மீது தாக்குதல்

— போர் நிறுத்தப் பகுதிகளில் குண்டு வீச்சு

— அப்பாவி மக்கள் மீது குண்டு வீச்சு

— பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குதல்

— உலகத் தமிழினத் தலைவர் பிரபாகரனை தீர்த்துக் கட்டும் முயற்சி

— என்ற அத்தனை போர்க்குற்றங்கள் இனப்படு கொலைக்கு வழிகாட்டியதே ராஜீவ் காந்தியின் அமைதிப் படைதான். இத்தகைய கொலைப் படை தோல்வி அடைந்து விட்டது; அவமானத்துக்குள்ளாகிவிட்டது என்று ராஜீவ் சர்மா கூறுவதும், தமிழ் ஈழத் தேசியத் தலைவர் பிரபாகரனை இரக்கமற்றவர்', 'சுயநலவாதி' என்று குற்றம் சாட்டுவதும், நேர்மையான விமர்சனமாக இருக்க முடியுமா? நேர்மையும், கட்டுப்பாடும், கொள்கை உறுதியும் கொண்ட தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதும், உலகத்தின் கவனத்தையே ஈர்த்த மாவீரர் பிரபாகரன் பற்றி தனிப்பட்ட முறையில் பல்வேறு அவதூறுகளை, ராஜீவ் சர்மாவின் நூல் அள்ளி வீசுகிறது. அவற்றுக்கெல்லாம் நாம் பதிலளிக்க வேண்டிய தேவை இல்லை.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பிரபாகரனை சந்திக்க விரும்புவோர் கண்களைக் கட்டியே தான் அழைத்துச் செல்வார்கள் என்றும், பிரபாகரன் தனது துணைவியாரை கட்டாயப்படுத்தி கடத்தி செய்து கொண்டார் என்றும், விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு உலகத் தமிழர்களிடம் கட்டாயப்படுத்தி மிரட்டி, நிதி திரட்டப்படுகிறது என்றும்; பாம்பின் விஷத்தை உடலில் கொஞ்சம் கொஞ்சமாக ஏற்றப்பட்டு, விஷம் பொருந்திய பாம்புகளையே கொல்லக் கூடிய விஷப் பெண்களைப் போன்றவர்களே பெண் கரும்புலிகள் என்றும் ராஜிவ் சர்மா கீழ்த்தரமான குற்றச்சாட்டுகளை அடுக்குகிறார்.

ராஜீவ் காந்தியை கொலை செய்தது விடுதலைப் புலிகள் தான் என்று ராஜிவ் சர்மா உறுதியான முடிவுக்கு வந்து விடுகிறார். ஆனால், சர்வதேச சக்திகளின்' 'கூலிப்படையாக செயல்பட்டார்கள் என்று இழித்துரைக்கிறார். இராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணையே நேர்மையாக இல்லாதபோது அந்த விசாரணையின் தீர்ப்பை எப்படி ஏற்க முடியும் என்ற கேள்விக்கு ராஜீவ் சர்மாவிடம் பதில் இல்லை.

ராஜீவ் கொலை தொடர்பாக டில்லியில் பல ரகசிய கோப்புகள் காணாமல் போயின. அந்தக் கோப்புகள் ஏன் மறைந்தன? என்ற கேள்விக்கு விடை இல்லை.

காணாமல் போன கோப்புகள் பிரதமர் நரசிம்மராவ் ஆட்சியில் பல முக்கிய அரசாங்க கோப்புகள் காணாமல் போய்விட்டன; அந்தக் கோப்புகள் விவரம்:

1. கோப்பு எண்.8–1–WR/UJ/9ONo.||| நவம்பர் 89 லிருந்து – ராஜுவ் காந்தியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி அதிகாரிகள் எழுதிய குறிப்புகளைக் கொண்ட கோப்பு: பிரதமர் அலுவலகத்திலிருந்து 1991 ஆம் ஆண்டில் இது காணாமல் போய்விட்டது. பிறகு இந்தக் கோப்பை சரிப்படுத்தி ஒட்டு வெட்டுவேலைகளைச் செய்து ஜெயின் கமிஷன் முன் நரசிம்மராவ் ஆட்சி சமர்ப்பித்தது. இப்படி கோப்புகளைத் திருத்தி அமைப்பது சட்டவிரோதமான நடவடிக்கையாகும் )
2. தோப்பு எண். 1/12014/5/911 – A.S./D111 நீதிபதி வர்மா மற்றும் நீதிபதி ஜெயின் கமிஷன்களின் விசாரணை வரம்புகள் பற்றிய

Tamileelam Archive

இந்தக் கோப்பு, 1995 முதல் காணவில்லை .

3. சந்திராசாமி மற்றும் ஜனதா கட்சித் தலைவர் சுப்ரமணியசாமி ஆகியோருடன் வெளிநாட்டு உளவு நிறுவனங்கள் தொடர்பு கொண்டு பேசிய போது இடை மறித்துக் கேட்கப்பட்ட தகவல்களைக் கொண்ட இந்தக் கோப்பை, பிரதமர் அலுவலக மூத்த அதிகாரிகளே அழித்து விட்டனர்.
4. 1987இல் ராஜீவ் காந்தியைக் கவிழ்க்க — அன்றைய குடியரசுத் தலைவர் ஜெயில் சிங் — சந்திராசாமி ஆகியோர் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி இந்திய உளவு நிறுவனம் (அய்.பி) கண்டறிந்த உண்மைகளும், பரிந்துரைகளும் அடங்கிய இந்த கோப்பு காணவில்லை.
5. ராஜீவ் கொலை பற்றி உளவு நிறுவனங்கள் உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவானிடம் தெரிவித்த கருத்துக்கள், இதுதொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் அடங்கிய கோப்பு காணப்படவில்லை.
6. ராஜீவை சென்னையில் கொலை செய்யலாமா? அல்லது டில்லியில் கொலை செய்யலாமா? என்ற கேள்விகளோடு, 1991 ஏப்ரல் 20 ஆம் தேதி பரிமாறிக் கொள்ளப்பட்ட ஒரு ஒயர்லெஸ் தகவலை உளவுத் துறை இடைமறித்துப் பதிவு செய்தது. இந்த விவரங்கள் அடங்கிய கோப்பு காணவில்லை.
7. நரசிம்மராவ் அரசாங்கமே — ஜெயின் கமிஷன் விசாரணையை நிறுத்திவிடுவதற்கான முயற்சிகளில் இறங்கியது. இது பற்றிய விவரங்களடங்கிய கோப்பும் காணவில்லை .

இந்தக் கோப்புகள் அனைத்தும் மிக முக்கிய தகவல்களைக் கொண்டவைகளாக இருந்தாலும், ஜெயின் கமிஷன் முன் நரசிம்மராவ் அரசு, இவைகளை சமர்ப்பிக்கவில்லை. அதோடு இந்தக் கோப்புகள் — சர்வதேச அரசியல் தரகராகக் திகழும் சந்திராசாமிக்கு, ராஜீவ் கொலையில் இருந்த தொடர்புகளை அம்பலப்படுத்தும் கோப்புகளாகும்.

ராஜீவ் கொலை தொடர்பாக நடந்த பல்வேறு முயற்சிகள் வெளியே தெரிய வேண்டாம் என்ற நோ தோடுதான், இந்தக் கோப்பில் அடங்கியிருந்த

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சாட்சியங்கள் மறைக்கப்பட்டன என்ற, உளவுத் துறை அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் பேசும்போது ஒப்பு கொண்டார்கள் என்ற தகவல்களை அவுட்லுக் ' ஆங்கில இதழ் (24.1197) வெளியிட்டது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## கோப்புகளையே திருத்தினார், ப. சிதம்பரம்

ராஜீவ் மரணத்தைத் தொடர்ந்து பதவிக்கு வந்த நரசிம்மராவ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்தான். அவரது தலைமையில் நடந்த காங்கிரஸ் ஆட்சியில் தான் ராஜீவ் கொலை தொடர்பான பல கோப்புகள் மாயமாய் மறைந்து போயின. "அய்யோ, இளம் தலைவரை கொன்றுவிட்டார்களே " என்று நீலிக் கண்ணீர் வடிக்கும் காங்கிரசார், ராஜீவ் கொலையில் உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்பதில், எந்த கவலையோ, அக்கறையோ காட்டியதில்லை. 'கோப்புகள் காணாமல் போய் விட்டது' என்று கூறி, அதிலே அடங்கியிருந்த பல உண்மைகள் வெளியே வந்து விடக் கூடாது என்று காங்கிரஸ் ஆட்சி மூடி மறைத்தது. சர்வதேச ஆயுத வியாபாரிகளிடம் நெருக்கமாகத் தொடர்பு கொண்டு, ராஜீவ் கொலைக்கு சதித் திட்டம் தீட்டியதாகக் கருதப்படும் தனது நெருக்கமான நண்பரான சந்திரசாமியைக் காப்பாற்றவே நரசிம்மராவ் இந்தக் கோப்புகளை அழித்தார் என்று 'அய்.பி.' மற்றும் 'ரா' உளவுத்துறை அதிகாரிகள், ஒப்புக் கொள்வதாக 'அவுட்லுக் பத்திரிகை (24.11.1997) எழுதியது.

கோப்புகளை அழித்தது மட்டுமல்ல, கோப்புகளையே திருத்தியும் எழுதினார்கள். அரசுக் கோப்புகளை இப்படி திருத்துவது சட்டப்படி குற்றம். ஆனால், நரசிம்மராவ் ஆட்சியில், அதுவும் நடந்தது. அதற்கு உடந்தையாக செயல் பட்டவர் யார் என்பது தான் வியப்புக்குரியது. முருகன், சாந்தன், பேரறி வாளன் ஆகியோர் கருணை மனுக்களை நிராகரித்து தூக்கில் போடுவதற்கு பரிந்துரை செய்த, உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தான், கோப்பைத் திருத்துவதற்கு துணை நின்றவர். ஜெயின் ஆணையத்தின் விசாரணையில் இந்த உண்மை வெளிச்சத்துக்கு வந்தது.

வி.பி. சிங் பிரதமராக இருந்தபோது அவ அமைச்சரவை செயலாளராக இருந்த வினோத் பான்டே அதிகாரி, ஜெயின் ஆணையத்தின் முன் சாட்சியமளிக்க வந்தார். அவரிடம், ராஜீவ் பாதுகாப்பு தொடர்பான ஒரு கோப்பைக் காட்டி, " இது நீங்கள் எழுதியது தானே'' என்று சாட்சியத்தின் போது கேட்டார்கள். கோப்பைப் படித்துப் பார்த்த அந்த அதிகாரி திடுக்கிட்டுப் போனார். "ராஜீவ்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

காந்திக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வது பற்றி நான் எழுதிய குறிப்புகள், இந்தக் கோப்பில் திருத்தப்பட்டுள்ளன" என்று நேரடியாகவே அவர் குற்றம் சாட்டினார். ஜெயின் ஆணையம், உள்துவை அமைச்சகத்திடம் விளக்கம் கேட்டது. அப்போது உள்துறை இணை அமைச்சர் ப.சிதம்பரம், "ஆமாம், உண்மைதான். வினோத் பாண்டே எழுதிய கோப்பு காணாமல் போய் விட்டதால், அதைத் தேட முடியாததால், நாங்களே புதிதாக ஒரு கோப்பை தயாரித்தது உண்மைதான்" என்று ஜெயின் ஆணையத்திடம் ப. சிதம்பரம் ஒப்புக் கொண்டார். (அவுட் லுக் 24.11.1997)

கோப்புகள் திருத்தப்பட்டது மட்டுமல்ல, கோப்புகள் தொலைக்கப்பட்டதும் உண்டு. இராஜீவ் மரண விசாரணையில் அவ்வளவு கவலை' எடுத்துச் செயல்பட்டனர் அதிகாரிகள். ஸ்ரீகுமார் என்ற சி.பி அய். அதிகாரி, ராஜீவ் கொலை வழக்கு விசாரணை தொடர்பாக வெளிநாடுகளுக்கு சென்றார். இலண்டன் வழியாக இந்தியாவுக்கு திரும்பும் போது, இலண்டன் ஹீத்துரு விமான நிலையத்தில், இந்த வழக்குகள் தொடர்பான ஆவணங்களைக் கொண்டிருந்த அவரது கைப்பெட்டி காணாமல் போய்விட்டது. வெளிநாடுகளுக்கு சென்று வழக்கு விசாரணை தொடர்பாக தகவல்களடங்கிய ஆவணங்களை விமான நிலையத்திலிருந்து திருடிச் சென்றது யார்? ஏன் திருடிச் செல்ல வேண்டும்? திருட்டு, அந்த அதிகாரிக்கு தெரியாமல் நடந்ததா? அல்லது திருட்டுக்கு அவரும் உடந்தையா? இவ்வளவுக்கும் பிறகு, அந்த அதிகாரி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாதது ஏன்? இந்தக் கேள்விக்கு புலனாய்வுத் துறையிடமிருந்து பதிலே இல்லை. ஹீத்துரு நகரிலுள்ள காவல் நிலையத்தில் ஒரு புகாரை மட்டும் பதிவு செய்து விட்டு ஸ்ரீகுமார், இந்தியா திரும்பி விட்டார்.

ராஜீவ் கொலை வழக்கு விசாரணை வெளிப்படையாக நடத்தப்படவில்லை. காந்தி கொலை வழக்கு விசாரணை, இந்திரா கொலை வழக்கு விசாரணை வெளிப்படையாக பத்திரிகையாளர்கள், பார்வையாளர்கள் முன் நடத்தப்பட்டன.

ராஜீவ் கொலை வழக்கு விசாரணை ரகசியமாகவே நடத்தப்பட்டது. அதுவும் கறுப்புச் சட்டமான 'தடா' சட்டத்தின் கீழ் நடத்தப்பட்டது. குற்றம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சாட்டப்பட்டவர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப் பட்டு, அவர்களிடமிருந்து ஒப்புதல் வாக்கு மூலங்கள் பெறப்பட்டன. அந்த ஒப்புதல் வாக்கு மூலங்களே குற்றத்துக்கான சாட்சிகளாக மாற்றப்பட்டன. தற்போது தூக்குத் தண்டனைக்கு உள்ளாக்கப் பட்டுள்ள பேரறிவாளன், தனக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைகளை 'தடா' நீதிமன்றத்திலேயே மனுவாகத் தந்துள்ளார். (11.2.1992) கொடூரமான அந்த சித்திரவதைகளை விரிவாக இங்கே எழுதிட இயலாது என்பதால் உதாரணத்துக்கு ஒரு சிறு பகுதி:

"ஆய்வாளர்கள் மாதவன், ரமேஷ் ஆகியோர் முழங்காலை மடக்கியபடி கைகளை நீட்டியவாறு நிற்கச் சொல்வர். (அதாவது இருக்கையில் அமர்வது போன்ற பாவனையில்) அவ்வாறு நின்று கொண்டே இருக்க வேண்டும். அப்போது, எனது பின்னங்கால்களில் (ஆடுதசை ) கழியால் அடிப்பார்கள். ஆய்வாளர் செல்லத்துரை ஒரு பிவிசி பைப்பில் சிமெண்ட் அடைத்து, அதன் மூலம் எனது கை முட்டிகளை நீட்டச் சொல்லி அடிப்பார். இதில் ஆய்வாளர்கள் மாதவன், செல்லத்துரை ஆகியோர் மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளைப் பயன்படுத்துவதில் புகழ் பெற்றிருந்தனர். மற்றவர்களும் பயன்படுத்துவது உண்டு, என்றாலும் இவ்விருவரும் அதில் உயரத்தில் நின்றனர் என்றே கூற வேண்டும். அவை கூறுவதற்கும் கூசக் கூடியவை என்பதால்
அவற்றைக் குறிப்பிடுவதை தவிர்க்க விரும்புகிறேன்.

காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் கிருட்டிணமூர்த்தி என்றொருவர் இருந்தார். அவரும் என்னைத் துன்புறுத்தினார். அவரின் பாணி வேறுபட்டது. சுவர் ஓரமாக முதுகைச் சாய்த்து உட்காரச் சொல்வார் பின்னர் ஒரு காலை ஒரு பக்கச் சுவருடன் ஒட்டினார் போல் ஒரு காவலரை பிடிக்கச் சொல்வார். மற்றொரு காலை மற்ற பக்கச் சுவருக்கு அதாவது 180 பாகைக்கு விரிப்பார். அவ்வாறு விரியும்போது ஏற்படும் வேதனை அளவிட முடியாததாக இருந்தது.

ஆய்வாளர் டி.என். வெங்கடேசுவரனும் என்னைக் துன்புறத்தியவர். அவர் பென்சில் அல்லது சிறு கட்டைகளை விரல் இடுக்கில் வைத்து அழுத்திப் பிடித்துத் திருகுவார். ஊசிகளை விரல் நகங்களுக்கிடையே ஓட்டுவார். ஷூ கால்களால் எனது கால்களின் சுண்டு விரல்களில் ஏறி மிதிப்பார். இது போன்ற நுணுக்கமான கொடுமைகளைச் செய்வார்.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சிபிஐ துறையினர் எம்மைத் துன்புறுத்துவதில் ஏற்படும் இன்பத்தை எவ்வாறு விரும்பினர் என்பதற்கு எனக்கு ஏற்பட்ட உதாரணம் ஒன்று உண்டு. ஒரு நாள் ஆய்வாளர் என்னை அழைப்பதாகக் கூறி நானிருந்த அறையிலிருந்து துன்புறுத்தல் அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கு என்னைக் கீழே உட்காரச்சொன்னார்கள். பின்னர் திடீரென எனது இடது பக்க முகத்தில் செருப்புக் காலால் எட்டி உதைத்து ஒரு அதிகாரி கூறினார், ஏண்டா நாடு விட்டு நாடு அகதியா வந்த நீங்கள் இங்கு எங்கள் தலைவரை கொலையா செய்கிறீர்கள்?' என்றார். எனக்கு அழுகை வந்தது. அருகில் அமர்ந்திருந்த ஆய்வாளர் மாதவன் சிரித்தபடியே, 'இவன் சிலோன்காரன் இல்லை, தமிழ்நாட்டுக்காரன்தான்' என்றார். உடனே என்னைத் திரும்பவும் உள்ளே அனுப்பிவிட்டனர்.
இதை ஏன் கூறுகிறேன் என்றால், யார் என்ற விவரம் கூடத் தெரியாமல், என்ன குற்றமிழைத்தார் என்றும் அறியாமல் யாரையாவது அப்பாவிகளைத் துன்புறுத்தி, குற்றவாளிகளாக்கி, பெயரெடுக்கும் மனப்பான்மையோடு காவல் துறையினர் இருந்தனர் என்பதைக் காட்டவே குறிப்பிட்டேன். அவ்வாறு என்னை உதைத்த அதிகாரியின் பெயர் ஆய்வாளர் மோகன்ராஜ்."

(நூல்: தூக்குக் கொட்டடியிலிருந்து ஒரு முறையீட்டு மடல் )

ஆயுள் தண்டனை பெற்று சிறையில் வாடும் ராபர்ட் பயாஸ் எழுதியுள்ள "விடுதலைக்கு விலங்கு" எனும் நூலில் தனக்கு இழைக்கப்பட்ட பல்வேறு சித்திரவதைகளை விவரித்துள்ளார். அதில் ஒன்றை மட்டும் பதிவு செய்கிறோம்.

"எங்களை விசாரித்த புலனாய்வுத் துறையினர், தண்டனை முறைகளைப் பற்றிக் கடுமையாக ஆராய்ச்சி செய்து தேர்ந்த நிபுணர்களாக இருந்தனர். இது போன்ற துன்புறுத்தலான விசாரணை முறைகளுக்குக் காவல் துறையினர் பிரத்தியேகப் பயிற்சி எடுக்கிறார்கள். ஒரு மனிதனை மற்றொரு மனிதன் எப்படி விதவிதமாக துன்புறத்தலாம் என்பதற்குப் பயிற்சிகள். நினைத்துப் பார்க்கவே பயங்கரமாக இருக்கிறது. காலை நீட்டி வைத்து குதிகாலில் லத்தியால் அடித்ததால், கொஞ்ச நேரத்தில் எனக்கு குதிகாலில் இரத்தம் கட்டுவது போல இருந்தது. அப்படி இரத்தம் கட்டிவிட்டால் கால் பெரிதாக வீங்கிவிடும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கால் பெரிதாக வீங்கிவிட்டால் என்னை மீண்டும் துன்புறுத்த இயலாது என்பதை புரிந்து வைத்துக் கொண்டு, கொஞ்ச நேரம் என்னைக் குதிக்கச் சொன்னார்கள், பிறகு மீண்டும் அடித்தார்கள். இவ்வாறு என் மீதான துன்புறுத்தல்கள் நிகழ்ந்து கொண்டிருந்தபோது, அதிகாரி இரமேஷ் என்னை சுவருடன் சாய்த்து, தலைகீழாக நிற்க வைத்து அடிக்கத் துவங்கினார். என் உள்ளங்காலில் இருந்து உடலெங்கும் பரவி ஓடிய இரத்த ஓட்டம் என் உச்சந்தலையை நோக்கி விரைந்தது போன்ற கடுமையான தலைவலி, சிறிது நேரத்தில் நான் மயங்கி கீழே விழுந்தேன். காந்தன் பயன்படுத்திய ஒயர்லெசு செட் என்னிடம் தான் இருக்கிறது என யாரோ கூறியிருக்கிறார்கள் எனக் கூறி அந்த ஒயர்லெசுசெட் எங்கே எனக் கேட்டு, ஆய்வாளர் செல்லத்துரை, டி.எஸ்.பி. சிவாஜி, ஜயக்குமார் ஆகியோர் மயக்கத்தில் இருந்த என்னை ண்டும் அடித்தார்கள். எனக்கு முன்பின் தெரியாத ஒருவரை அழைத்து வந்து, அந்த ஒயர்லெசு செட் பற்றி எனக்கும் அவருக்கும் தான் தெரியும் எனக் கூறி விசாரித்தார்கள். அவர் என்னைப் பார்த்துவிட்டு, இவரை யார் என்றே தெரியாது எனக் கூறினார். உடனே அதிகாரிகள் என்னை, அவரை அடிக்கச் சொன்னார்கள். நான் முடியாது என மறுத்தேன். இவர்கள் மீண்டும் அடிக்கத் துவங்கினார்கள், நான் மீண்டும் மயங்கினேன்.

இத்தனை சித்திரவதைகளுக்கு மத்தியிலும் எனக்கு குடிக்கத் தண்ணீர்த் தரக் கூடாது என்பதில் அதிகாரிகள் மிக தெளிவாக இருந்தார்கள். தாகம் என்றால், நீங்கள் நினைப்பது போல் ஒரு குவளை நீர் அருந்தினால் தணிந்து விடும் தாகம் அல்ல. ஏற்கெனவே உடலெங்கும் வற்றியிருந்த நீர்ச்சத்தினால் உடலில் நீர் வடிவங்களாக இருக்கின்ற, எச்சில், உதிரம் போன்றவற்றை உடல் தானாகவே கிரகிக்கத் துவங்கும். இதனால் கடுமையான சோர்வும், தசை இடுக்குகளில் இருக்கின்ற நீர்ச்சத்துக் குறையத் தொடங்கியவுடன் ஏற்படும் உடல்வலி போன்றவை உயிரை வாட்டி எடுக்கும். அதைத்தான் நான் தாகம் என்ற ஒற்றைச் சொல்லில் உங்களிடம் கூறியிருக்கிறேன்."

(நூல்: விடுதலைக்கு விலங்கு')

இந்த வழக்கை விசாரித்த சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவர் டிஆர். கார்த்திகேயன், 'ராஜீவ் காந்தி படுகொலை புலனாய்வு' என்ற நூலை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எழுதியுள்ளார். அதில் 'தடா' சட்டம் தான் தங்கள் விசாரணைக்கு கிடைத்த பெரும் வாய்ப்பு என்பதை ஒப்புக் கொள்கிறார்.

"ராஜீவ் படுகொலை வழக்கில், தடா சட்டம் பயன்படுத்தப்பட்டதால், சாதாரணமாய் வழக்குகளை விசாரிக்கும் போலீசுக்குக் கிடைக்காத சில சௌகரியங்கள் கிடைத்தன. கோர்ட்டின் அனுமதியுடன் அறுபது நாட்கள் வரை, குற்றம் சாட்டப்பட்ட நபரை போலீஸ் பாதுகாப்பில் வைத்து விசாரணை செய்ய முடியும். (வழக்கமாக இது 15 நாட்கள்)
இந்திய சாட்சிய சட்டப்படி போலீஸ் அதிகாரியிடம் குற்றம் சாட்டப்பட்டவர்கள் கொடுக்கும் ஒப்புதல் வாக்குமூலம் அங்கீகரிக்கப்படுவதில்லை. விதிவிலக்காக போலீஸ் காவல் துறை அதிகாரியிடம், சாகும் தருவாயில் கொடுக்கப்படும் வாக்குமூலங்களும், ஒப்புதல் வாக்கு மூலங்களில் ஒரு தடயம் கண்டுபிடிக்கப்படுமானால் அத்தகைய பகுதி மட்டும் அமைந்தன. ஆனால், தடா சட்டத்தில் காவல் துறை கண்காணிப்பாளர் தகுதியிலுள்ள அல்லது அதற்கு மேற்பட்ட தகுதியிலுள்ள அதிகாரிகள், ஒப்புதல் வாக்கு மூலம் பதிவு செய்தால் அதை வழக்குகளின் சாட்சியங்களாக அனுமதிக்கப்படும்."

(நூல்: ராஜீவ் படுகொலை — புலனாய்வு — கார்த்திகேயன்)

இப்படி தடா சட்டம் தான் தங்களுக்கு சவுகரியங்களை ஏற்படுத்தித் தந்தது என்று ஒப்புக் கொள்கிறார் கார்த்திகேயன். 'தடா' சட்டப்படி குற்றம் சாட்டப்பட்டவர்கள் தான் தங்களை நிரபராதிகளாக நிரூபித்துக் கொள்ள வேண்டும். விசாரணை நடத்துவோருக்கு எந்த முறைகேடுகளையும் செய்யும் சட்ட வாய்ப்புகள் உண்டு.

இப்படித்தான் ஒரு நாட்டின் மிகப்பெரும் தலைவர் கொல்லப்பட்ட வழக்கு விசாரணையின் சட்டங்கள், மனித உரிமைகளை காலில் போட்டு மிதித்துவிட்டு, நடந்து முடிந்திருக்கிறது.

## விசாரணை ஆணையங்களை முடக்கிய காங்கிரஸ்

ராஜீவ் கொலை வழக்கை விசாரித்த சிறப்பு புலனாய்வுக் குழு மட்டுமல்ல, இக்கொலை பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட விசாரணை ஆணையங்கள் செயல்பாட்டிலும் பல மர்ம முடிச்சுகள் காணப்படுகின்றன. ராஜீவ் கொலையில் உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிவதில் மத்தியில் ஆட்சி செய்த காங்கிரசுக்கு உண்மையான கவலை இருக்கவே இல்லை என்பதற்கு ஏராளமான சான்றுகள் உண்டு. எப்படியாவது விடுதலைப் புலிகள் இயக்கத்தினரையும், அந்த இயக்கத்தின் இலட்சியத்துக்காக தமிழின உணர்வோடு செயல்பட முன் வந்த தமிழின இளைஞர்களையும் தண்டித்தாக வேண்டும் என்ற 'ஒற்றைப் பார்வை 'யோடு, காங்கிரஸ் ஆட்சி செயல்பட்டிருக்கிறது. ராஜீவ் கொலையில் உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிய முடியாமல், அது தொடர்பான விசாரணைகளை மூடி மறைக்கவே மத்தியில் காங்கிரஸ் ஆட்சி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தியிருப்பது ராஜீவ் மரணத்துக்கு இழைத்த மிகப் பெரும் அநீதியாகும்.

ராஜீவ் கொலையில் சதித் திட்டம் தீட்டியவர்கள் மற்றும் ராஜீவ் பாதுகாப்புக்கு உரிய ஏற்பாடு செய்யாத வர்களைக் காப்பாற்றுவதற்கு காங்கிரஸ் ஆட்சி துடிப்புடன் செயல்பட்டது.

ராஜீவ் காந்தி கொலை நடந்தபோது மத்தியில் ராஜீவின் எடுபிடி யான சந்திரசேகர் தலைமையிலான ஆட்சி நடந்தது. வி.பி. சிங் ஆட்சியை கவிழ்த்த காங்கிரஸ், தனது ஆதரவோடு சந்திரசேகர் தலைமையில் ஒரு பொம்மை ஆட்சியை உருவாக்கி யிருந்தது. சந்திரசேகர் ஆட்சியில் சட்ட அமைச்சராக இருந்த வர் சுப்ரமணியசாமி. ராஜீவ் கொலை நடந்த அடுத்த 6வது நாளில் ஜெக்தீஷ் சரண்வர்மா (ஜெ. எஸ். வர்மா) என்ற உச்சநீதிமன்ற தலைமையில் ஒரு விசாரணை ஆணையத்தை சந்திரசேகர் ஆட்சியில் உள் துறை அமைச்சராக இருந்த சுபக்காந்த் சகாய், 1991 மே 27 ஆம் தேதி அறிவித்தார். ராஜீவ் காந்திக்கு செய்யப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளில் கோளாறுகள், குறைகள் நடந்தனவா என்பது குறித்து ஆராய்வதே இந்த ஆணையத்தின் பணி என்று உள் துறை அமைச்சகம் அறிவித்தது. இதை அப்போது

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

காங்கிரஸ் எதிர்த்தது. ராஜீவ் கொலையின் சதித் திட்டங்கள் பற்றியும், விசாரணை வரம்பு விரிவாக்கப்பட வேண்டும் என்று அப்போது காங்கிரஸ் தலைவராக இருந்த பி.வி. நரசிம்மராவ், பிரதமர் சந்திரசேகருக்கு கடிதம் எழுதினார். ஆனால், ஜெ.எஸ். வர்மா பாதுகாப்பு குறைபாடுகள் தொடர்பான பிரச்சினைகளை மட்டுமே தம்மால் விசாரிக்க முடியும் என்று உறுதியாகக் கூறிவிட்டார். அதன் காரணமாகவே ஜெ.எஸ். வர்மா விசாரணை வரம்பிலிருந்து ஒதுக்கப்பட்ட அயல்நாட்டு சதி தொடர்புகள் குறித்து விசாரிக்க உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எம்.ஜி. ஜெயின் தலைமையில் மற்றொரு விசாரணை ஆணையம் 1991 ஆக.23 இல் அமைக்கப்பட்டது.

சந்திரசேகர் ஆட்சியின் போதும் அடுத்த சில மாதங்களில் அமைந்த நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியின்போதும் நீதிபதி வர்மா ஆணையம் செயல்படுவதற்கான நடவடிக்கைகளில் ஆட்சியாளர்கள் ஆர்வம் காட்டவில்லை. அலுவலக செயலாளரோ, பணியாளர்களோ நியமிக்கப்படவில்லை . மனம் குமுறிய ஜெ.எஸ். வர்மா, வெளிப் படையாகவே, "இந்தியாவின் ஜனநாயக முதிர்ச்சி, எந்த அளவுக்கு உள்ளது என்பதையே இது காட்டுகிறது. இது இந்தியாவின் கவுரவம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. உலக மக்கள் இதை உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள்" (2.5.1991 'இந்து' நாளேடு) என்று கூறினார். ஒரு வழியாக நீதிபதி சர்மா, 1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அறிக்கையை மத்திய அரசிடம் சமர்ப்பித்தார். 5 மாதங்கள் கழித்து டிசம்பர் மாதம் தான் நரசிம்மராவ் ஆட்சி, அறிக்கையை நாடாளுமன்றத்தில் வைத்தது. உள் துறை அமைச்சர் எஸ்.பி. சவான் சர்மா அறிக்கையின் பரிந்துரைகளை முற்றிலுமாக நிராகரித்தார். ஆனால், காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களே இந்த அறிவிப்பை கடுமையாக எதிர்த்ததால், பிரதமர் நரசிம்மராவ் அறிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் உருவானது. அதன் பிறகும், இரண்டு ஆண்டுகாலம் அறிக்கை கிடப்பில் போடப்பட்டது. பிறகு எதிர்கட்சிகள் வற்புறுத்தலைத் தொடர்ந்து, மத்திய அமைச்சர்களைக் கொண்ட குழு ஒன்று அறிக்கையை பரிசீலித்து, அரசுக்கு ஆலோசனை வழங்க அமைக்கப்பட்டது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வர்மாவின் அறிக்கை மத்திய மாநில ஆட்சிகளின் காவல் துறை, உளவுத் துறையைக் கடுமையாகக் குறை கூறியது ராஜீவ் கொலை நடந்தபோது மத்தியில் நடந்த சந்திரசேகர் ஆட்சியும், தமிழ்நாட்டில் நடந்த ஆளுநர் ஆட்சியும் காங்கிரசின் 'பினாமி' ஆட்சிகள் தான் என்பதை நினைவில் நிறுத்த வேண்டும். ராஜீவுக்கு பாதுகாப்பு வழங்குவதில் தமிழக காவல் துறை, தமிழக அரசு, இந்திய உளவுத் துறை மற்றும் ராஜீவ் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த காங்கிரசார் தங்கள் கடமையி லிருந்து நழுவிவிட்டனர் என்று குற்றம் சாட்டியது வர்மா அறிக்கை, இவர்கள் ஒழுங்காக செயல்பட்டிருந்தால் ராஜீவ் கொலையைத் தடுத்திருக்க முடியும் என்று கூறியது.

ஸ்ரீபெரும்புதூர் காங்கிரஸ் வேட்பாளர் மரகதம் சந்திரசேகருக்கும், தமிழ்நாடு காங்கிரசுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் இருந்ததால், மரகதம் சந்திரசேகர், தமிழக காங்கிரசார் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்வதைத் தவிர்த்து, தானே ஏற்பாடு செய்தார் என்றும், உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய வேண்டிய தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும், தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல் ஒதுங்கி நின்றார் என்றும் ஆணையம் குற்றம் சாட்டியது. வர்மா விசாரணை ஆணையத்துக்கு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி எவ்வித ஒத்துழைப்பையும் தரவில்லை என்று கூறிய அந்த பரிந்துரை, "ஸ்ரீபெரும்புதூர் பொதுக் கூட்டம் நடந்த இடத்தில் காங்கிரஸ் கட்சிக்காரர்களின் செயல்பாடுகள் எந்தவிதமான ஒழுக்கமும் இல்லாமல் பொது இடத்துக்குரிய பொறுப்பு இன்றி இருந்தது" என்று கடுமையாக காங்கிரசாரை இடித்துரைத்தது.

வர்மா அறிக்கை பற்றி பரிசீலிக்க அமைக்கப்பட்ட அமைச்சர்கள் குழு, கடமை தவறிய சில மூத்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. கடமை தவறிய நான்கு மூத்த அதிகாரிகளிடம் அமைச்சரவைக் குழு நேரில் விசாரணை நடத்தி விளக்கம் கேட்டது. உளவுத் துறை தலைவர் எம். கே. நாராயணன், உள் துறை செயலாளர் ஜி.எஸ். மணிசர்மா, பாதுகாப்புச் செயலாளர் ஜி.எஸ். வாஜ்பாய், அமைச்சரவை செயலாளர் வினோத் பாண்டே ஆகியோர் தான், விசாரணை நடத்தப்பட்ட அதிகாரிகள். ஆனால், இவை எல்லாமே கண் துடைப்பு நாடகம் தான். வர்மா, பரிந்துரையை சமர்ப்பித்தபோது, இந்த அதிகாரிகள் பதவியில் இருந்தார்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஆனால், அவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகே, விசாரணை நடத்தி விளக்கம் கேட்கப்பட்டது. பணி ஓய்வு பெற்ற பிறகு, நடவடிக்கை எடுக்க இயலாது என்பதைத் தெரிந்தே, காங்கிரஸ் ஆட்சியினர், இப்படி ஒரு விசாரணை நாடகத்தை நடத்தினர். உடனடியாக, அந்த நான்கு அதிகாரிகளும், தங்களிடம் விளக்கம் கேட்கப்பட்டதை எதிர்த்து, மத்திய நிர்வாக மன்றத்திடம் முறையீடு செய்தனர். ஓய்வு பெற்ற பிறகு, இவர்களிடம் விளக்கம் கேட்பது, முறையற்றது என்று நிர்வாக மன்றம் தீர்ப்பளித்து விட்டது. ராஜீவ் கொலையில் கடமையை செய்யாமல் தவறிழைத்த அதிகாரிகளை காங்கிரஸ் ஆட்சியே இப்படி திட்டமிட்டு காப்பாற்றியது. வர்மா ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் எந்த ஒரு நடவடிக்கையையும் காங்கிரசாரோ, காங்கிரஸ் ஆட்சியோ இதுவரை எடுக்கவில்லை என்பதோடு குற்றம் சாட்டப்பட்டவர்களையும் காப்பாற்றி விட்டார்கள்.

ராஜீவ் கொலை நடந்தபோது, இந்தியாவின் உளவுத் துறை இயக்குனராக இருந்தவர் எம். கே. நாராயணன். ஜெ.எஸ். வர்மா ஆணையம், தனது அறிக்கையில் எம். கே. நாராயணன் நம்பகத்தன்மை' குறித்து கேள்விகளை எழுப்பியது.

ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் மீது குண்டு வெடிக்க போது எடுக்கப்பட்ட வீடியோ படத்தின் மூலப் பதிவு சிறப்பம் புலனாய்வுக் குழுவிடம் இருந்தது போலவே, உளவுத் துறை இயக்குனர் எம்கே. நாராயணனிடமும் இருந்தது. ஆனால், இங் வீடியோ மூலப் பதிவை சிறப்புப் புலனாய்வுக் குழுவும் எம்.கே நாராயணனும், வர்மா ஆணையத்திடம் தரவில்லை . தங்களிடம் அப்படி எந்த ஒரு 'வீடியோ கேசட்டும்' இல்லை என்றே சிறப்புப் புலனாய்வுக் குழுத் தலைவர் கார்த்திகேயன். ஆணையத்திடம் கூறிவிட்டார் என்று அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. அதன் பிறகு, இந்த வீடியோ காட்சிகளில் ஏதேனும் அழிக்கப்பட்டுள்ளதா என்று வெளிநாட்டு நிபுணர்கள் ஆய்வு செய்து கொண்டிருப்பதாக கார்த்திகேயன் வர்மா ஆணையத்தில் தெரிவித்து விட்டார். கடைசி வரை அந்த படப்பதிவு ஆணையத்திடம் தரப்படவில்லை. விசாரணையின் கடைசி அமர்வில் கூட இது பற்றி நீதிபதி வர்மா கேட்டார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அப்போதும் கூட ஆய்வின் முடிவுகளுக்காகக் காத்திருப் பதாகவே, ஆணையத்திடம் கார்த்திகேயன் சார்பில் கூறப்பட்டது.

வர்மா ஆணையத்திடம் வழங்கப்பட்ட பிரதி எடுக்கப்பட்ட அந்த வீடியோ பதிவுகளில் வெடிகுண்டுப் பெண் ராஜீவுக்கு மாலையிட முயன்று வெடிகுண்டை வெடிக்கச் செய்யும் காட்சிகள் தெளிவின்றி திட்டமிட்டே மங்கலாக்கப்பட்டிருந்தன என்று வர்மா, தனது பரிந்துரையில் குறிப்பிட்டுள்ளார். மிக முக்கியமான இந்தக் காட்சிகள் மட்டும் ஏன் மங்கலாக்கப்பட்டன என்ற கேள்வியை நீதிபதி வர்மா எழுப்புகிறார். பாதுகாப்பு குறைபாடுகள் பற்றி விசாரணை நடத்திய வர்மா, ஆணையத்திடம் வீடியோ கேசட் மூலப்பதிவை தர மறுத்த அதே சிறப்புப் புலனாய்வுக் குழு, அன்னிய சதி பற்றி விசாரணை நடத்திய ஜெயின் ஆணையத்திடம் நான்கு வீடியோ கேசட்டுகளை வழங்கியது. காரணம் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யத் தவறிய அதிகாரிகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற உள் நோக்கம் தான். இது தவிர ராஜீவ் காந்தி விமான நிலையத்திலிருந்து இறங்கி ஸ்ரீபெரும்புதூர் சென்றது வரை எடுக்கப்பட்ட வீடியோ கேசட், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிடம் இருந்தது. ஆனால், காங்கிரஸ் கட்சியின் ஒருங்கிணைப்பாளர்கள், அந்த வீடியோ பதிவு தங்களிடம் இல்லை என்றும், அதை காவல்துறை கைப்பற்றியிருக்கலாம் என்றும், வர்மா ஆணையத்திடம் கூறி விட்டனர். ராஜீவுடன் வந்த காங்கிரஸ்காரர்கள் ஏன் ஸ்ரீபெரும்புதூர் போகவில்லை என்ற கேள்விக்கு பதில் சொல்ல வேண்டிவருமே என்ற அச்சம் தான் இதற்குக் காரணம். இது குறித்து வர்மா தனது வருத்தத்தைப் பதிவு செய்துள்ளார். 'விடுதலைப் புலிகளுக்கு அப்பால்' நூலில் அதன் ஆசிரியர் ராஜீவ் சர்மாவும் கீழ்க்கண்ட கேள்விகளை எழுப்புகிறார்.

ராஜீவ் படுகொலையில் இறுதி வினாடி வரை, அனைத்து நிகழ்வுகளும் வீடியோ பதிவு செய்யப்பட்டதா? கொலை சதிக்கு திட்டமிட்டவர்கள் மீது கேமிரா பார்வை விழுந்ததா? தாணு மற்றும் சிவராசன் அருகில் யார் யார் நின்றார்கள்? அல்லது அமர்ந்தார்கள்? கேமிராவில் உள்ள சில பதிவுகளை திட்டமிட்டு மங்கலாக்கியது யார்? இதற்கு ஆணை யிட்டது யார்? என்ற கேள்விகளை எழுப்பியுள்ளார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எம். கே. நாராயணன் பற்றி வர்மா ஆணையம் தெரிவித்துள்ள கருத்துகள் மிகவும் குறிப்பிடப்பட வேண்டியதாகும். "ராஜீவ் காந்திக்கு அளிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் எம். கே. நாராயணனுக்கு திருப்தி அளிக்கவில்லை என்பதை இந்த ஆணையம் உணருகிறது. ஆனால் வெளியே சொல்ல முடியாத காரணங்களால், அவரால் இதற்கு எதிராக, எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை . இது பற்றி, இன்றைய நாள்வரை எம். கே.நாராயணன் வாயை மூடி மவுனம் சாதிக்கிறார். உயர்மட்டத்தில் நடக்கும் இந்தக் குறைபாடுகளுக்கான காரணங்களை கண்டறிந்து, உடனே களைய வேண்டும்" என்று வர்மா ஆணையம் குறிப்பிடுகிறது. இது குறித்து ராஜிவ் சர்மா, தனது நூலில் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.

"ராஜீவ் உயிருக்கு திட்டவட்டமான அச்சுறுத்தல் உள்ளது என்பதை எம். கே. நாராயணன் முன்கூட்டியே தெரிந்திருந்தாரா? அல்லது ராஜீவ் பாதுகாப்பு குறைபாடுகளை சரி செய்ய விரும்பினாலும், அதிகார பலம் கொண்ட மேலிட உத்தரவினால்' அவரால் செயல் முடியாமல் போனதா? ராஜீவ் மரணத்தால், அரசியல்ரீதியாக பயனடைந்தவர்கள் யார்? ராஜீவ் கொலை செய்யப்படுவதற்கு
முதல் நாள் மே 20 அன்று அப்போதைய உளவுத் துறையின் இணை இயக்குனர் எஸ்.கே. தாக்கூர் அனைத்து மாநில காவல்துறை தலைமை அதிகாரிகளுக்கும், ராஜீவ் பாதுகாப்பை அதிகரிக்கக் கோரி, ஒரு கடிதம் எழுதியிருந்தார். அப்படியானால், அடுத்த நாள் ராஜீவ் கொலை நடத்துப் போகிறது என்பது முன்கூட்டியே தெரியுமா? ஏன் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை, என்ற கேள்விகளை அவர் முன்வைக்கிறார்.

1991 இல் நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் உள்துறை செயலாளர் பார்கவா தலைமையில், உயர் அதிகாரிகள் கூட்டம் ஒன்று நடந்தது. அதில் உளவுத்துறைத் தலைவர் எம். கே. நாராயணனும் கலந்து கொண்டார். அப்போது ராஜீவுக்கு தரப்படும் பாதுகாப்புகள் பற்றி விவாதிக்கப்பட்டது. எனவே எம். கே. நாராயணனுக்கு ராஜீவுக்கு தரப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த எல்லா விவரங்களும் தெரியும் என்று கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த உள்துறை அமைச்சகத்தின் இணைச்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

செயலாளர் என்.கே. சிங், என்பவர் வர்மா ஆணையத்தின் முன் தெரிவித்தார். ஆனால், அதுபற்றி தனக்கு எதுவுமே தெரியாது, அப்படி ஒரு கூட்டத்தில் தாம் கலந்து கொள்ளவே இல்லை என்று எம். கே. நாராயணன் மறுத்தார். நீதிபதி வர்மா விடவில்லை . இருவரையும் எழுத்துப் பூர்வமாக தங்கள் கருத்துகளைக் கூற முடியுமா என்று கேட்டபோது, என் கே. சிங், எழுத்துபூர்வமாக அக்கூட்டத்தில் பங்கேற்றது உண்மையே என்று எழுதிக் கொடுத்தார். எம். கே. நாராயணன் எழுத்துப் பூர்வமாக தர முன்வரவில்லை . எம்.கே. நாராயணன், ராஜீவ் பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்த வேண்டும் என்று கூறுவதற்கு தனக்குக் கிடைத்த உயர்மட்ட கூட்டத்தின் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளவில்லை என்ற முடிவுக்கு தாம் வந்ததாக வர்மா, தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். எம். கே. நாராயணன், பொய் கூறுவதற்கும் தயங்காத ஒரு மனிதர் என்பதையே இது காட்டுகிறது.

இந்திய உளவுத் துறையை கடுமையாக விமர்ச்சிக்கிறது வர்மா அறிக்கை. " உளவுத் துறையில் அரசியல் தலையீடுகள் மிக சாதுர்யமாக நடக்கின்றன. அதன் செயல்பாடுகள் புரிந்து கொள்ளவே முடியாத அளவுக்கு கறை படிந்து கிடக்கின்றன. அதன் நம்பகத் தன்மை நடை முறையானாலும், கற்பனையானாலும் மோசமான பாதிப்புக்குள்ளாகி விட்டது. அரசியல் சார்பு, அடியாட்கள் அச்சுறுத்தல் இல்லாமல், சுதந்திரமான, நேர்மையான அதிகாரிகளைக் கொண்ட புதிய அமைப்பாக உளவு அமைப்புகள் உருவெடுக்க வேண்டும்" — என்று வர்மா நெத்தியடியாகக் கூறுகிறார்.

ராஜீவ் கொலையில் 'அன்னிய சதி' பற்றி விசாரிக்க காங்கிரஸ் ஆட்சி நியமித்த ஜெயின் விசாரணை ஆணையத்தின் கதையோ, இதைவிடமிக மோசம்!

1991 ஆகஸ்டு மாதம் இந்த விசாரணை ஆணையத்தை அமைத்ததே நரசிம்மராவ் தலைமையில் நடந்த காங்கிரஸ் ஆட்சி தான். காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வற்புறுத்தலினால் தான் அது வந்தது. ஆனால், பெற்ற குழந்தையை தாயே, கழுத்தை நெறித்து சாகடிப்பது போல், இந்த ஆணையத்தின் செயல்பாட்டையும் காங்கிரஸ் ஆட்சி முடக்கிப் போடவே துடித்தது. ஜெயின் ஆணையம் எப்படி எல்லாம் காங்கிரஸ் மைதானத்தில்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

பந்தாடப்பட்டது என்ற விவரங்கள் அதிர்ச்சித் தரக்கூடியதாகும். "ராஜீவ் கொலையை மறக்க முடியுமா? மறைக்க முடியுமா?" என்று கசிந்துருகி கண்ணீர் வடிக்கும் காங்கிரஸ் கட்சியினர் இந்த விசாரணை ஆணையத்தை முடக்கி, ராஜீவ் கொலையில் அன்னிய சதியை மூடி மறைக்க எடுத்த முயற்சிகள் அதிர்ச்சியூட்டு பவையாகும். அந்த துரோகச் செயல்பாடுகளை, அப்படியே பட்டியலிட்டுக் காட்டுகிறோம்.

நீதிபதி ஜெயின், தனது விசாரணையைத் தொடங்குவதற்கு முன்பு விசாரணைக்கான வரம்பை நிர்ணயிக்க விரும்பினார். எனவே ஏற்கனவே ஜெ.எஸ். வர்மா, விசாகம் ஆணையத்தை நியமித்து அரசு பிறப்பித்த மூல அறிக்கை அடங்கிய கோப்பை, உள் துறை அமைச்சகத்திடம் கேட்டார். ஆனால், அந்த கோப்பே தொலைந்து போய் விட்டதாக அமைச்சகம் கூறிய பதில், நீதிபதியை அதிர்ச்சியடையச் செய்து விட்டது.

- நாடாளுமன்றத்தில், அரசின் அலட்சியத்தைக் கண்டித்து உறுப்பினர்கள் கொந்தளித்தனர். நாடாளுமன்றமே குலுங்கியது. இதைத் தொடர்ந்து காணாமல் போன கோப்பைத் தேடி கண்டுபிடிக்க கோப்பைத் தேடும் ஒரு 'சிறப்புப் பிரிவு உருவாக்கப்பட்டது. கோப்புகளைத் தேடிப் பிடிக்க சிறப்புப் பிரிவு அமைத்த சம்பவம், அநேகமாக இதுவே முதல் முறையாக இருக்கும். வலை வீசித் தேடக் கிளம்பிய சிறப்புப் பிரிவு பிரதமர் அமைச்சகம், சட்ட அமைச்சகம், உள்துறை அமைச்சகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தேடியும், கோப்பு கிடைக்காத நிலையில், அந்தக் கோப்பைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று நரசிம்மராவ் ஆட்சி அறிக்கை வெளியிட்டது.
- இதனால் ஒரு வருட காலம், ஆணையத்தின் பணி முடங்கியது. பிறகு, முதன் முதலாக பொது மக்கள் கருத்து கேட்கும் பணியைத் தொடங்க, ஆணையம் முன் வந்தது. அப்போது, மத்திய அரசின் வழக்கறிஞரே (அட்டர்னி ஜெனரல்) ஜெயின் ஆணையத்தின் விசாரணை அதிகாரம் பற்றிக் கேள்வி எழுப்பினார். இதற்கு எழுத்துப்பூர்வ விளக்கம் தருமாறு சட்ட அமைச்சகத்திடம் நீதிபதி ஜெயின் கேட்டார். அனால், நீதிபதிக்கு பதில் தருவதற்கு, சட்ட அமைச்சகம் எடுத்துக் கொண்ட கால

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அவகாசம், மீண்டும் ஒரு வருடம். ஒரு வருடத்துக்குப் பிறகு, சட்ட அமைச்சகம் தந்த பதிலில் ஏற்கனவே தமிழ் நாட்டில் சி.பி.அய். (சிறப்புப் புலனாய்வுக் குழு) நடத்திய விசாரணையில் ஜெயின் ஆணையம் தலையிடக் கூடாது என்றும், சி.பி அய். விசாரித்த நபர்களை ஜெயின் ஆணையம் விசாரிக்கக் கூடாது என்றும், அதற்கான அதிகாரம் ஜெயின் ஆணையத்துக்கு இல்லை என்றும் பதில் தந்தது.

- ஜெயின் இதை ஏற்க மறுத்தார். அன்னிய சதி' பற்றி விசாரிக்கும் போது, எல்லாவற்றையும் விசாரிக்கும் உரிமை தனக்கு உண்டு என்று 60 பக்கங்களில் விரிவான ஆணையை ஜெயின் வெளியிட்டார். சி.பி. அய். செய்த தவறுகளை விசாரிக்கவும், சி.பி.அய். விசாரணைப் பணிகளை நேரில் பார்வையிடவும், தமக்கு அதிகாரம் உண்டு என்றார் ஜெயின்.
- ஜெயின், தனது நிலையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திய மத்திய அரசு, அதுவரை, ஆணையத்தின் செயல்பாடுகளுக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும் என்று கேட்டது. இடைக்காலத் தடை என்ற பேச்சுக்கே இடமில்லை என்று ஜெயின் மறுத்து விட்டார்.
- இதைத் தொடர்ந்து ஆணையத்தை நீதிமன்றம் வழியாக முடக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. டெல்லியைச் சேர்ந்த முஸ்டாக் அகமது என்ற வழக்கறிஞர் டெல்லி உயர்நீதிமன்றத்தில், ஜெயின் ஆணையத்தை நியமித்த அரசு ஆணை செல்லாது என்று பொதுநல ' வழக்கு ஒன்றைத் தொடர்ந்தார். ஏற்கனவே, சி.பி.அய். குற்றவாளிகளைக் கண்டறிந்து, குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துவிட்டதால், ஜெயின் ஆணையம், மீண்டும் குற்றவாளிகளைக் கண்டறிய முற்படுவது நேர் எதிரான விளைவுகளை உருவாக்கிவிடும். சி.பி.அய். கண்டறிந்தவர்கள் மட்டுமே குற்றவாளிகள். ஜெயின் ஆணையம், வேறு குற்றவாளிகளைக் கண்டறிந்தால், வழக்கு விசாரணையை பாதிக்கும்'' என்று அவர் கோரியிருந்தார். வழக்கை விசாரணைக்கு ஏற்றடெல்லி உயர்நீதிமன்றம், ஏற்கனவேகுற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டவர்கள் மற்றும் சி.பி அய். சாட்சிகளை ஆணையம் விசாரிக்க இடைக்கால தடை விதித்தது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பிறகு வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், 1995 நவம்பரில், டெல்லி வழக்கறிஞர் மனுவை தள்ளுபடி செய்தது, ஜெயின் ஆணையத்தின் விரிவான விசாரணை அதிகாரம் உறுதிப்படுத்தியது.

- பதறிப் போன மத்திய காங்கிரஸ் ஆட்சி, முகமூடியைக் கிழித்துக் கொண்டு வெளியே வந்தது. முஸ்டாக் அது என்ற வழக்கறிஞரின் தனி நபர் மனுவை மத்திய அரயே உச்சநீதி மன்றத்துக்குக் கொண்டுபோனது. ஆக, ஒரு வழக்கறிஞரைப் பிடித்து, தனது சார்பில், 'பொது நல வழக்கைத் தொடர்ந்ததே, மத்திய அரசு தான் என்ற உண்மை வெளிச்சத்துக்கு வந்தது. தனி நபர் தொடர்ந்த பொது நலன் வழக்கில் அரசு மேல்முறையீடு செய்ததை உச்சநீதிமன்றம் கேள்வி கேட்டது. அதன் பிறகு, மத்திய அரசே தயாரித்துக் கொடுத்து தனி மனிதர் வழியாக தாக்கல் செய்த பொதுநல வழக்கு மனுவை திரும்பப் பெறுவதாக உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு கேட்டுக் கொண்டது.
- ஜெயின் ஆணையத்தின் விசாரணையில் ராஜீவ் கொலையில் தொடர்புடைய அரசியல் பிரமுகர்கள் அம்பலமாகிவிடுவார்களோ என்று அஞ்சி, அதை முடக்கத் துடித்தது காங்கிரஸ் ஆட்சி. காங்கிரஸ் உறுப்பினர்களின் வலியுறுத்தலால் வேறு வழியின்றி அமைக்கப்பட்ட ஜெயின் ஆணையத்தை செயல்பட விடாமல் தடுக்க மேற்கொண்ட கடும் முயற்சிகள் பலத்த சந்தேகங்களை மக்கள் மன்றத்தில் எழுப்பி நிற்கின்றன.

ஜெயின் ஆணையமோ விரிவான விசாரணையை நடத்தியது. 1987 ஆம் ஆண்டு முதல் சந்திராசாமியின் சர்வதேச ரகசிய தொடர்புகள், வெளிநாட்டு வங்கிகளில் போட்ட பணம், சுப்ரமணியசாமி தொடர்புகள் பற்றி இந்திய உள தயாரித்து வைத்திருந்த ஆவணங்கள், ஜெயின் ஆணையத்திடம் வந்து சேர்ந்தன. அந்த ஆவணங்கள் அரசிடம் சமர்ப்பிக்கப்படாமல் உளவுத்துறை வசமே இருந்தன. 1998 பிப்ரவரியில் ஜெயின் ஆணையத்தின் செயலாளராக இருந்த டி ஆர்.லுத்ரா, மத்திய உள்துறை செயலாளர் பி.பி.சிங் என்பவருக்கு அதுவரை அரசாங்கத்தின் பார்வைக்குக் கொண்டு போகாமல், உளவுத் துறை, தன் வசம் ரகசியமாக வைத்திருந்த அந்த ஆவணங்களை, அரசுக்கு அனுப்பி வைத்தார். 1991 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட ஜெயின் ஆணையம் 12 முறை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கால நீட்டிப்பு பெற்றிருந்தாலும், அரசுக்கு புதிய ஆவணங்கள் தரவுகள் கிடைத்துள்ளதால் சந்திராசாமி, சுப்பிரமணிய சாமி, அன்னிய சதிகள் பற்றி கண்டறிய மேலும், ஓராண்டு கால அவகாசம் தருமாறு ஆணையத்தின் சார்பில் அதன் செயலாளர் டிஆர். லுத்ரா அரசிடம் கேட்டார். அப்போது குஜ்ரால் தலைமையிலான அய்க்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி நடந்து கொண்டிருந்தது.

காங்கிரஸ் குஜ்ரால் ஆட்சியில் பங்கேற்கவில்லை; வெளியிலிருந்து ஆதரவு தந்தது. காங்கிரஸ் பலத்தை நம்பியே குஜ்ரால் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய நிலை! ஜெயின் ஆணையத்தின் விசாரணகள் தொடருவதை விரும்பாத காங்கிரஸ் தலைமை கால நீட்டிப்புத் தரவேண்டாம் என்றே குஜ்ரால் ஆட்சியை மிரட்டியது; இல்லாவிட்டால் ஆதரவைத் திரும்பப் பெற்று ஆட்சியைக் கவிழ்த்து விடுவார்கள். எனவே, "கால நீட்டிப்பு தர அரசு விரும்பவில்லை ; அடுத்த ஏழு நாட்களில் ஆணையம் இறுதி அறிக்கை தந்தாக வேண்டும்" என்று 1998 பிப்.27 அன்று நள்ளிரவு உள்துறை அமைச்சகம் ஜெயின் ஆணையத்துக்கு ஆணையிட்டது நீதிபதி ஜெயின் பதறிப்போனார்.

குஜ்ரால் அரசின் மூத்த அமைச்சர் ஒருவர் நீதிபதி ஜெயினை தொலைபேசியில் அழைத்து, "ஆணையம் விரிவான அறிக்கை தரத் தேவையில்லை. மேலோட்டமான அறிக்கையை சமர்ப்பித்தாலே போதுமானது. மேலோட்டமான அறிக்கை என்பதால் நாடாளுமன்றத்தில் வைக்கத் தேவையில்லை. அது நேரடியாகவே அமைச்சரவைக்கு வந்து சேர்ந்து விடும். அத்துடன், செயல்பாட்டுக்கான அறிக்கையை (Action Report) சமர்ப்பிக்க வேண்டிய அவசியமும் இல்லை கூறினார்.

இறுதி அறிக்கை தயாரிப்பில் பரபரப்பாக இருந்த ஆணையத்தை சிபி அய். அதிகாரிகளும் மிரட்டினர். ஏற்கனவே ஆணையத்தின் அறிக்கை ஊடகங்களில் கசிந்திருந்தன. அவை காங்கிரசுக்கு எதிராகவே இருந்தன. கசிய விட்டவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, சி.பி. அய் அதிகாரிகள் கட்டாயப்படுத்தினர். நீண்ட நேரம் சி.பி. அய் அதிகாரிகளுக்கும் ஜெயின் ஆணையத்திற்குமிடையே கடும் வாக்குவாதம் நடந்தது. ஜெயின் ஆணையம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கடும் நெருக்கடிகளை மிரட்டல்களை சந்திக்க வேண்டியிருந்தது. அறிக்கை தயாரிப்புக்கு எதிராக, நீதிபதிக்கு தொலைபேசி மிரட்டல்கள் வந்தன. நீதிபதியே உள்துறை அமைச்சகத்துக்கு எழுதிய கடிதத்தில் இந்த தொலைபேசி மிரட்டல்களைப் பதிவு செய்தார். இதே நீதிபதி 1997 ஆம் ஆண்டு அப்போதைய உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தாவிடம், ஊடகங்கள் புடை சூழ, 2000 பக்க அறிக்கையை சமர்ப்பித்தார். அந்த அறிக்கையிலிருந்து நிர்ப்பந்தத்தால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கை முற்றிலும் முரண்பட்டதாகவே இருந்தது. மிரட்டலுக்கு அஞ்சிய ஜெயின் தனது பரிந்துறைகளை மாற்ற வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளனார். முதல் அத்தியாயத்தின் முதல் பக்கத்தில் ராஜீவ் காந்தி படத்தை அறிக்கை தாங்கியிருந்தது. முதல் அத்தியாயம் முழுவதிலும் ராஜீவ் காந்தியின் பெருமைகளையே ஜெயின் புகழ்ந்து தள்ளியிருந்தார். எந்த ஒரு விசாரணை ஆணையமும், இப்படி, தனிநபர் புகழ் பாடிய முன் உதாரணங்கள் இல்லை. காங்கிரஸ் கட்சியினர் விரும்பியவாறே அறிக்கை வடிவம் பெற்றது. ஒரு வாரம் கழித்து, நீதிபதி ஜெயின், அவரது சொந்த ஊரான ஜோத்பூருக்குப் போனார். அங்கே எதிர்பாரத ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. சோனியா காந்தி — நீதிபதி இல்லம் தேடி வந்து நன்றி தெரிவித்துக் கொண்டார்.

எந்த ஜெயின் ஆணையத்தை கடமையை நிறைவேற்ற விடாமல் காங்கிரஸ், அலைக் கழித்ததோ, அதே விசாரணை ஆணையத்துக்கு சோனியாவின் பாராட்டும் நன்றியும் கிடைத்தது. வர்மா ஆணையத்தின் பரிந்துரை முடக்கப்பட்டது. ஜெயின் ஆணையத்தின் பரிந்துரை மிரட்டலால் வளைக்கப்பட்டது. இதுவே விசாரணை ஆணையங்களின் சோகமான முடிவு. இதே சோக முடிவைத் தான் இந்திரா காந்தி தொலையை விசாரிக்க அவரது 'தவப்புதல்வன்' ராஜீவ் காந்தியால் நியமிக்கப்பட்ட தாக்கர் ஆணையமும் சந்திக்க வேண்டியிருந்தது.

இந்திரா கொலை பற்றி விசாரிக்க நாடாளுமன்ற விதிகளின் கீழ் தாக்கர் ஆணையம் நியமிக்கப்பட்டது. ஆணையமும் விசாரணை நடத்தி அறிக்கை தந்தது. ஆனால், பிரதமர் ராஜீவ் அதை நாடாளுமன்றத்தில் வைக்க மறுத்தார். விசாரணை அறிக்கையில் அடங்கியிருந்த உண்மைகளை மறைக்கவே முயன்றார். விதிகளை சுட்டிக்காட்டி உறுப்பினர்கள் எதிர்த்தனர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

உடனே ராஜீவ் காந்தி, நாடாளுமன்றத்தின் விதிகளையே திருத்தி அறிக்கையை வெளிவராமல் தடுத்தார். ஆனாலும், ஆணையத்தின் முக்கிய பரிந்துரைகள் ஊடகங்களில் கசிந்துவிட்டன. அந்த செய்திகள் அதிர்ச்சியூட்டு பவையாகும்.

"இந்திரா கொலையில் அவரது இல்லத்துக்குள்ளேயே சதிகள் உருவாக்கப்பட்டன. அரண்மனை சூழ்ச்சி போன்ற (Palace Intrigue) பெரிய சதிகள் அடங்கியுள்ளன. இந்தக் கொலையில் இந்திராவின் தனிச் செயலாளராக இருந்த ஆர்.கே. தவான் மீது சந்தேகம் எழுகிறது. இவரை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்" என்று பரிந்துரை கூறியது. ('சண்டே ' ஆங்கில வார ஏடு 32.1991)

தாக்கர் விசாரணை ஆணையம் குற்றம் சாட்டிய ஆர். கே. தவான், இந்திராவின் உதவியாளர். அவர் மீது எந்த நடவடிக்கையும் காங்கிரஸ் ஆட்சி எடுக்கவில்லை . ராஜீவ் சில காலம் ஒதுக்கி வைத்திருந்தார். பிறகு சோனியாவின் செல்வாக்கு ஓங்கிய நிலையில் ஆர்.கே.தவான், டெல்லி நாடாளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக நிறுத்தப்பட்டார். காங்கிரஸ் கட்சி அறிவித்த வேட்பாளர் பட்டியலில் முதலிடம் பெற்றிருந்ததே ஆர்.கே.தவான் பெயர் தான். அதன் பிறகு சீத்தாராம் கேசரி காங்கிரஸ் தலைவராக இருந்த காலத்தில் ஆர்.கே.தவான், காங்கிரஸ் கட்சியின் செயலாளர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். அப்போது இந்திராவின் 'அரண்மனை இருந்த அவரது ஒரே குடும்ப உறுப்பினர் சோனியா தான், அப்படியானால் தாக்கர் கூறிய அரண்மனைச் சதி என்பதன் பொருள் என்ன? இதற்கும் ஆர்.கே. தவானுக்கும் உள்ள தொடர் என்ன? குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை உயர் பதவியில் உட்கார வைத்து அலங்கரிக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது? இந்தக் கேள்விகள் அர்த்தம் பொதிந்தவை.

இந்திரா தனது வீட்டு வளாகத்தில் உள்ள அலுவலகம் வந்தபோது, வழக்கமாக அணியும் குண்டு துளைக்காத கவசத்தை சம்பவம் நடந்த அன்று அணியாமல் வந்தார். அந்த செய்தி 'அரண்மனைக்குள்' இருந்தவர்களால் இந்திரா பாதுகாவலர்களில் ஒருவரான பென்சிங் என்பவருக்கு தரப்பட்டதால், பாதுகாவலர் வயிற்றைக் குறி பார்த்து சுட்டார் என்று கூறியது. தாக்கர்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஆணையம்! இந்திராவை சுட்ட அந்தப் பாதுகாவலரை, காவலாளிகள் உயிருடன் பிடிக்காமல், உடனே சுட்டுக் கொன்று விட்டனர். உண்மைகள் மூடி மறைக்கப்பட்டு விட்டன. இந்திரா கொலையில் பொய்யாக வழக்கு தொடரப்பட்டு 5 ஆண்டு காலம், சிறையில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு பிறகு அரசாலே வழக்கை திரும்பப் பெறப்பட்டவர் கிம்ரஞ்சித் கிங் மான். பென்சிங்கை சுட்டுக் கொன்றது ஏன் என்ற கேள்வியை எழுப்பிய அவர், இந்திரா கொலையில் இத்தாலி நாட்டின் தொடர்பு இருக்கிறது. அப்பாவிகள் தூக்கிலிடப்பட்டு விட்டனர். எனவே மறுவிசாரணை நடத்தப்பட வேண்டும் என்றார். ('தி இந்து 1.4.1990)

பெற்ற குழந்தையையே கழுத்தை நெறிப்பதுபோல் ராஜீவ் – இந்திரா கொலையில் காங்கிரஸ் ஆட்சியே விசாரணை ஆணையங்களை நியமித்து விட்டு, அவர்களோ அந்த ஆணையத்தை முடக்க முயற்சித்தார்கள். உண்மைகளை வெளிவராமல் தடுத்தார்கள். காங்கிரஸ் ஆட்சியின் இந்த கபட நாடகங்களை மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டியது அவசியமாகிறது!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## நிறைவுரையாக.....

இந்தியாவின் கட்டுப்பாட்டின் கீழ் இலங்கை அரசை நிலைநிறுத்திக் கொள்வதே இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையாக இருந்து வருகிறது. 1971 ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா ஆட்சிக்கு எதிராக ஜனதா விமுக்தி பெரமுள (ஜே.வி.பி.) என்ற சிங்கள இடதுசாரி இயக்கம் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கி, காவல் நிலையங்களைக் கைப்பற்றிய போது, இலங்கை அரசைக் காப்பாற்ற அன்றைய பிரதமர் இந்திரா காந்தி, இந்திய கப்பல் படையையும், ராணுவத்தையும் அனுப்பி வைத்தார். உள்நாட்டுப் புரட்சியை இந்திய ராணுவம் அடக்கியது. அப்போது 15,000 சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

1983 ஆம் ஆண்டு ஈழ விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்தபோது மீண்டும் இந்தியா தலையிட்டது. இந்தியத் தலையீட்டின் நோக்கம் ஈழ விடுதலையைப் பெற்றுத் தருவது அல்ல. ஒன்றுபட்ட இலங்கைத் தீவுக்குள் ஒரு சமரசத் தீர்வை உருவாக்கி இலங்கை அரசை, தமது கட்டுப்பாட்டின் கீழ் உறுதிப்படுத்திக் கொள்வதே நோக்கம். இந்த நோக்கத்துக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் பயன்படாது என்று கருதிய காரணத்தால்தான், போராளிக் குழுக்களுக்கு ராணுவப் பயிற்சி தர முன் வந்த இந்திய உளவுத் துறை, விடுதலைப் புலிகள் அமைப்பை மட்டும் தனிமைப்படுத்தியது.

ராஜீவ்—ஜெயவர்த்தனாவுடன் ஒப்பந்தத்தை உருவாக்கிக் கொண்டு, அதைத் தமிழர்கள் மீது திணித்து தமிழர்களுக்கு உண்மையான உரிமைகளை வழங்க மறுக்க ஒப்பந்தத்தை எதிர்த்த ஒரே அமைப்பு விடுதலைப் புலிகள் தான். ஆனாலும், நிர்ப்பந்தம் அரசியல் சூழல் காரணமாக விடுதலைப் புலிகள், ஒப்பந்தத்தை ஏற்று ஆயுதங்களை ஒப்படைக்க முன் வந்தனர். அந்தக் கட்டத்திலும் விடுதலைப்புலிகளைக் தனிமைப்படுத்தியது இந்திய அரசு. புலிகளிடம், ஆயுதங்களை கீழே போடச் சொல்லிக் கொண்டே மறுபக்கத்தில் போட்டிக் குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்கியது, உளவுத் துறை; விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கதையை முடித்துவிடுவதற்கு அதுவே நல்ல

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சந்தர்ப்பம் என்று திட்டமிட்டார்கள். ஆனால் உளவுத் துறையின் சூழ்ச்சி தோற்றது. இந்திய ராணுவம் தான்
தோல்வி முகத்துடன் வெளியேறியது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்களோடு இணைந்து நடத்திய விடுதலைப் போராட்டம் முன்னேறிக் கொண்டே இருந்தது. நார்வே நாடு சமரசம் பேச முன் வந்தபோது, போரின் வெற்றி விளிம்பில் நின்றுதான், விடுதலைப்புலிகள் இயக்கம் பேச்சு வார்த்தைக்கு முன் வந்தது. போர் நிறுத்தத்திற்கான சர்வதேச உடன்பாடு தமிழ் ஈழத்தின் பிரதேசத்தை முதன் முதலாக ஆவணமாக அங்கீகரித்தது. அதன் அதிகாரம் விடுதலைப்புலிகளிடம் தொடர்ந்தது; பேச்சு வார்த்தை முன்னேற்றப் பாதையில் நடைபோடுவதை சகிக்க முடியாத இந்தியப் பார்ப்பன ஆட்சி குழி பறிப்பு வேலைகளை உளவு நிறுவனம் வழியாகத் தொடங்கியது. போர் நிறுத்த ஒப்பந்தங்களை மீறுவதற்கு இலங்கை ஆட்சியை ஊக்குவித்தது. அதற்கான திரைமறைவு உதவிகளை இந்திய உளவுத் துறை வழங்கியது. விடுதலைப்புலிகள் இயக்கத்தில் ஏற்கனவே மாத்தையா எனும் தளபதியை வைத்து கூறுபோட முயன்ற உளவுத் துறை, இம்முறை கருணாவைப் பிடித்தது. பேச்சு வார்த்தைகளில் விடுதலைப் புலிகள் பிரதிநிதியாக தொடர்ந்து பங்கேற்ற கருணா, உளவுத் துறையின் வலையில் வீழ்ந்தார். இந்திய இராணுவ உதவி இராணுவ ஆலோசனைகளோடு விடுதலைப் புலிகளுக்கும் மக்களுக்கும் எதிரான போரைத் திணித்தார்கள். உலக வரலாற்றில் எங்கும் நடத்திடாத முள்ளி வாய்க்கால் கொடும் துயரம்' இனப்படுகொலைகளோடு முடிவடைந்தது. இந்திய துரோகங்களை எதிர்கொண்டு மக்கள் பேராதரவுடன் களமாடிய விடுதலைப் புலிகள் கடைசியாக இந்திய துரோகத்தின் வியூகத்தில், தோல்வியை சந்திக்க வேண்டியிருந்தது.

1983 ஆம் ஆண்டிலிருந்து விடுதலைப் புலிகளை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தி விடுதலைப் போராட்டத்தை சீர்குலைக்க இந்திய பார்ப்பனிய உளவுத்துறை நடத்திய சதிகளை 'ஈழப் பிரச்சினையில் உளவு நிறுவனங்களின் சதி' என்ற நான் எழுதிய நூல் ஓரளவு வெளிக்கொண்டு வந்தது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஆனால், தமிழ் ஈழத்தில் நிகழ்ந்த அரசியல் படுகொலைகள் பலவற்றுக்கும், விடுதலைப் புலிகளே காரணம் என்ற கருத்தை, உளவுத் துறையும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது காழ்ப்புணர்வு கொண்டவர்களும் பரப்பி வருகிறார்கள். ராஜிவ் சர்மா எழுதிய விடுதலைப் புலிகளுக்கு அப்பால்' என்ற நூலும், இதே அவதூறுகளையும் பழியையும் சுமத்தியது. இந்தக் குற்றச்சாட்டுகளை உரிய தரவுகளுடன் இந்த நூல் மறுத்துள்ளது. விடுதலைப் புலிகள் மீதான இத்தகைய அவதூறு பழிகளுக்கு மறுப்பாக வெளிவரும், முதல் நூல் இதுவாகவே இருக்கும் என்று கருதுகிறேன். இப்பணியை ஆற்றுவதில் பெரியார் திராவிடர் கழகம் பெருமையடைகிறது.

தமிழகத்தில் கட்சிகளைக் கடந்த, தமிழின இளைஞர்களின் பேரெழுச்சி உருவாகி வரும் சூழலில், இந்த நூல் — களங்கப்படுத்துவோருக்கும், விடுதலைப் புலிகள் மீது சேறுவாரி இறைப்போருக்கும் பதிலாக அமையும் என்றே நம்புகிறேன்; 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வார இதழில் 13 வாரங்கள் நான் எழுதிய இக் கட்டுரைத் தொடரே, இந்த நூல்; தொடர் வெளிவந்தபோது படித்து கருத்துகளைப் பகிர்ந்த கொண்ட தோழர்களுக்கும், இணைய தளங்களில், இன உடனுக்குடன் உலகம் முழுதும் ஏற்றி பரவச் செய்த கீற்று இணையதள தோழர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive